விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 15 வியாழக்கிழமை (29.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 041

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# மைத்திரிபால தலைமையில் ஆட்சியை ஏற்படுத்துவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

**மைத்திரியின் தலைமையில் சுதந்திரக் கட்சியின் ஆட்சியை ஏற்படுத்துவோம் என எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா கூறினார். இம்முறை எதிர்க்கட்சித் தலைவர் பதவியானது கலப்பான உணர்வுகளுடன் புதிய கலாசாரத்தை நோக்கி செல்ல வேண்டிய பதவி. இதனடிப்படையில் செயற்படும் போது பல்வேறு விமர்சனங்களை எதிர்கொள்ள நேரிடும் எனவும் அவர் கூறியுள்ளார்.**

கொழும்பு சேர் மார்க்ஸ் பெர்ணாந்து மாவத்தையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தை மீண்டும் திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும், தெரிவிக்கையில்,

நான் அரசியல் பாத்திரமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூலமே உருவாகினேன். எனது உடலில் ஓடுவது அந்த இரத்தம். இதனால், கட்சியை பாதுகாப்பதற்காகவே நான் முன்னுரிமை வழங்கு வேன. 24 ஆம் பக்கம் பார்க்க....

## பிரதம நீதியரசராவார் கே.ஸ்ரீபவன் ?

(கொழும்பு)

இலங்கையின் 45 வது பிரதம நீதியரசராக உயர்நீதிமன்ற நீதியரசர் கே.ஸ்ரீபவன் நியமிக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் சட்டவிரோத நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மூலம் பதவியில் இருந்து 24 ஆம் பக்கம் பார்க்க....

## பதவியேற்றார் ஷிராணி !



(கொழும்பு)

பாராளுமன்றத்தின் கண்டனத் தீர்மானம் மூலம் பதவிநீக்கம் செய்யப்பட்ட முன் 24 ஆம் பக்கம் பார்க்க....

## பிரிட்டன் அமைச்சர் இலங்கை வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு இன்று வருகை தரும் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் பல்வேறு இடங்களிற்கும் சென்று வடக்கு முதலமைச்சர் உள்ளிட்ட பல தரப் பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாட இருக்கின்ற வேளையில் வலிவடக்கு முகாம் மக்களையும் சென்று பார்வையிடவுள்ளார்.

மூன்று நாள் விஜயமாக நேற்று இலங்கை வந்துள்ள வெளிவிவகார அமைச்சர் ஹ்யூகோ ஸ்வைர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். நேற்று கொழும்பிலிருந்து விமானத்தில் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்து தொடர்ந்து இங்கு பல சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார்.

இதன் போது வடக்கு மாகாணத்தின் நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதுடன் இங்குள்ள மக்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் என்பன தொடர்பிலும் கேட்டறிந்து கொள்ளவுள்ளார்.

இதற்கமைய வடக்கு மாகாண முதலமைச்சர் 24 ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த இ.போ.சவுக்கு கடனாளி !

(கொழும்பு)


ஜனாதிபதி தேர்தலின் போது, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் பயன்படுத்தப்பட்டன.

இதற்காக இலங்கை போக்குவரத்து சபைக்கு, இன்னும் 1,425 இலட்சம் ரூபாய் வழங்கவேண்டியுள்ளது என உள்ளக போக்கு வரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்த மான பஸ்களை ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியமை காரணமாக 1,925 இலட்சம் ரூபாய் செலவு ஏற்பட்டது.

அதில் 500 இலட்சம் ரூபாய் இலங்கை போக்குவரத்து சபைக்கு வழங்கப்பட்டதுடன் எஞ்சிய 1,425 இலட்சம் ரூபாய் இன்னும் வழங்கப்படவில்லை.

வழங்கப்பட்ட 500 இலட்சம் ரூபாயில் 250 இலட்சம் ரூபாய் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான செயலாளர் பதவி வகித்த ஒருவரால் வழங்கப்பட்டதாகவும் மிகுதி 250 இலட்சம் ரூபாய், காமினி செனரத் 24 ஆம் பக்கம் பார்க்க....

## மொஹான் பீரிஸ் வீட்டின் மீது தாக்குதல் !



(கொழும்பு)

இனம் தெரியாத குழுவொன்று நேற்றுமுன்தினம் இரவு பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் வீட்டை தாக்கி அச்சுறுத 24 ஆம் பக்கம் பார்க்க....

## நொதேர்ன் நிறுவனத்தின் மேன்முறையீடு நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)


நொர்தேன் பவர் நிறுவனம் தொடர்பில் மல்லாகம் நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பினை இடைநிறுத்தக் கோரி மேற்படி நிறுவனத்தினால் யாழ் மேல் நீதிமன்றில் செய்யப்பட்ட மேன்முறையீட்டினை மேன் நீதிமன்ற நீதிபதி நிராகரித்துள்ளார்.

சுன்னாகத்தில் அமைந்துள்ள நொர்தேன் பவர் நிறுவனத்தின் மின் பிறப்பாக்கியிலிருந்து வெளியேறும் கழிவு ஒயில் நிலத்தின் கீழ் கசிவடைந்து சுன்னாகம் உட்பட அதனை அண்மித்த பல பிரதேசங்களிலும் உள்ள கிணறுகளில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

கடந்த வருட முற்பகுதியில் பாதிகப்பட்ட மக்கள் சார்பாக மல்லாகம் நீதிமன்றில் நொதேரன் பவர் நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம் பெற்று வந்தது.

இந்நிலையில் பாதிப்புக்கள் மேலும் அதிகரித்து வந்த நிலையில் இதற்கு 24 ஆம் பக்கம் பார்க்க....

## பொன்சேகா தனித்துப் போட்டி



(கொழும்பு)

பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் தனித்து போட்டியிடவுள்ளதாக ஜன 24 ஆம் பக்கம் பார்க்க....



பிரதம நீதியரசராக பதவியேற்பதற்காக உயர் நீதிமன்ற வளாகத்தில் ஷிராணி ...



காரைநகர் மணற்காடு
முத்துமாரி அம்மன் ஆலயம்
கும்பாபிஷேகப் பெருவிழா
02.02.2015 திங்கள் மு.ப. 9.36 - 10.45
எண்ணெய்க் காப்பு : 31.01.2015
சனி காலை 8.00 மணி முதல்
01.02.2015 ஞாயிறு மாலை 03.00 மணி வரை
ஆலய திருப்பணிச் சபையினர்
(C-3950)

## பசிலின் கணக்கு விசேட ஆய்வு

(கொழும்பு) முன்னாள் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ மற்றும் விமல் வீரவன்ச ஆகியோரின் அமைச்சுப் பொறுப்புகள் தொடர்பில் சர்வதேச கணக்காய்வு நிறுவனங்கள் மூலம் ஆராயப்படவுள்ளன. பொருளாதார மற்றும் வீடமைப்பு அமைச்சுகளை இந்த இருவரும் கொண்டிருந்தனர். இதன்படி எம்ஸ்ட் அன்ட் யங் மற்றும் பிரைஸ் வோட்டா கௌஸ் கூப்பர்ஸ் ஆகிய கணக்காய்வு நிறுவனங்கள் இந்த இரண்டு அமைச்சுக்களின் கணக்குளை ஆராயவுள்ளன.

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் பணிப்பின் பேரில் இந்தக்கணக்காய்வுகள் நடத்தப்பட்டன. இரண்டு அமைச்சுக்களில் பாரிய ஊழல்கள் இடம் பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தியே இந்தக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ விசேட செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள மாவீரர், முன்னாள் போராளிகள், தமிழ் அரசியல் கைதிகள் குடும்பங்களுக்கு உதவும் விசேட செயற்றிட்டத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் மேற்படி வகைக்குட்டபட்டவர்களின் குடும்பங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு கோரப்படுகின்றது.

இப் பதிவுகளை கிராம சேவையாளரின் அத்தாட்சியுடன் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களினூடாக விண்ணப்பிக்குமாறும் வடக்கு மாகாண சபையின் மீன்பிடி மற்றும் வர்த்தக வாணிப கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ்.நகரிலுள்ள ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் அந்தச் சந்திப்பில் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழினத்துக்காக தம் உயிரை நீத்து எம் உயிர் காத்த மாவீரர்கள், போராளிகள் என்றும் மறக்க முடியாதவர்கள். இவர்களின் தியாகங்களின் ஊடாகத் தான் நாம் தற்போது இந்த நிலையில் என்றாலும் உள்ளோம். எமது விடுதலைக்காக தம்மையே அர்ப்பணித்தவர்கள் என்றுமே எங்கள் மனங்களில் உயர்ந்த நிலையிலையே இருக்கின்றனர்.

ஆகவே மாவீரர், போராளிகள் அரசியல் கைதி களின் குடும்பங்கள் வடக்கு மாகாணத்திலுள்ள 1145 கிராம அபிவிருத்திச் சங்கங்கள், 1157 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களில் மேற்படி ஒவ்வொரு தரப்பினர்களுக்கும் தனித்தனியே இருக்கின்ற விண்ணப்பப் படிவங்களைப் பெற்று தமது கல்வித் தகைமை விசேட தகைமை உள்ளிட்ட இருக்கின்ற விசேட தகைமைகளைக் குறிப்பிட்டு கிராம சேவையாளரின் அல்லது கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் உறுதிப்படுத்தலுடன் அந்தந்த மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியுவற்றினூடாக விண்ணப்பிக்க முடியும்.

இதனடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ள இத் திட்டங்கள் மேற்படி 3 பிரிவினர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட உள்ளதோடு அவயவங்களை இழந்தவர்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட உள்ளது. ஆகவே இதற்கு உள்நாட்டிலுள்ளவர்கள் மற்றும் வெளிநாட்டில் உள்ளவர்கள் என அனைத்துத் தரப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அமைச்சர் டெனீஸ்வரன் மேலும் தெரிவித்தார். (எ-4)

# பல்கலைக்கழக மோசடிகள் குறித்து விசாரிக்க விசேட குழு நியமனம்

## பிரதமர் ரணில் உறுதி

(கொழும்பு)

நாட்டிலுள்ள பல பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடி, முறை கேடுகள் குறித்து ஆராய்வதற்காக விசேட விசாரணைக் குழுவொன்று அமைக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றுள்ள பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பில் அனைத்துப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் பிரதமரை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்திப்பில் பிரதமருடன் உயர் கல்வி, நெடுஞ்சாலைகள், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் கபீர் ஹாசிம், கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இதில் தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரிய ஊழல், மோசடிகள் குறித்து விபரித்ததுடன் அது தொடர்பிலான ஆதாரங்கள் அடங்கிய முழுமையான அறிக்கையொன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பல்கலைக் கழகம் உட்பட நாட்டிலுள்ள பல பல்கலைக்கழகங்களில் பாரிய ஊழல் மோசடிகள் இடம்பெற்று வந்துள்ள நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து அவை தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சம்மந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறித்த பல்கலைக் கழகங்களின் கல்வி மற்றும் கல்விசாரா தொழிற்சங்கங்கள் தீவிர முயற்சிகளில் இறங்கியுள்ளன.

கடந்த காலங்களில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளைகளில் தம்மால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடரபில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முன்வரவில்லை என தொழிற் சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த ஊழல் மோசடிகளுடன் குறித்த பல்கலைக் கழகங்களின் உபவேந்தர்களுக்கும் உயர் கல்வி அமைச்சருக்கும் நேரடி தொடர்புகள் இருந்து வந்தமையினாலேயே தமது முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாமல் அவை கிடப்பில் போடப்பட்டிருந்தன என்றும் தொழிற் சங்கங்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றன. (எ-11)

# நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாக சபை தெரிவும் கடந்த 24-ம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது புதிய நிர்வாக சபைக்கு தலைவராக க.ம.இராஜேந்திரன், செயலாளராக செ.தனுஜன், பொருளாளராக கு.மதுசுதன், உப தலைவராக க.வேலழகன், உப செயலாளராக சி.பகலவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் இக் கூட்டத்தின் போதும் புதிய விளையாட்டுக் கழகம் ஒன்றும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. (எ-11)

# ஹாவாய் ஆதீன முதல்வர் யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவிலுள்ள ஹாவாய் சைவ ஆதீன முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் ஓர் ஆன்மீக யாத்திரையை மேற்கொண்டு நேற்று மாலை 5.00 மணிக்கு கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமணிய கோட்டத்தை வந்தடைந்தார். சுவாமிகள் ஐந்து தினங்கள் இங்கு தங்கியிருந்து யாழ்ப்பாணத்தின் பல புனித தலங்களையும் சென்று தரிசிக்கவுள்ளார். (எ-11)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 021 567 1532**



**SPEED**

PURIFIED DRINKING WATER

சுத்தமான குடி தண்ணீர்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)

விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

ஸ்ரீமுருகன்

தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

021 222 5392

(C-8284) (சி-9949)



**கட்டிங் பேப்பர் விற்பனைக்கு**

மாணவர்கள் பயிற்சிகள் செய்யக்கூடிய தான கட்டிங் பேப்பர் விற்பனைக்கு உண்டு. வலம்புரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

**பழைய மாணவர் சங்கம்**

**யாழ்ப்பாணம்**

**வருடாந்த பொதுக் கூட்டம்**

காலம்: 01.02.2015 ஞாயிற்றுக்கிழமை

காலை 9 மணி

இடம்: கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

கல்லூரியின் அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கு.கௌதமன்

செயலாளர்

(C-9952



## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications upto **16.02.2015** from qualified persons for the under mentioned posts.

PHYSICAL EDUCATION UNIT

- Visiting Instructor for the following fields: Badminton-Men/ Chess-Men/ Chess-Women/ Karate/ Rugby/ Tennis

UNIT OF ALLIED HEALTH SCIENCES, FACULTY OF MEDICINE

Temporary Demonstrator in Nursing

| POST | SALARY |
|---|---|
| Visiting Instructor | Rs.750/- per hour |
| Temporary Demonstrator | Rs.21, 370/- per month |

Applications for the above posts shall be sent to the Deputy Registrar / Academic Establishment, University of Jaffna, Thirunelvely, Jaffna.

Applications forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, either in person or by post, on a payment of Rs 100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self addressed stamped envelope 23X10 cm in size.

Those who wish to apply for more than one post should apply in separate forms.

Applicants from University System/ Government Departments/ Corporations and Statuary Board Should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.
28.01.2015

(C-9951)



**மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்.**



**திருமதி மீரா அருள்நேசன்**

உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் பதினைந்து வருடங்கள் தமிழ்த் துறைக்கு அரும் பணியாற்றி 2015.01.28 அன்று தனது 60ஆவது அகவையைப் பூர்த்தி செய்து ஓய்வுபெறும் **திருமதி மீரா அருள்நேசன்** அவர்களின் தமிழ்பணி மேலும் சிறக்கவும், அவர் தம் ஓய்வுக்காலத்தை மகிழ்வுடன் கழிக்கவும் வாழ்த்தி நிற்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், கல்வி அபிவிருத்திப் பிரிவு, வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்.

(9278)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பருத்தித்துறைக்கு பேருந்து சேவை பெப்ரவரி முதலாம் திகதி முதல் ஆரம்பிப்பு

பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணத்துக்குமான 764 பேருந்துச்சேவை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து தினமும் காலை 6.30, 10.35, பிற்பகல் 3.05 இற்கு புறப்படும் பேருந்துகள் துன்னாலை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், புன்னாலைக்கட்டுவன் ஊடாக யாழ்ப்பாணம் வந்தடையும். யாழ்ப்பாணத்திலிருந்து காலை 8.30 இற்கும் பி.ப.1.15 இற்கும் பேருந்துகள் புறப் படவுள்ளன.

மேற்படி பேருந்து சேவைகள் வெள்ளிக்கிழமைகளில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில் ஊடாகவும் ஞாயிற்றுக்கிழமைகளில் வல்லிபுரம் கோயில் ஊடாகவும் இடம்பெறும் என இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ-5)

## திறப்புக் கோர்வை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிருஷ்ணன் கோவிலுக்கருகில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திறப்புக் கோர்வையொன்று கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


மேற்படி திறப்புக் கோர்வையை அடையாளம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். (இ)

# இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பியனுப்பி விட வேண்டாம்

## தமிழக முதல்வர் ஓ.பி. பிரதமருக்கு கடிதம்

(சென்னை)

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவது குறித்த மத்திய அரசின் கொள்கையை கைவிட வேண்டும் என தமிழக முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.



தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது தொடர்பாக இலங்கை - இந்திய வெளியுறவு அமைச்சக ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ள தமிழக அரசு சார்பில் மூத்த அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு தமிழக அரசுக்கு கடிதம் எழுதியிருந்தது.

அக்கடிதத்தில், இலங்கைக்கு திருப்பி அனுப்புவது தொடர்பான பேச்சுவார்த்தையை இத்தருணத்தில் மேற்கொள்வது சரியானதாக இருக்காது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்னும் நிலைமை சீரடையவில்லை. இத்தகைய சூழலில் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது தொடர்பான பேச்சுவார்த்தையை ஒத்திவைப்பதே சரியானதாகும்.

இலங்கையில் அண்மைக்காலமாக நிலவும் அரசியல் மாற்றம் சில நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், தமிழர் பகுதியில் இன்னும் இலங்கை இராணுவத்தினர் இருப்பது தயக்கத்தை ஏற்படுத்துகிறது.

இலங்கையில் முகாம்களில் வாழும் தமிழர்கள் வாழ்வில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்ற இலங்கையின் புதிய அரசின் வாக்குறுதி செயற்பாட்டுக்கு வரும்போது இங்கிருக்கும் தமிழ் அகதிகளுக்கும் தாயகம் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் உதயமாகும் என்று அந்தக் கடிதத்தில் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## உழவு இயந்திர விபத்து சாரதி பொலிஸில் சரண்

பருத்தித்துறை வல்லிபுரக்குறிச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உழவு இயந்திர விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியான சம்பவம் தொடர்பாக உழவு இயந்திரத்தின் சாரதியை இரண்டு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

விபத்துச் சம்பவத்தையடுத்து உழவு இயந்திர உரிமையாளரை பொலிஸார் கைது செய்திருந்தனர். இந்நிலையில் உழவு இயந்திர உரிமையாளர்களின் சகோதரன் தானே விபத்துச் சம்பவத்துக்குக் காரணமெனக் கூறி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

இதனையடுத்து பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட குறித்த நபரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் உழவு இயந்திர உரிமையாளர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-60)

## மெய்வல்லுநர் போட்டி

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை. வெள்ளிக்கிழமை பி.ப ஒருமணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் ப.பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித்திணைக்களத்தின் கல்வி முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் கே.சத்தியபாலன், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேசக் கல்வி அதிகாரி ச.சிவானந்தராஜா, கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் செல்வி சுவேதா வேலாயுதபிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி ஆராதனை அழைப்பும்



தோற்றம் 19 11 1997 — மறைவு 31 12 2014

கடந்த 31.12.2014 அன்று ஆண்டவரடி சேர்ந்த எமது இல்லச் செல்வமாகிய

**செல்வன் சண்முகராசா கோகுலன் (யோசுவா)**

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு நாளை (30.01.2015) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் நன்றி ஆராதனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும். அன்றைய மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு - இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

இல - 171, கல்லூரி வீதி,
ஆத்தியடி, பருத்தித்துறை.

மு.சண்முகராசா (சண்முகம்)
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



ஊடகத்துறை கலாபூஷணம் சாமஸ்ரீ தேச ஜோதி

**ஆ.நா.சு.திருச்செல்வம் (ஜே.பி)**

(ஸ்ரீலங்கா நூலக சேவை இளைப்பாறிய உள்ளூராட்சி நூலகர்), பருத்தித்துறை

பருத்தித்துறை பிரதேச செயலாளரின் சிபார்சுடன் யாழ்.அரசஅதிபரின் அனுசரையுடன் கலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட ஊடகத்துறைக்கான கலாபூசணம் விருது பெற்றுள்ள பல் துறை சாதனையாளர் ஆ.நா.சு திருச்செல்வம் அவர்கள் மேலும் பல சாதனைகள் புரிய சந்நிதி முருகன் அருள் பாலிக்க வேண்டிப் பிரார்த்திப்பதுடன் அவரை பாராட்டி வாழ்துகின்றேன்.

(C-9940)

தி.இராஜசிங்கம்
தொண்டைமானாறு

## இராசி பலன்

29.01.2015
தை 15, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை : 6.30 மணிக்கு
தசமி பின் இரவு 1.28 மணிவரை
கார்த்திகை பிற்பகல் 3.38 மணிவரை
இராகுகாலம் 2.06 - 3.36 மணிவரை
சுபநேரம் 8.06 - 9.36 மணிவரை

வளவன்

**மேடம்:** விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரும் நாள். பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள். யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். புதிய திருப்பங்கள் ஏற்படும்நாள்

**இடபம்:** உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள். பணம் பற்றிய கவலை தீரும் நாள். வழிபாடுகளில் நம்பிக்கை கூடும். கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்:** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பல முறை அலைய வேண்டிய சூழ்நிலை உருவாகும். அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம். தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம்.

**கடகம்:** வருமானம் அதிகரிக்கும் நாள். மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலை யொன்றினை நீங்கள் எளிதில் செய்து முடிப்பீர்கள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் நாள். போசன சுகமுண்டு.

**சிம்மம்:** சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும்நாள். கொள்கைகளில் பிடிப்போடு செயற்படுவீர்கள். வீட்டுப் பணிகளில் தீவிரம் காட்டுவீர்கள். தூரதேச செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** மாற்றுக்கருத்துடையோர் மனமாறுவர். தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள் பயணங்களால் பலன் உண்டு. அதிகம் செலவாகும் என நினைத்திருந்த காரியம் ஒன்று நல்லபடியாக முடியலாம்.

**துலாம்:** கவலைகள் தீர கணபதியை வழிபடவேண்டிய நாள். சில பிரச்சினைகளை கண்டும் காணாமலிருப்பது நல்லது. சேமிப்புக் கரையும் சூழ்நிலை உருவாகும். வேலைச் சுமை கூடும்.

**விருச்சிகம்:** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள். உடன் பிறப்புக்கள் உறவினர்களும் உதவிக் கரம் நீட்டுவர். தெய்வ சிந்தனைகள் மேலோங்கும் நாள். போசன சுகமுண்டு.

**தனுசு:** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும்நாள். புகழ் மிக்கவர்களில் சந்திப்பு இடம்பெறலாம். அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள் செய்தொழிலால் சிறப்புக்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள். போட்டியாக செயற்பட்டவர்கள் மனம்மாறுவர். சுப செய்திகள் வந்து சேரும் நாள். வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** நீங்கள் தேடிச்சென்று சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடிவரலாம். தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு. வளர்ச்சிப்பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**மீனம்:** பெரியமனிதர்களின் சந்திப் பால் பரவசம் அடைவீர்கள். முயற்சியில் எதிர்பார்த்த சில திருப்பங்களைக் காணலாம். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும் பயணங்களால் பலன் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 135

# மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!


ஸ்வாமிஜி, பெற்றோர்கள், குழந்தைகள் போன்ற மற்ற உறவுகளில்கூட நாங்கள் அமைதியின்மையை உணருகிறோம்... ஆம், எந்த உறவிலும் எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. எதிர்பார்ப்புகள் இல்லாத எந்த உறவுமே இருப்பதாக நான் நினைக்கவில்லை.

பெற்றோர்கள் குழந்தைகளைச் செதுக்க முயற்சி செய்கிறார்கள்; குழந்தைகளும் அதையே பெற்றோர்களின் மீது முயல்கிறார்கள். பெற்றோர்கள் தங்கள் நிறைவேறாத ஆசைகளை குழந்தைகளின் வாயிலாக நிறைவேற்றிக் கொள்ள முயற்சி செய்கிறார்கள்.

நீங்கள் அனைத்து விடயங்களையும் ஆழமாக ஆராய்ந்து பார்த்தீர்களானால் நான் சொல்வது உண்மை என்பதைப் புரிந்துகொள்வீர்கள். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மருத்துவராகவும் பொறியாளராகவும் வேண்டுமென்று கனவு காண்கிறார்கள். குழந்தை என்னவாக விரும்புகிறது என்று தெரிந்து கொண்டு அதை நிறைவேற்றுவதைப் பற்றி ஏன் கனவு காணக்கூடாது? அது குழந்தைக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

என்றைக்கு ஒரு குழந்தை பதிலுக்கு பதில் பேச ஆரம்பிக்கிறதோ, அன்றைக்கு அது வளர்ந்துவிட்டது என்று பொருள். அவர்களை மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். அவனுடன் சிறிதுநேரம் செலவழியுங்கள். அவனுடன் பேசுங்கள். அவனுக்கு நல்ல நண்பனாயிருந்து வாழ்க்கையில் அவன் உண்மையிலேயே என்ன செய்ய விரும்புகிறான் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

ஆழமான அன்புடனும் நம்பிக்கையுடனும் அவனுக்கு வழிகாட்டுங்கள். பிறகு அவனது குறிக்கோளை உங்களது நிஜமாக்கிக் கொண்டு அவன் அதை அடைய உதவி செய்யுங்கள்.



பல குழந்தைகள் என்னிடம் சொல்கிறார்கள், என் தந்தை நான் ஒரு டாக்டர் ஆக வேண்டுமென்று விரும்புகிறார் அல்லது என் தந்தை நான் வக்கீல் ஆக வேண்டுமென்று விரும்புகிறார் என்று.

குழந்தையால் தீர்மானிக்க முடியாத நிலையில் அவன் உங்களிடம் என்ன செய்வதென்று கேட்கும் நிலையில் அவனுடைய திறமைகளைப் பற்றிய உங்கள் கணிப்பின் அடிப்படையில் நீங்கள் அவனால் என்ன செய்ய முடியும் என்பதைக் கூறலாம்.

நீங்கள் எப்பொழுதும் ஆலோசனை மட்டுமே கூறலாம். எதையும் அவன் தொண்டைக்குள் திணிக்காதீர்கள். மேலும் இதைச் செய்வதற்கு அவனுக்கு நீங்கள் சுதந்திரத்தையும் பக்குவத்தையும் அளித்திருப்பதைப் புரிய வையுங்கள். அதனால் பின்னால் யாரையும் குறைகூற முடியாது என்பதையும் தெளிவாக்குங்கள். இதை அவன் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

பாருங்கள், நாம் எப்பொழுதும் கையில் உளியை வைத்துக் கொண்டு அலைந்து கொண்டு நமது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் முன்பின் தெரியாதவர்களையும் விட்டு வைக்காமல் அனைவரையும் நமது சொந்த கற்பனைப்படி செதுக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அவர்களும் பதிலுக்கு அவர்களது உளியைக் கொண்டு உங்கள் மீது முயற்சி செய்வார்கள். என்ன ஒரு வன்முறை!

உங்களுக்கு இன்றைய வீட்டுப்பாடம், ஒரு முழுமையான கணவன், ஒரு முழுமையான மனைவி, ஒரு முழுமையான தந்தை, ஒரு முழுமையான தாய், ஒரு முழுமையான குழந்தை, ஒரு முழுமையான நண்பன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றிய உங்கள் கருத்துக்களை எழுதுங்கள். உங்களுக்குப் பொருந்தி வருகிற ஏதேனும் ஐந்து உறவுமுறைகளைத் தேர்ந்தெடுத்து இதை எழுதுங்கள். இதை நேர்மையாகச் செய்யவும். உங்களுடைய ஆழந்த விழிப்பற்ற நிலையில் உங்கள் எல்லாக்கருத்துக்களையுமே பிரபலமான ஊடகங்களில் இருந்து எடுத்திருப்பதை நீங்கள் காணலாம். இதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

நீங்கள் ஒரு தொலைக் காட்சித் தொடரைப் பார்க்கிறீர்கள். அதில் ஒரு குறிப்பிட்ட கதாபாத்திரத்தை உங்களுககுப் பிடிக்க ஆரம்பிக்கிறது. அந்தக் கதாபாத்திரம் உங்களைப் பொறுத்தவரையில் ஒரு திடமான நிஜமாகி விடுகிறது. நீங்கள் விழிப்பின்று நிஜவாழ்வில் உங்களுடன் தொடர்பு கொண்டிருக்கும் அனைவரிடமும் அதேபோன்ற ஒரு குணத்தை எதிர்பார்க்க ஆரம்பித்துவிடுகிறீர்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

## காண்பவர்களை கவர்ந்து இழுக்கும் சால்ட் ரெஸ்டாரண்ட்....

ஈரான் நாட்டில் ஷிராஸ் என்னும் பகுதியில் சால்ட் ரெஸ்டாரண்ட் என்னும் உணவகம் ஒன்று இருக்கிறது. உணவகத்தின் சுவர், பார், மேஜை, நாற்காலி என்று எல்லாமே முழுக்க முழுக்க பாறை உப்பால் மட்டுமே உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதே இந்த உணவகத்தின் சிறப்பம்சம் ஆகும். இந்த உணவகத்தை வடிவமைத்த எமிட்டாஸ் டிசைனிங் க்ரூப் என்ற குழுவினர் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்ப டுத்தாத வகையில் கட்டடங்களைக் கட்டுவதில் நிபுணர்கள்.



அவர்கள் அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு கடடடங்களைக் கட்டி வருகிறார்கள். அந்த உணவகத்தின் அருகில் உப்புச் சுராங்கம் இருப்பதால் உப்பிலேயே அந்த கடடடத்தைக் கட்டியுள்ளனர்.

பாறை உப்பிலிருந்து செய்யக்கூடிய இந்தப் பொருள்களை மீண்டும் மீண்டும் மறு உபயோகம் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது. உப்புக்குக் கிருமிகளை அழிக்கும் ஆற்றல இருப்பதால், வெளியில் இருந்து வரும் அசுத்த காற்றை வடிகட்டி, சுத்தமான காற்றை உணவகத்துக்குள் அனுப்புவதாக கூறுகின்றனர். மேலும், உப்பால் உருவாக்கப்பட்ட இந்த வித்தியாசமான உணவகத்தைப் பார்ப்பதற்கே ஆண்டுதோறும் ஏராளமான வெளிநாட்டவர்கள் ஈரான் நாட்டிற்கு படையெடு க்கின்றனர்.

# சமைப்போம் சுவைப்போம்

## புட்டிங் கேக்



**தே.பொருட்கள்:-**

பிரெட் துண்டுகள் - 4

முட்டை - 1

பச்சை வாழைப்பழம்- 1

சர்க்கரை - 4 தேக்கரண்டி

தேன் -2 தேக்கரண்டி

**செய்முறை:-**

முதலில் முட்டை, வாழைப்பழம், சர்க்கரை சேர்த்து மைய அரைத்துக் கொள்ளவும். விருப்பமான சுவையில் பிரெட் துண்டுகள் எடுத்துக் கொள்ளவும். தோசைக்கல்லில் பிரெட் துண்டுகளை போட்டு இரண்டு பக்கமும் வாட்டவும். அடுப்பை குறைந்த தீயில் மட்டுமே வைக்க வேண்டும். இரண்டு பக்கமும் வாட்டிய பிறகு ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு தேக்கரண்டியால் அரைத்த கலவையை பிரெட்டின் மேல் பரப்பவும். இரண்டு பக்கமும் அதைப் பரப்பி வாட்டி எடுக்கவும். உண்ணும்போது தேன் தடவி உண்ணலாம். மிகுந்த சுவையோடு இருக்கும். வாழைப்பழம், முட்டை, தேன் என சத்துகள் நிறைந்த உணவு இது. முயற்சித்துப் பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகளை அமைக்க காணி வழங்கப்படும்

## பெருந்தோட்ட அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொள்வதற்காக காணிகளை வழங்கும் திட்டம் நூறு நாள் வேலைத் திட்டத்திற்குள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பெருந்தோட்டங்களில் தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவிக்கையில். மலையகத்தின் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இன்னமும் லயன் காம்பராக்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

அதேவேளை மலையகத்தின் காலநிலை பூமியின் அமைப்பின் பிரகாரம் தொடர்மாடித் திட்டங்கள் சாதகமாக அமையாது.

எனவே. எமது அமைச்சின் ஊடாக தொழிலாளர்களுக்கு தனி வீடுகளை அமைத்துக் கொள்வதற்கான காணிகள் வழங்கப்படவுள்ளன. இதுதொடர்பாக பெருந்தோட்ட கம்பனி உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 100 நாள் வேலைத் திட்டத்தில் இது உள்ளடக்கப்பட்டுள்ளது. அதேபோன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இது தொடர்பாக மக்களுக்கு உறுதியளிக்கப்பட்டது.

கடந்த அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தில் வீடுகள் அமைப்பதற்காக நிதியொதுக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்ட போதும் எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. புதிய அரசு இது தொடர்பாக நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொண்டு வருகின்றது.

பெருந்தோட்டக் கம்பனிகளுடன் எனது அமைச்சு தற்போது பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது. இதனூடாக தொழிலாளர்களுக்கு காணிகளை பெற்றுக் கொடுத்து வீடுகளை அமைத்துக் கொள்ள உதவி செய்யப்படும்.

அதேவேளை இன்று பெருந்தோட்டங்களில் தேயிலை உற்பத்தி நூற்றுக்கு 30 சதவிகிதம் குறைந்துள்ளது. சிறு தேயிலை தோட்டங்களின் உற்பத்தி நூற்றுக்கு 70 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

எனவே பெருந்தோட்டங்களில் தேயிலை உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பாக அதிக கவனம் செலுத்தவுள்ளோம். இத்தோட்டங்களில் வாழும் மக்களுக்கு காணித்துண்டை வழங்கி அவர்கள் தேயிலை உற்பத்தியை மேற்கொள்வதற்காக ஊக்குவிக்கப்படவுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-5)

# ஜனநாயகம், சுதந்திரம் தப்பிப்பிழைத்துள்ளன

அரச ஊழியர்கள் தேர்தல் காலத்தில் தமது நேர்மையைத் தவற விட்டிருப்பின் நாம் நினைத்துப் பார்க்க முடியாத பல தீய விளைவுகளுக்கு நாடு சென்றிருக்கும். கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய இறுதி 48 மணிநேர காலப்பகுதியில் அரச ஊழியர்கள் மேற்கொண்ட நேர்மையின் காரணமாக இன்று நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் ஜனநாயக சுதந்திரங்கள் தப்பிப்பிழைத்துள்ளன என்று சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

நேற்று கண்டி ஶ்ரீதலதாமாளிகை, மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களை தரிசித்து நல்லாசி பெற்றபின் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

இன்று காட்டு யானைகளை பாதுகாப்பது பாரிய பிரச்சினையாகி உள்ளது. கடந்த அரசின் சில செயற்பாடுகள் காரணமாக வயது குறைந்த யானைகளைக் களவாடி திருட்டுத்தனமாக வளர்ப்பது அதிகரித்துள்ளது. அத்துடன் அண்மையில் புதிதாக செல்வந்தரானவர்கள் தமக்கு ஒரு கௌரவத்தை தரும் செயலாக யானை வளர்ப்பைக் கருதுகின்றனர். இதன் காரணமாக கடந்த சில வருடங்களாக யானைக்குட்டிகளை திருடும் நடவடிக்கைகள் அதிகரித்தன.

இதற்கு அரசியல் வாதிகளே பங்களிப்புச் செய்தனர். விரல் விட்டு எண்ணக்கூடிய அரச அதிகாரிகளும் உதவியளித்துள்ளனர். சரியான சாட்சியங்கள் இல்லாத நிலையில் அரச ஊழியர்கள் மீது நான் குற்றம் சாட்ட விரும்பவில்லை. ஏனெனில் எமது ஒரு சொல் அரச ஊழியர் ஒருவரின் முழு குடும்பத்தையும். அல்லது அவரது தொழில். எதிர்காலம் உட்பட அனைத்து கனவுகளையும் ஒரு சில நிமடத்தில் தகர்த்து விடும். அதேநேரம் கடந்த ஜனாதிபதித் தேர்தலை அடுத்து 48 மணி நேரத்தில் அரச ஊழியர்கள் நேர்மையாகச் செயற்பட்டதன் விளைவாக எமது நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது.

அரச ஊழியர்கள் தேர்தல் காலத்தில் தமது நேர்மையைத் தவற விட்டிருப்பின் நாம் நினைத்துப் பார்க்க முடியாத பல தீய விளைவுகளுக்கு நாடு சென்றிருக்கும். ஊழல் மிகு அரசை வீட்டுக்கு அனுப்பியது மட்டுமல்ல நல்லாட்சிக்கான அத்திவாரத்தையும் அரச ஊழியர்கள்தான் தேர்தல் காலத்தின் போது தமது நேர்மை மூலம் நாட்டுக்கு வழங்கினர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஆதரவளிப்பது குறித்து தீர்மானிக்கவில்லையாம்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வதற்கு ஆதரவளிப்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் 100 நாள் திட்டத்திற்கு ஆதரவளிக்கத் தயார். எனினும், நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்வது குறித்து யோசனை வெளியிடப்பட்டதன் பின்னர் அதனை ஆராய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.**

யோசனைத் திட்டத்தை தெளிவாக ஆராய்ந்த பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். நாட்டின் பௌதீக ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படக் கூடிய எந்தவொரு திட்டத்தையும் ஆதரிக்க முடியாது.

அரசியல் அமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதனை ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்றுக் கொள்கின்றது. எனினும் அவசர அவசரமாக அரசியல் அமைப்பில் மாற்றம் செய்வது நாட்டுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் நெருக்குதல்களுக்கு இலக்காகி வருகின்றனர். இன்னுமொரு தேர்தல் நடைபெறவுள்ள காரணத்தினால் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மிகவும் பொறுமையுடன் நிலைமைகளை அவதானித்து வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கண்டி அஸ்கிரி மற்றும் மல்வத்து பீடாதிபதிகளை சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறைக் கலாமன்றம் வழங்கும் தைத்திங்கள் பொற்றூறல் நிகழ்வு


(யாழ்ப்பாணம்)

50 ஆவது ஆண்டில் காலடி பதித்துள்ள திருமறைக் கலாமன்றம் இவ்வாண்டில் முன்னெடுக்கவுள்ள நிகழ்சிகளில் ஓர் அங்கமாக மாதாந்தோறும் நடைபெறவுள்ள பொற்றூறல் என்னும் நிகழ்வின் முதலாவது மாதத்துக்கான நிகழ்ச்சி தைத்திங்கள் பொற்றூறல என்னும் பெயரில் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இல.286, பிரதானவீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஓய்வு நிலைப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்ச்சிகளாக சிவானந்தன் அகிலனின் இசைக்கச்சேரியும், கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடன ஆசிரியை திருமதி. அகல்யா ராஜபாரதியின் மாணவிகளின் நடனங்களும் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (இ-5)




# கிடைத்ததைச் சுருட்டுவோம் என்று வட.- கிழக்கிற்கு பலர் வருவார்கள்!

## மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்கிறார் முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு இப்பொழுது திறக்கப்பட்டு விட்டது.கிடைத்ததை சுருட்டுவோம் என்ற எண்ணத்தில் பலா வருவார்கள். எனவே மாகாண சபையுடன் கலந்தோலோசித்து செயற்படுமாறு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்ற மக்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இராணுவமும் அதனுடன் சேர்ந்த இராணுவ அனுசரணைச் சக்திகளும் நெடுந்தீவை ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து இங்கு வசித்து வந்த பெரும்பாலான மக்கள் யாழ். குடாநாட்டுக்கோ வெளிநாடுகளுக்கோ புலம் பெயர்ந்து சென்று விட்டார்கள் என்று அறிகின்றேன். பொருளாதார வசதிகள் அருகிய ஒரு நிலையிலேயே பெரும்பாலாக எங்கள் தமிழ் மீனவ சமூக மக்கள் தான் பலத்த சிரமங்களிடையே வாழ்ந்து வருவதாக அறிந்து கொண்டேன். பல அடிப்படை வசதிகள் அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்றும் அறிந்தேன். அதனால்தான் கிறிஸ்மஸ் தாத்தா வருவது போல் சில பல பரிசுப் பொருட்களை வாகனங்களில் சுமந்து கொண்டு வந்துள்ளோம்.

வடமாகாணசபையானது உங்கள் ஒவ்வொருவருக்கும் உரிய சபை. அதில் அரசு நடத்துங் கட்சி, எதிர்க்கட்சி என்று பாகுபாடு கிடையாது. எதிர்க்கட்சியினர் வென்ற இடங்களையும் நாங்கள் ஒரே மாதிரியாகத்தான் அபிவிருத்தி செய்து வருகின்றோம். ஏனெனில் எதிர்க்கட்சியினரும் எங்கள் சொந்த உறவுகள்தான். கட்சியைக் காட்டி கல்நெஞ்சர்களாக மாற இடமளிக்கக் கூடாது.

முஸ்லிம் மக்கள், மலையக மக்களிடையே நான் ஒன்றை அவதானித்துள்ளேன். ஒரு சகோதரர் ஒரு கட்சியிலும் மற்றவர் இன்னொரு கட்சியிலும் இருப்பார்கள். யார் வந்தாலும் சகோதரர்கள் தங்கள் குடும்பங்களைப் பார்த்துக் கொள்வார்கள். நாங்களோ கட்சிக்காகக் காடைத்தனங்களில் ஈடுபட பின்னிற்கமாட்டோம். இந்த நிலை மாற வேண்டும்.

தத்தமது இடங்களை அபிவிருத்தி செய்ய எதிர்க்கட்சி யினருக்கும், எனக்கு வழங்கப்படும் அதே தொகைதான் வழங்கப்பட்டுள்ளது. எனதருமைத்தம்பிமார் விந்தன் கனகரட்ணம், கஜதீபன், ஆனோல்ட் ஆகிய உறுப்பினர்கள் ஒரு சில நாட்களுக்கு முன்னர் அனலைதீவு வந்திருந்தார்கள். பாராளுமன்ற உறுப்பினரும் எனது நண்பருமான ஸ்ரீதரனும் வந்திரு ந்தார். இவர்கள் யாவருக்கும் உங்கள் எல்லோர் மீதும் விசேட வாஞ்சை ஒன்று உள்ளது என்பதை நான் அறிந்து கொண்டேன். அவர்கள் அனைவரும் இதுகாறும் உங்களுக்கிருந்த அவலங்களை, அல்லல்களை, இடர்களை நீக்கி உங்களுக்கு நல்வாழ்வைப் பெற்றுத்தரக் கடுமையாக உழைப்பார்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. அவர்கள் அவ்வாறு உழைக்காவிட்டால் தட்டிக் கேட்பது என் பொறுப்பு!

உங்கள் தீவு மிக அழகான தீவு. பல வளங்களைக் கொண்ட தீவு. துரதிர்ஷ்ட வசமாக சனிபகவானின் திருஷ்டி சிலகாலம் உங்களைப் பீடித்திருந்தது. சனி மாற்றத்தின் பின் விடியத் தொடங்குவதை நாம் அவதானிக்கலாம். சனிமாற்றம் முக்கியமாக உங்களுக்கே நன்மைகளைக் கொண்டு வந்துள்ளது என்பது எனது கணிப்பு. எங்கள் மாகாணசபையின் மக்களைச் சந்திக்கும் தொடர் நிகழ்வின் முதற் பார்வையே உங்கள் மீது தான் படர்ந்துள்ளது. அடுத்துத்தான் வலிகாமம் வடக்கு, மருதங்கேணி போன்ற இடங்களைப் பார்வையிட்டு மக்கள் நிலை கேட்டறிய உள்ளோம்.

இந்தத் தீவானது பலமருந்து மூலிகைகள் செழித்து வளரும் மாமலைவனம் என்று மன்னன் செகராசசேகரன் காலத்தில் அழைக்கப்பட்டது.

இங்கு அந்நியர் ஆட்சிக்கு முன்னர் ஆண்ட வெடியரசனின் கோட்டை இருப்பதாக அறிகின்றேன். அது நெடுந்தீவின் வடமேற்குக் கரையில் இருப்பதாகவும் அறிகின்றேன். அப்பேற்பட்ட சரித்திரப் பிரசித்தி பெற்ற கோட்டையை எமது சுற்றுலா அமைச்சு ஏற்று ஏதேனும் புனர் நிர்மாணப் பணிகளில் ஈடுபட சட்டத்தில் இடமிருக்கின்றதா என்பதை எமது சுற்றாடல் அமைச்சின் அனுசரணைப் பிரதிநிதி கஜதீபன் ஆராய்ந்து பார்ப்பார் என்று நம்புகின்றேன்.

சில விடயங்கள் எங்கள் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது என்ற காரணத்தினாலேயே இவ்வாறு கூறினேன். இதனை விட மேலும் நெடுந்தீவுக் கோட்டை, மாவலித்துறை போன்றவையும் பாதுகாத்துப் பயன்படுத்தப்பட வேண்டியவை. மாவலித் துறை முகத்தில் வெளிச்ச வீடு இன்றும் இரவில் ஒளிவீசிப் பயன் கொடுத்துக் கொண்டிருக்கின்றது என்று அறிகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-4)

## கீரிமலை நகுலேஸ்வர மஹோற்சவம்

கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனமானது எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்களுக்கு மஹோற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் 18 ஆம் திகதி புதன் கிழமை பி.ப 2 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (இ




## மருதடி விநாயகருக்கு மஹா கும்பாபிஷேகம்

மானிப்பாய் மருதடிவிநாயகர் ஆலய ஆவர்த்தன பிரதிஷ்டா நவ குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 02 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.45 மணி தொடக்கம் முற்பகல் 10.45 மணிவரை இடம்பெறவுள்ளது.

இதேவேளை நாளை மறுதினம் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை முதல் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிவரை அடியவர்கள் எண்ணெய்க்காப்பு வைக்கும் நிகழ்வு இடம்பெறுமென ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ

## பொதுக்கூட்டம்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 31ஆம்திகதிசனிக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடை பெறவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் ந.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (இ

## மெய்வல்லுநர் போட்டி

புற்றளை மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை பொது மைதானத்தில் பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில்பிரதமவிருந்தினராகவடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

நெல்லியடி மத்திய கல்லூரி ஆசிரியை சறோஜினிதேவி இராஜேந்திரன் மாணவர்களுக்கு பரிசில் வழங்கவுள்ளார். (இ

★ ★ ★ ★ ★ ★

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் இராஜேந்திரன்,பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச வைத்திய சாலை வைத்திய அதிகாரி ரி.பிரகாசன் கலந்து கொள்ளவுள்ளார். (இ

## காரைநகர் திருமணற்காடு கும்பநாயகி ஆலய மஹா கும்பாபிஷேகம்

காரைநகர் திருமணற்காடு திருவருள்மிகு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்பாளின் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் பெப்ரவரிமாதம் 2 ஆம் திகதி காலை 9.36 மணிமுதல் 10.45 மணிவரை இடம்பெறவுள்ளது. கும்பாபிஷேகப் பெருவிழாவை ஒட்டிய கிரியாகால நிகழ்வுகள் கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணி முதல் மறுநாள் மாலை 3 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

கும்பநாயகி அம்பாளின் கும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்வு கள் வானொலி தொலைக்காட்சி ஊடாக நேர்முக வர்ணனை செய்யப்படவுள்ளன. நேர்முக வர்ணனைகளை வர்ணனைக் கலாநிதி அருளானந்தம் வழங்கவுள்ளார். (இ



வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் தலைமையிலான குழுவினர் நெடுந்தீவிற்கு சென்று மக்கள் சந்திப்பில் ஈடுபட்டதோடு உதவிப் பொருட்களினையும் வழங்கி வைத்துள்ளனர். நேற்று முன்தினம் நெடுந்தீவு சென்ற அவர்கள் நெடுந்தீவிலுள்ள தொன்மையான நினைவுச் சின்னங்கள், கோவில்கள், வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடங்களிற்கும் சென்று பார்வையிட்டுள்ளனர். முன்னதாக குமுதினிப்படகில் படுகொலை செய்யப்பட்டவர்களிற்கான அஞ்சலியினை செலுத்தி கொண்டு தமது பயணத்தினை ஆரம்பித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு அவர்கள் போகும் இடங்கள் எல்லாம் பெருமளவில் மக்கள் திரண்டு வரவேற்றனர். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் சென்ற குழுவில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா, வடமாகாண சபை உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், விந்தன் கனகரத்தினம், கே.சயந்தன், இ.ஆனல்ட், பா.கஜதீபன் மற்றும் மாகாணசபை, வலி தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினரான நடனேந்திரன், காரைநகர் பிரதேச சபை தவிசாளர் ஆனைமுகன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் இலங்கையை விட்டு தப்பியோடவில்லை முன்னாள் நிதியமைச்சின் செயலாளர் மறுப்பு

நான் வெளிநாடு செல்லவில்லை. வெளிநாடு செல்ல வேண்டிய அவசியமும் இல்லை என முன்னாள் நிதி அமைச்சின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நான் வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொள்ளவில்லை.

தேர்தலின் பின்னர் நான் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாக சில ஊடகங்களில் பிரசாரம் செய்யப்படுகின்றது. எனினும், இந்த ஊடகச் செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது.

குருநாகலில் வசித்து வருகின்றேன். வாரந்தோறும் கொழும்பிற்கு வந்து செல்கின்றேன்.

இராஜதந்திர கடவுச்சீட்டை ஒப்படைத்துள்ளேன். தற்போது ஓய்வு பெற்ற சாதாரண அதிகாரியொருவராக வாழ்ந்து வருகின்றேன் என ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (இ-5)

# அரசு மாற்று கருத்துடையவர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தி வருகிறது

தற்போதைய அரசாங்கம் மாற்றுக் கருத்துடையவர்களுக்கு பல்வேறு வழிகளில் இடையூறு ஏற்படுத்தி வருவதாக முன்னிலை சோசலிச கட்சியின் பிரசாரச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

மாற்றுக் கருத்துடையவர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தடை ஏற்படும் வகையில் இந்த அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

கட்சியின் அரசியல் பிரிவு உறுப்பினர் குமார் குணரட்னத்தை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினர் வாக்கு மூலமொன்றை அளிக்குமாறு அழைத்துள்ளனர்.

இந்த நடவடிக்கையானது குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் அவசியமன்று.அரசியல் அழுத்தங்கள் காரணமாக இவ்வாறு வாக்கு மூலம் பதிவு செய்யப்பட உள்ளது.கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தைப் போன்றே இந்த அரசாங்க ஆட்சிக் காலத்திலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் பன்னிப்பிடடியில் அமைந்துள்ள எமது காரியாலயத்திற்கு வந்து குமார் குணரட்னம் பற்றிய விபரங்களை கோரினார்கள்.

குமார் குணரட்னம் நேரில் வந்து வாக்கு மூலமொன்றை அளிக்க வேண்டுமென கோரியிருந்தனர்.

இந்த நடவடிக்கைகளின் மூலம் மாற்று அரசியல் செயற்பாடுகளை இந்த அரசாங்கமும் ஒடுக்குகின்றமை வருத்தமளிப்பதாக புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்று அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ)

# தேர்தலில் நாங்கள் தோற்கவில்லை ஐக்கிய தேசியக் கட்சியே தோற்றது

## முன்னாள் அமைச்சர் கூறுகிறார்

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கே தோல்வி கிட்டியுள்ளதாக முன்னாள் அமைச்சர் பியசேன கமகே தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியினர் தமக்குத்தான் வெற்றி கிட்டியுள்ளது என்பதைப் போன்ற உற்சாகத்தில் காணப்பட்டனர். ஆனால் தற்போது அவர்களின் உற்சாகம் குறைந்துள்ளது.

நாங்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடையவில்லை. சாதாரண பின்னடைவு ஒன்று மட்டுமே ஏற்பட்டது. எதிர் வரும் நாட்களில் அந்தப் பின்னடைவு சரிசெய்யப்படும்.

மேலும் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா, மகிந்த ஆகியோருடன் இணைந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியை மீண்டும் கட்டியெழுப்புவார். பலமிக்க கட்சியாக நாங்கள் மீண்டும் எழுந்து வருவோம்.

எங்களைப் பொறுத்தவரை ஜனாதிபதி பதவிக்கான முகம் மட்டும் தான் மாறியுள்ளது. தவிர எங்கள் கட்சி தோற்கடிக்கப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தான் இந்தத் தேர்தலிலும் தோல்வி கிட்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 160 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 800 | 350 |
| தக்காளி | 200 | 200 | 170 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 50 |
| கோவா | 100 | 100 | 150 | 100 |
| கரட் | 200 | 180 | 170 | 240 |
| பூசணி | 50 | 80 | 70 | 100 |
| புடோல் | 60 | 80 | 100 | 100 |
| வாழைக்காய் | 100 | 100 | 90 | 100 |
| சின்ன வெங்காயம் | 40-100 | 120 | 90 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 150 | 140 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 150 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 160 | 100 | 200 | 140 |
| லீக்ஸ் | 250 | 220 | 300 | 350 |
| பீற்றூட் | — | 180 | — | 200 |
| கறிமிளகாய் | — | 300 | — | 280 |
| முருங்கைக்காய் | — | 600 | — | — |
| போஞ்சி | 180 | 240 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | 150 | 70 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 40 | 60 | 70 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40-50 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 120 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 140-170 | 150 | 240 | 200 |

# பேசும் படம் - 11

கோண்டாவிலில் உள்ள ஒரு வீட்டில்...



அம்மான்னா சும்மா இல்லடா ...
அவ இல்லான்னா யாரும் இல்லடா...

**குறிப்பு:** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.1
தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

**அனுப்பியவர்:** றொசான் கொக்குவில்.


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர்<br>தொ.இ: B/4055 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 24 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/222 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 12 3/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/4059 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 33 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/224 |
| பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் (லண்டன்)<br>தொ.இ: B/4060 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 28 சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/239 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 14<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில் (லண்டன் NOT PR)<br>தொ.இ: B/4061 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/249 |

## கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு பல வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி 67 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரவித்துள்ளார்.

செழிப்புமிக்க தாய்நாடு. அபிமானமிக்க நாளைய தினம் என்ற தொனிப்பொருளில் இம்முறை தேசிய சுதந்திர தின நிகழ்வு ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை நாடாளுமன்ற கட்டட வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டத்தில் சுதந்திர தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்யுமாறும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சுதந்திர தின நிகழ்வின் போது ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை நாடாளுமன்ற கட்டட வளாகத்தின் அருகில் பாதை போக்குவரத்து நடவடிக்கை மட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய நேற்று முன்தினம் காலை 8.30 மணியிலிருந்து 12.00 மணிவரை ஜப்பன் மித்ரத்வ வீதி. பாராளுமன்ற அருகில் உள்ள வீதி பொல்துவ சந்தி பாராளுமன்ற வளாக வீதி. பாளான் துலசந்தி வீதிகளின் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# திவிநெகும சான்றிதழ்கள் பஞ்சாங்கங்களுடன் மீட்பு

**(கொழும்பு)**

**அம்பாறை மாவட்டச் செயலக களஞ்சிய சாலை ஒன்றிலிருந்து வாழ்வின் எழுச்சி (திவிநெகும) சான்றிதழ்கள் 75 ஆயிரமும் பஞ்சாங்கங்கள் 65 ஆயிரமும் நேற்று மீட்கப் பட்டுள்ளன.**

மக்கள் விடுதலை முன்னணியின் அம்பாறை மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த ஜயதிஸ்ஸவினால் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கிணங்கவே மேற்படி களஞ்சியசாலை சோதனைக்கு உட்படுத்தப்பட்டு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் நீல் டி அல்விஸிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும் மேற்படி ஆவணங்கள் கடந்த 2 ஆம் திகதி. மாவட்டச் செயலகத்துக்கு கிடைத்த போதிலும் 8 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளதால் அவற்றைப் பகிர்ந்தளிக்க வேண்டாம் என்று சமுர்த்தி முகாமையாளருக்கு அறிவுறுத்தியதாக அவர் கூறியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

# அனுபவம் இல்லாத ஒருவரை அமைச்சராக நியமித்துள்ளனர்

(கொழும்பு)

அனுபவம் இல்லாத ஒருவரை அரசாங்கம் கல்வி அமைச்சராக நியமித்துள்ளது என வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

குருநாகல் பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அனுபவம் இல்லாதவர்கள் பதவியை பொறுப்பேற்றுக்கொண்டால் அவர்களுக்கு என்ன செய்வது என்பது புரியாது.


கல்வி அமைச்சில் இவ்வாறான பொம்மைகள் எவரும் பதவி வகிக்கவில்லை. சி.டபிள்யூ. கன்னங்கரா. லயனல் ஜயதிலக்க. ஈரியாகொல்ல ரிசட் பத்திரண. ரணில் விக்ரமசிங்க மற்றும் பந்துல குணவர்தன போன்றவர்கள் கல்வி அமைச்சர்களாக கடமையாற்றினர்.

தற்போது பதவி வகிப்பவர்கள் ஊடகங்களுக்கு எதனையாவது சொல்வதனையே செய்கின்றனர்.

குளியாப்பிட்டி சுபாரதி வித்தியாலயத்தில் 90 மாணவர்களை அரசியல் அடிப்படையில் சேர்த்துக் கொண்டதாக கல்வி அமைச்சர் என்மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

நான் அவ்வாறு செய்ததனை நிரூபித்தால் நான் எனது முதலமைச்சர் பதவியை துறக்கத் தயார். அரசியலில் எப்போதும் நாம் பதவிகளை துறந்து செல்ல தயாராக இருக்க வேண்டும் என தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# வெலே சுதாவைக் கொல்ல சதி முயற்சி- சோபித தேரர்



போதை கடத்தல்காரரான வெலே சுதாவைக் கொல்வதற்கு சதித் திட்டம் தீட்டப்படுகிறது எனத் தமக்குத் தகவல்கள் கிடைத்தன என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் சோபிததேரர் தெரிவித்தார்.

இந்த சதித் திட்டம் குறித்து பொலிஸ்மா அதிபருக்குத் தான் கடிதம் ஒன்றை அனுப்பினார் என்றும். அதில் வெலே சுதாவுக்குப் பாதுகாப்பை அதிகரிக்குமாறு கேட்டிருந்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் போதைப் பொருள் இலங்கைக்கு எவ்வழிகளில் கடத்தப்படுகின்றது. இதில் யார் யாருக்கெல்லாம் தொடர்பு இருக்கிறது என்பதை வெலே சுதா உயிருடன் இருந்தாலே அறியமுடியும். இதனாலேயே வெலே சுதாவின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 267

டொறின் மன்மதநாயகம்




காருண்யா ஸ்ரீஸ்கந்தராஜா




ரமணன் ராஜ்குமார்




அசோக குமார்




ராஜமணி சுப்பிரமணி




சிவம் சக்தி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த (உயர்தர) வர்த்தகப் பிரிவில் தமிழ்மொழிமூலமான பரீட்சார்த்திகளில் முதலாம் இடத்தை செல்வி நிலாஞ்சனா சிவாஜி பெற்றுள்ளார்

கொழும்பு 07 இலுள்ள புனித பிரிட்ஜட் கன்னியர்மட மாணவி செல்வி நிலாஞ்சனா சிவாஜி அண்மையில் வெளியிடப்பட்ட க.பொ.த உயர்தரப் பரீட்சை (2014) முடிபுகளின் படி வர்த்தகப் பிரிவில் கொழும்பு மாவட்டத்தில் இரண்டாவதாகவும் தேசிய மட்டத்தில் எட்டாவதாகவும் 3A சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இப் பரீட்சையில் 2.4336 என்ற Z புள்ளியைப் பெற்றதுடன்



தமிழ் மொழி மூல மான வர்த்தகப் பிரிவு பரீட்சார்த்திகளில் முதலாம் இடத்தை இவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு பிரயோகப் புள்ளிவிபரவியல் நிறுவனத்தால் (Institute of Applied statistics) நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட ஒலிம்பியாட் புள்ளிவிபரவியல் போட்டிப் பரீட்சையில் வெள்ளிப் பதக்கத்தையும் செல்வி நிலாஞ்சனா வென்றிருந்தார். இவர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் திருசிவாஜி மற்றும் திருமதி. சிவசக்தி சிவாஜி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியாவார்.

## கையூட்டல் குறித்து 150 முறைப்பாடுகள்

(கொழும்பு)

**ஜனாதிபதி தேர்தலின் பின்னர் கையூட்டல் தொடர்பில் 150 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஜனவரி மாதம் ஆரம்பம் முதல் இதுவரையில் 200 முதல் 230 வரையிலான கையூட்டல் முறைபாடுகள் கையூட்டல் மற்றும் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் செய்யப்பட்டுள்ளன.**

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, அனைத்து முறைப்பாடுகளும் விசாரணை பிரிவிடம ஒப்படைக்கபட்ட போதிலும் போதியளவு சாட்சியங்களுடன் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் மட்டுமே வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு வருவதாக கையூட்டல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு அறிவித்துளளது.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் செய்யப்பட்ட கையூட்டல் முறைப்பாடுகளில் சிலரை விசாரணை செய்யத்தக்களவு காரணிகளுடன் முறைப்பாடு செய்யப்படவில்லை என தெரிவித்துள்ளது.

தேவை ஏற்பட்டால் குற்றம் சுமத்தப்பட்டவர்களிடம் விசாரணை நடத்தப்படும் என அறிவத்துள்ளது. கலாபுரயில் 5000 தேர்தல் குடைகள் கைப்பற்றல்

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலின் போது பகிர்ந்தளிப்பதற்காக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த நீலம் மற்றும் மஞ்சள் நிறங்களினாலான 5 ஆயிரம் குடைகளை மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிஸை, கலாபுர பகுதியில் மூடப்பட்டிருந்த கட்டமொன்றில் களஞ்சியப்படுத் தப்பட்டிருந்த நிலையிலேயே இந்த குடைகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## க.பொ.த (சா/த) -2014 இல் கணித பாடப்பரீட்சையும் மாணவர் கலந்துரையாடல் குறித்து ஓர் கண்ணோட்டமும்

கடந்த ஆண்டின் இறுதியில் தேசிய ரீதியிலான க.பொ.த (சா/த) பரீட்சை ஒன்று நடைபெற்று முடிந்துள்ளது. இதில் கணித பாடப் பரீட்சை தொடர்பாகவும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சில மாணவர்களுடனான கலந்துரையாடல் தொடர்பாகவும் சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். முதலில் பரீட்சை என்பது கற்றலின் அளவுகோல் அல்ல. வெளிப்படுத்தும் ஆற்றலின் அளவுகோல் என்பதை நினைவுறுத்துகின்றேன். எவ்வளவு கற்றோம் என்பதைவிடுத்து எவ்வாறு வெளிப்படுத்துவது? என்பதே இவ்விடத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.

இவ்வகையில் நடைபெற்று முடிந்த கணிதம் பகுதி-I நிறைவடைந்த பிற்பாடு அநேகமான மாண வர்கள் சந்தோஷத்துடன் வெளியே வந்தமையையும் கடந்த கால வினாத்தாள் முறைகளைத் தழுவியதெனவும் அவற்றுடன் ஒத்துக் காணப்பட்டதாகவும் கூறிச் சென்றமையை என்னால் அவதானிக்க முடிந்தது. மறு புறத்தில் சில மணிநேரங்களின் பின்பு அதேநாளில் பகுதி II இன்பிற்பாடுபரவாயில்லை என்ற மனச்சோர்வுடனான பதிலையே அதே மாணவர்கள் கூறிச் சென்றனர். காரணம் கடந்த 5 ஆண்டு காலங்களில் பகுதி I ஆயினும் சரி பகுதி II ஆயினும் சரி வினாத்தாள் அமை ப்பு குறிப்பிட்ட முறைமையைத் தழுவியதாகவே அமைந்திருந்தது. எனினும் இம்முறை பரீட்சையில் பகுதி II ஆனது அதே அமைப்பிலிருந்து விலகியிருந்தமை அனைவரும் அறிந்த ஒன்றுதான். குறிப்பாக கேத்திர கணித வினாக்களில் அதிகம் பயன்படுத்தப்படும் எனக் காட்டுக எனும் பதம் கொண்ட வினா அமைப்புக்கள் இப் பரீட்சையில் நிறுவல் வகை வினாக்களுக்கும்மேலதிகமாக பங்கிலாபம், இருபடிச் சமன்பாடுகள், திண்மங்களின் கனவளவு போன்றவற்றில் பிரயோகிக்கப்பட்டு இருந்தது. அத்துடன் மாணவர்கள் மத்தியில் இவ்வாறான சொற்பதங்களைக் கண்டதும் ஒரு வகையிலான அச்ச உணர்வு இருக்கத்தான் செய்கின்றது. மேலும் இதற்கு முன்னர் கேத்திரகணித வினாக்கள் தவிர்ந்த ஏனைய அலகுகளில் இவ்விதமான வினாக்கள் கொண்ட பயிற்சிகளைச் செய்திருப்பதற்கான சாத்தியம் மிக மிகக் குறைவே. ஆனால் இத்தகைய வினாக்களில் பயிற்சி மேற்கொண்ட ஒருவர் அதற்கான படிமுறையில் விடையை அணு




கவும்தானே சரிபார்த்துக்கொள்ளவும் வாய்ப்பர்கின்றது.

எனவே இத்தகைய வினா அமைப்புக்களில் பயிற்சியளிப்பது இனிவருங்காலங்களில் அவசியமாகின்றது.

இவற்றை விட பகுதி II



இல் பெருக்கல் விருத்தி தவிர்க்கப்பட்டுள்ளமையும் கூட்டல் விருத்தியின் கடைசி இரு வினாக்களும் உய்த்தறியும் வகையில்அமைந்திருந்ததும்தொடைகளுடன் தொடர்புபட்ட வினாவின் சொற்பிரயோகங்களின் கடினத்தன்மையும் கனவளவு தொடர்பான வினாவில் இடம் பெற்ற படமானது விஞ்ஞானப் பாடத்தின்பரிசோதனைபோன்றிருந்ததும் குறிப்பிட் டுச் சொல்லத்தக்க விடயங்களாகும். கனவளவு வினாவை அநேக மாணவர்கள் எதிர் கொள்ளாது விலக்கியிருந்தனர். இதற்கு படத்தின் வெளித்தோற் றம் காரணமாயிருந்திருக்கலாம். ஆயினும் இது மிகவும் இலகுவான் வினா அமைப்பிலேயே கூடவே மடக்கையுடன் காணப்பட்டது.

கடந்த காலங்களை விட வசன அமைப்புக்கள் குறைவாகக் காணப்பட்டமையும் போதிய நேரத்துள் செய்யக்கூடிய வசதியை ஏற்படுத்தியிருந்தமையும் சிறப்பம்சமாகும்.

இச்சூழ்நிலையில்மற்றுமொரு வியக்கத்தக்க சம்ப வம் ஒன்று பத்திரிகைச்செய்தியாக வெளி வந்திருந்தது.

அதாவது தென்னிலங்கையைச் சேர்ந்த 70 வய துடைய முதியவர்இம்முறையும்க.பொ.த (சா/த) கணித பாடப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார். இவர் 2011 இலிருந்து தொடர்ச்சியாகவே ஒவ்வொரு வருடமும் கணித பாடத்திற்குத் தோற்றி அதி உச்ச சித்தியையே பெற் றுள்ளனர்.

இவ்வாறு இவ்வயதிலும் கூட 5 ஆவது தடவையாக தோற்றுவதற்கும் காரணம் தற்கால கணித பாடத்திட்டத்திலுள்ள குறைபாடுகளை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காகவே எனக் குறிப்பிட்டுள்ளார். (தினக்குரல்19/12/2014 பக்-9 தகவல்) இவரது கருத்து எந்தளவில் நியாயமென்பது கேள்விக்குறியானதொன்றாகும். ஏனெனில் இவரது தனிப்பட்ட பெறுபேற்றைக் கொண்டு பாடத் திட்டத்தைகுறை கூறமுடியாது என்பதே எனது கருத்தாகும். இத்துடன் தற்கால பாடத்திட்டம் தற்கால மாணவர்களின் சூழ்நிலையைக்கருத்திற்கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

[illegible] ஆண்டில் (2015) இடை நிலைப் பிரிவில் தரம் 6,10 இல் புதிய பாடத்திட்டம் அறிமுகமாகியுள்ளது. 2007 ஆம் ஆண்டு கலைத்திட்டத்தின்படி ஒவ்வொரு தரங்களிலும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்த அடிப் படை எண்ணக்கருக்கள் புதிய பாடத்திட்டம் 2015 ஒரேதரத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. உதாரணமாக தரம் 10 இல் முக்கோணிகள் எனும் அலகில் அகக்கோணங்களின் கூட்டுத்தொகை, புறக்கோணம், அகத்தெதிர்கோணங்களுக்கி டையிலானதொடர்புகள், இரு சமபக்க முக்கோணிகள் தொடர்பான தேற்றங்கள் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இது கேத்திர கணிதத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதாகவே அமைகிறது. அதுமட்டுமின்றி கடந்தக.பொ.த (சா/த) பரீட்சையிலும் பகுதி II இல் கேத் திரகணி வினாக்கள் மிக இலகுவானவை ஏனெனில் ஒருங்கிசைவு, வட்டத்தேற்றங்கள் தொடர்பான அடிப்படை அறிவைப் பரீட்சிப்பதாகவே இரு வினாக்களும் அமை ந்திருந்தது.

புள்ளித்திட்டத்தைப் பார்க்கும் போது அதிகம் மாற்றமில்லை எனலாம். பெரும்பாலும் கடந்தகால முறைகளைப் போலவே அமைந்திருந் தன. இருப்பினும் இவ் வினாத் தாள் சித்தி வீதத்தில் மிகக் குறைந்தளவிலேயே மாற்றத்தை உண்டு பண்ணும் எனவும் A தரச் சித்தி பெறுவோரின் வீதத்தில் பாரிய தாக்கத்தை உண்டு பண்ணலாம் எனவும் எதிர் பார்க்கலாம். எனவே பரீட்சை தொடர்பாக எனது கருத்துக்களாக,

இனிவருங்காலங்களில் வினாத்தாளானது கேத்திர கணிதத்தை முக்கியத்துவப் படுத்துவதாக அமையலாம்.

தற்கால விஞ்ஞான பாடம் எந்த வகையில் உயர்தரத்தில் உயிரியல் துறைக்குத் தயார் செய்கின்றதோ அதே போல் இனிவரும் காலங்களிலும் கணித பாடத்தில் அவ்வமைப்பை சிறிதளவியேனும் எதிர்பார்க்கலாம்.

வினாத்தாள் அமைப்பு வ்ழமையான அமைப்புக்களிலிருந்து சற்று விலகலாம் என்பவற்றை முன்வைப்பதோடு மாணவர்களின் தர்க்க ரீதியான சிந்தனைக்கு கூடிய பங்களிப்பை வழங்கும் விதமான வினா க்கள், பயிற்சிகள் அளிப்பதன்மூலம் இனிவருங்காலங்களில் எத்தகைய வினாத்தாள் அமைப்பாகிலும் சரி இதனை வெற்றிகரமாக எதிர் கொள்ளச் செய்யலாம்.

**வி. ஞானசிங்கம்**
ஆசிரியர்,
மு/வற்றாப்பளை மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1054

## சஞ்சீவனி மந்திரம்

ரங்கபுரத்து ஜமீன்தார் கேசவன் தன் ஒரே மகனான ராகவனை மிகவும் செல்லம் கொடுத்து வளர்த்ததன் விளைவாக, சிறு பருவத்திலேயே அவன் பல கெட்டப் பழக்கங்களுக்கு அடிமையானான். ஜமீன்தார் எவ்வளவோ நயமாகச் சொல்லிப் பார்த்தும் அவன் திருந்தவில்லை. வளர்ந்ததும் அவனுக்குத் திருமணம் செய்து வைத்தால் பொறுப்பு வந்து திருந்தி விடுவான் என்று நினைத்த ஜமீன்தார், ஜானகி என்ற பெண்ணை



அவனுக்கு மணமுடித்து வைத்தார்.

ஆனால், திருமணமான பின்னரும் ராகவன் திருந்தவில்லை. அவனுடைய மனைவி தங்கமான பெண்ணாக இருந்தாள். கணவனை தெய்வமாக மதித்து, அவனுக்கு சேவைகள் புரிந்து வந்தாள்.

திருமணமாகிப் பத்து ஆண்டுகள் ஆகியும், ராகவன் தம்பதியினருக்குக் குழந்தை பாக்கியம் ஏற்படவில்லை. அந்த சமயம், ஒருநாள் தயானந்தா என்ற யோகி அந்த கிராமத்திற்கு வந்தார். அவரிடம் சென்று ஜமீன்தார் தன் மகனைப் பற்றிக் கூறி அவனுக்குப் புத் திரபாக்கியம் அளிக்குமாறு வேண்டினார். அதற்கு யோகி, "கெட்டப் பழக்கங்களுக்கு அடிமையான உன் மகன் இன்று நலமாக இருப்பதற்கு உன் மரு மகள் ஜானகியின் கவனிப்பும், சேவைகளுமே காரணம்! அவளுக்குக் குழந்தை பிறந்தால், அதன் பிறகு அவளால் கணவனை இப்போது போல் கவனித்துக்கொள்ள முடியாது. அதனால், அவன் உடல் நலம் கெடுவான்!" என்றார். "ஐயோ! அப்படியானால் என் வம்சம் ராகவனோடு அழிந்துவிடுமா? என்று கேசவன் கலவரத்தோடுக் கேட்டார். "அப்படியில்லை! வம்ச விருத்தி ஆக வேண்டுமென்று நினைத்தால், நான உன பொருட்டுக் கடவுளை வேண்ட முடியும்" என்றார்.

அவர் சரியென்றதும், உடனே, யோகி ஒரு கொய்யாப்பழத்தை அவரிடம் தந்து, "இதை உன் மருமகளிடம் தின்னக்கொடு! உனக்குக் கட்டாயம் பேரன் பிறப்பான்!" என்று சொல்லிவிட்டு விடை பெற்றார்.


மருமகள்ஜானகி அதை உண்ண, அடுத்த ஆண்டே அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்க, அதற்கு மாதவன் என்று பெயரிட்டனர். ராகவனும் தன் பிள்ளை முகங் கண்டு, தன் கெட்டப் பழக்கங்களை விடுத்துத் திருந்தலானான். ஆனால் அவனது கெட்டப் பழக்கங்களால் அவன் உடல் நலம் கெட ஆரம்பித்தது.

ஒருநாள் ஜமீன்தார் ஐந்து வயது நிரம்பியிருந்த தன் பேரனை அழைத்து, "குழந்தை! உன் அப்பா மிகவும நல்லவர்தான் ஆனால் அவரது பழக்கங்கள் நல்லதல்ல. நீ அவரை நேசி. ஆனால் பழக்கங்களை நேசிககாதே" என்றார். அதற்கு மாதவன், "தாத்தா! அப்பா நோய்வாய்ப்பட்டு துன்பப்படுவதைப் பார்க்க என் மனது வேதனைப் படுகிறது. அவருடைய உடல் குணமாக என்னால் ஏதாவது செய்ய முடியுமா?" என்று கேட்டதும் நெகிழ்ந்து போன ஜமீன்தார், "என் கண்ணே! கடவுளைப் பிரார்த்தனை செய்! நிச்சயம் கடவுள் செவி சாய்ப்பார்!" என்றார்.

மாதவனும் தினமும் கடவுளைப் பிரார்த்தனை செய்யத் தொடங்கினான். பத்து ஆண்டுகள் சென்றன. ராகவனின் உடல்நலம் மோசமாகியதே தவிர குணமாகவேயில்லை. அப்போது, முன்பு கிராமத்திற்கு வந்த அதேயோகி தயானந்தா மீண்டும் அங்கு வந்தார். தனது அந்திமக் காலம் நெருங்கி விட்டதை உணர்ந்த அவர, தன் காலம் முடியும் முன், தனக்குத் தெரிந்த ஆன்மீக விஷயங்களை யாருக்காவது கற்றுத்தர விரும்பினார். அவருடைய ஞான திருஷ்டியில் மாதவன் அதற்குத் தகுதியானவன் என்று தெரிந்ததால் அவனைத் தேடி ரங்கபுரத்திற்கு வந்தார். யோகியை மாதவனும், அவனுடைய குடும்பத்தினரும் உபசாரம் செய்து வரவேற்றனர். தன் மனத்திலிருப்பதை யோகி மாதவனிடம் வெளியிட்டார். "சுவாமி! என் தந்தை குணமடையும் வரை என் மனம் வேறு எதிலும் நாட்டம் கொள்ளாது" என்றான் மாதவன் சற்றுநேரம் யோசித்த தயானந்தா, "சரி! அப்போது ஒன்றுசெய்! பத்ரிகாரண்யத்தில் உள்ள மகானந்தர் என்ற முனிவரை சந்திப்பாய்! அவருக்கு சில ஆண்டுகள் சேவை செய்து, அவரிடமிருந்து சஞ்ஜீவனி மந்திரத்தைக் கற்று வா! அதன் மூலம் உன் தந்தை குணமாவார்!" என்றார். உடனே, மாதவன் பத்ரிகாரண யம் சென்று மகானந்தரை அடை ந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். முனிவரும் அவனைப் பற்றித் தெரிந்துகொண்டு, "மகனே! சஞ்ஜீவனி மந்திரத்தைக் கற்றுக்கொள்ள அசாத்திய உடலுழைப்பும், மன உறுதியும் தேவை! அது உன்னிடம் இருக்கிறதா என்று பரிசோதிக்க வேண்டும்" என்று மாதவனிடம் சில விரதங்கள் இருக்கும் படி கூறினார்.... (தொடரும்)



### பி.எஸ்.பி.பொன்னுச்சாமி



பி.எஸ்.பி.பொன்னுச்சாமி மதுரை மாவட்டம் பேரையூரில் பி. எஸ். பொன்னாயிரம் பிள்ளை - முத்தம்மாள் தம்பதியின் மகனாக 1908ஆம் ஆண்டு ஜூன் 6ஆம் திகதி பிறந் தார். இவர் இந்திய விடுதலைப்போராட்ட த்தின் பொழுது அண்ணல் காந்தியடிகளின் சீரிய தலைமையை ஏற்று, பல்வேறு இன்னல்களை அனுபவித்து, பல பங்களிப்புகள் தந்த விடுதலைப் போராட்டத் தியாகிகளில் ஒருவர். இளம் வயதில் அண்ணல் காந்தியடிகளை மதுரையில் சந்தித் ததன் விளைவாக விடுதலைப் போராட்டத்தில் இவர் ஈடுபட்டார். சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் பங்கேற்று இருமுறை மதுரை சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் வ.உ.சி.யைப்போல இவரும் செக்கு இழுத்திருக்கிறார். ஒருநாள சிறைக் கஞ்சியில் புழு இருந்ததைப் பார்த்து சக கைதிகளைத் திரட்டி உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். மாவட்ட ஆட்சியரும், நீதிபதியும் நேரில் வந்து விசாரித்து இவரது கோரி க்கையில் உள்ள நியாயத்தை ஏற்று நடவடிக்கை எடுப்பதாகக் கூறினர். ஆனால் சிறை அதிகாரிகள் இவர் மீது பழி வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். சிறையில் இவருடன் இருந்தவர் களில் "தினமணி" முன்னாள் ஆசிரியர் ஏ.என்.சிவராமனும் ஒருவர். முதல்வர்கள் காமராஜர், பி.எஸ். குமாரசாமிராஜா ஆகியோரின் நெருங்கிய நண்பராகவும் பொன்னுசாமி பிள்ளை விளங்கினார். இவரது தியாகத்தைப் பாராட்டி சுதந்திரதின வெள்ளிவிழாவின்போது அன்றைய பிரதமர் இந்திராகாந்தி தாமிரப்பட்டயம் வழங்கி கௌரவித் தார். "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன்விழாவில் அன்றைய முதல்வர் ஜெயலலிதா சால்வை அணிவித்து கேடயம் வழங்கினார். தியாகிகளுக்கான மத்திய, மாநில அரசு ஓய்வூதியம் இவருக்குக் கிடைத்து வந்தது. சுதந்திரம் பெற்றபின் வத்திராயிருப்பு பகுதியில் அரசியல் பணியுடன் ஹரிஜன சேவை, கதர் மற்றும் கூட்டுறவு இயக்கத்தில் இவர் தீவிரமாக ஈடுபட்டார். பிளவுபடாத ராமநாதபுரம் மாவட்ட காங்கிரஸ் செயலராகவும் இருந்துள்ளார். தமது 90ஆவது வயதில் 1998 ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் திகதி வத்திராயிருப்பில் அவரது இல்லத்தில் காலமானார். காந்தியவாதியான இவரது உடல் தகனம், காந்தி நினைவு நாளான ஜனவரி 30ஆம் திகதி நடந்தது. இவரது தியாகம், எளிமை, நேர்மை, நகைச்சுவை உணர்வு ஆகியவற்றை இப்பகுதி மக்கள் இன்றும் நினைவு கூர்கின்றனர். இவரது மகன் பொன்.ஞானசேகரன், தினமணி செய்தி ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். மற்றொரு மகன் பொன்.தனசேகரன் தினமணி, ஆனந்த விகடன் உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் செய்தியா ளராக பணி யாற்றியவர். தினமலர் இதழில் வெளியான இவரது கட்டுரைக்கு 2008ஆம் ஆண்டிற்கான சரோஜினி நாயுடு தேசிய விருது கிடைத்தது.

01.2015
29

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1595 - ஷேக்ஸ்பியரின் உரோமியோவும் ஜூலியட்டும் நாடகம் முதன் முதலாக அரங்கேறியது.
- 1676 - மூன்றாம் பியோதர் ரஷ்யாவின் மன்னனாக முடி சூடினான்.
- 1814 - நெப்போலியன் பொனபார்ட்டின் பிரெஞ்சு இராணுவம் பிரியென் நகரில் இடம்பெற்ற சமரில் ரஷ்யாவை வெற்றி பெற்றது.
- 1819 - ஸ்டாம்ஃபோர்ட் ராபில்ஸ் சிங்கப்பூரில் தரையிறங்கினார்.
- 1916 - முதலாம் உலகப் போர்: பாரிஸ் ஜேர்மனியரின் குண்டுத்தாக்குதலுக்கு இலக்கானது.
- 1929 - சோவியத் ஒன்றியத்திலிருந்து வெளியேற்றப்பட்ட லியோன் ட்ரொட்ஸ்கி துருக்கியை அடைந்தார்.
- 1946 - ஐக்கிய அமெரிக்காவில் CIG எனப்படும் மத் திய உளவுத்துறை குரூப் (Central Intelligence Group) அமைக்கப்பட்டது.
- 1996 - இத்தாலியில் வெனிஸ் நகரில் உள்ள ஓப்பரா மாளிகையான லா ஃபெனீஸ் தீயினால் அழிந்தது.
- 2005 - சீனாவின் பெருநிலப்பரப்பிலிருந்து 1949ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதற்தடவையாக வர்த்தக விமானம் ஒன்று தாய்வானுக்கு வந்து சேர்ந்தது.

**பிறப்புகள்**

- 1860 - ஆன்டன் சேகொவ், ரஷ்ய எழுத்தாளர் (இ. 1904)
- 1866 - ரொமெயின் ரோலண்ட், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1944)
- 1926 - அப்துஸ் சலாம், நோபல் பரிசு பெற்ற பாகிஸ் தானிய இயற்பியலாளர் (இ. 1996)

**இறப்புகள்**

- 1934 - பிரிட்ஸ் ஹேபர், நோபல் பரிசு பெற்ற ஜேர் மனிய வேதியியலாளர் (பி. 1868)
- 1963 - றொபேட் புறொஸ்ட், அமெரிக்கக் கவிஞர் (பி. 1874)
- 1981 - பாலகிருஷ்ணன், நாதசுரக் கலைஞர் (பி. 1945)
- 1998 - பி. எஸ். பி. பொன்னுச்சாமி, இந்திய விடு தலைப் போராட்டவீரர் (பி. 1908)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு...

...இதை ரஜினியிடம் தெரிவித்தோம். அவர் ஒப்புக்கொண்டார். அதன்படி, 5 ஆயிரம் அடி வரை படம் எடுத்தோம். எடிட் செய்து, ரஜினிக்குப் போட்டுக்காட்டினோம்.

அவருக்கு முழு திருப்தி ஏற்பட்டது. படம் நன்றாக வந்திருக்கிறது. நிச்சயம் வெற்றி பெறும் என்று நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. படத்தை இதே மாதிரி தொடருங்கள் என்றார். அதேபோல் படத்தை எடுத்து முடித்தோம்.

விநியோகஸ்தர்களிடம், படத்தின் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய 3 நாள் வசூல் பற்றி கவலைப்படாதீர்கள். அதுபற்றி எங்களுக்குத் தகவலும் தெரிவிக்காதீர்கள். திங்கட்கிழமை வசூலைப் பாருங்கள். பெண்கள் கூட்டம் அதிகமாக வருகிறதா என்று கவனியுங்கள். அதை எங்களுக்குத் தெரிவியுங்கள் என்றோம்.

நாங்கள் எண்ணியபடி திங்கட்கிழமை முதல், பெண்கள் கூட்டம் கூட்டமாக வந்து படத்தைப் பார்த்தார்கள். வசூல் நாளுக்கு நாள் அதிகரித்தது.


படம் பெரிய வெற்றி பெற்றதுடன், ரஜினியின் திரை உலக வாழ்க்கையில் ஒரு மைல் கல்லாகவும் அமைந்தது. இவ்வாறு எஸ். பி. முத்துராமன் கூறினார்.

தேவர் பிலிம்ஸ் தயாரித்த **"அன்னை ஓர் ஆலயம்"** படத்தில் ரஜினிகாந்த், யானைகளுடன் நடித்தார். இந்தப் படத்தில் ஒரு காட்சியில், ஒரு சிறுத்தையை தோள் மீது போட்டுக்கொண்டு நடப்பார், ரஜினி!

சாண்டோ சின்னப்ப தேவர் மறைவுக்குப்பின், அவர் மகன் சி.தண்டாயுதபாணி தேவர் பிலிம்ஸ் பேனரில் படங்களைத் தயாரித்தார்.

### தேவரின் கதை

தேவர் பிலிம்ஸ் படங்களுக்கான கதைகளை பெரும்பாலும் தேவரே உருவாக்குவது வழக்கம். யானைகளை வைத்து அவர் எழுதி



40

குட்டி யானையுடன் ரஜினி- அன்னை ஓர் ஆலயம்

## யானைகளுடன் ரஜினி நடித்த "அன்னை ஓர் ஆலயம்"

வைத்திருந்த கதை **"அன்னை ஓர் ஆலயம்."** அதை தண்டாயுதபாணி படமாக எடுத்தார். வசனத்தை தூயவன் எழுதினார். படத்தை, தேவரின் மருமகன் ஆர். தியாகராஜன் டைரக்ட் செய்தார்.

இதில் ரஜினியும், ஸ்ரீபிரியாவும் ஜோடியாக நடித்தனர். ரஜினியின் அம்மாவாக அஞ்சலிதேவி நடித்தார். மற்றும் ஜெயமாலினி, மோகன்பாபு, மேஜர் சுந்தர்ராஜன், அசோகன், தேங்காய் சீனிவாசன், நாகேஷ், சுருளிராஜன் ஆகியோர் நடித்தனர். பாடல்களை வாலி எழுத, இளையராஜா இசை அமைத்தார்.

### கதை

மிருகங்களுக்கும் தாய்ப்பாசம் உண்டு என்பதை சித்தரிக்கும் கதை. இதில், வேட்டைக்காரராக ரஜினி நடித்திருந்தார். காட்டுக்குள் தைரியமாகச் சென்று, மிருகங்களைப் பிடித்து அவற்றை சர்க்கஸ் கம்பெனிகளுக்கு விற்பது அவரது வேலை.

தாயிடமிருந்து குட்டி மிருகங்களை தந்திரமாகப் பிடித்து விற்பனை செய்துவிடுவார். இப்படி தாய் மிருகங்களிடமிருந்து குட்டிகளைப் பிரிப்பது அவர் அம்மா அஞ்சலி தேவிக்குப் பிடிக்கவில்லை. அவர் ரஜினியிடம், **மிருகங்களுக்கு தாய்ப் பாசம் அதிகம். அதனால, தாயிடமிருந்து குட்டிகளைப் பிரிக்காதே"** என்று கேட்டுக்கொள்வார். ரஜினியோ, மிருகங்களுக்காவது, தாய்ப்பாசமாவது! என்று சிரித்துக் கொண்டு போய் விடுவார்.

இந்நிலையில், ஒரு தாய் யானையிடமிருந்து குட்டி யானையைப் பிரித்து, சர்க்கஸ் கம்பெனிக்கு விற்று விடுவார். விடயம் தெரிந்ததும், "உன் தாயை பிரியும்போதுதான் அந்த வேதனை உனக்குத் தெரியும் என்று ரஜினியிடம் கூறுவார் அஞ்சலிதேவி.


சில நாட்களிலேயே அப்படியொரு விபரீதம் நடக்கிறது. காட்டில் மகனைத் தேடிவந்த தாயாரை, ஏற்கனவே குட்டியை பிரிந்த சோகத்திலிருந்த தாய் யானை துரத்துகிறது. தாயின் கூக்குரல் கேட்டு ரஜினி தாயைக் காப்பாற்ற ஓடி வருவார். வரும் வழியில் மிருகங்களை பிடிக்க வைத்திருந்த பொறியில் மாட்டிக்கொள்வார்.

அவரது கண்ணெதிரிலேயே அஞ்சலிதேவியை தன் துதிக்கையால் தூக்கி வீசியெறிகிறது, யானை. மரணத் தறுவாயில் அஞ்சலிதேவி, மகனே! இந்த தாய் யானையிடம் அதன் குட்டியை கொண்டு வந்து சேர்த்துவிடு! என்று ரஜினியிடம் சொல்லிவிட்டு உயிரை விடுகிறார்.

தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்ய குட்டி யானையை விற்ற சர்க்கஸ் கம்பெனிக்கு ஓடுவார், ரஜினி. ஆனால் அதற்குள் அந்த குட்டி யானை வேறொரு சர்க்கஸ் கம்பெனிக்கு கொடுக்கப்பட்டு விடுகிறது. இதனால் குட்டி யானை இருந்த கம்பெனியை தேடிப்போய் அதை மீட்கிறார் ரஜினி.

ஆனால் குட்டி யானை, அவரைப் பார்த்து பயந்து ஓட்டம் பிடிக்கிறது. ரஜினியும் விடாமல் அதைப் பிடித்து, அதற்கு தான் எதிரி அல்ல என்பதை நம்ப வைக்கிறார். கடைசியில், அதை காட்டுக்கு அழைத்துச்சென்று தாய் யானையுடன் சேர்த்து வைக்கிறார்.

முடிவில் தாய் யானை குட்டி யானை இரண்டும் துதிக்கையைத் தூக்கி ரஜினியை ஆசீர்வதித்து விட்டுப்போகும். *(தொடரும்)*



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 62

படாமச் சிரிக்கிறா.

ஆனா அப்படியாப்பட்ட ஆத்தாளுக்கு அதுதான் கடைசி ராத்திரின்னு தெரிஞ்சிருந்தா இந்தச் சிரி சிரிச்சிருக்க மாட்டா பாவம்.

சொக்கத் தேவன் பட்டியே சோகமாகிப் போச்சு.

வெதச்ச வெள்ளாமக் காடு குறுக் கொடிஞ்சு நிக்குது.

கிளிக கூட்டம் கூட்டமா வந்து குமிஞ்சிருச்சுக.

ரம்பத்த வச்சு அறுத்த மாதிரி எளங்குருத்துகளக் கத்திரிச்சுக் கத்திரிச்சு அதுக தின்னுட்டுப் போனதுல பொணங்கள நிண்ட மேனிக்கு நிறுத்தி வச்ச மாதிரி சுடுகாடுகளா நிக்கிதுக சோளக் காடுக.

கையில இருந்த காசுகளயெல்லாம் பித்துப் புடிச்சு நிக்கிறாக.

வெளையாமப் போச்சு காடு.

மடிவத்திப் போச்சு மாடு.

குலுக்கையில இருந்த கம்பும் கேப்பையும் கொறைஞ்சுக்கிட்டே வருது.

அடகு வைக்கப் பொருளிருந்தாலும் அடகுவாங்க ஆள் இல்ல ஊர்ல.

மொசப்புடிக்கப் பம்முற வேட்டை நாய் மாதிரி எப்ப வேண்ணாலும் பாஞ்சிருவேன்னு ஊர் எல்லையில பதுங்கி நிக்கிது பஞ்சம்.

அஞ்சாறு நாளாவே ஆத்தா பெரிய மூக்கி தலவலி காய்ச்சல்ன்னு படுத்தே கெடக்கா.

சுக்குத் தண்ணியக் குடிச்சுக் குடிச்சு ஒட்டிக் கெடக்குற உசுர அப்பப்ப ஊற வச்சுக்கிறா.

அவளுக்கு நெல்லுக் கஞ்சியும் மொளகு ரசமும் வச்சுத்தரலாம்னா காப்படி அரிசி வாங்கக் காசில்ல கருவாச்சி கையில.

அப்பதான் அன்னஞ்சியில காளையன் கெழவன் செத்துப் போனான்னு சேதி வருது.

கூலிக்கு மாரடிக்க ஆள் கூப்பிட்ட ஆள் வந்திருக்கு.

கல்யாணத்துலயும் சாவலயும் தெரிஞ்சு போகும் ஒரு மனுசன் இந்த பூமியில பொழச்ச பொழப்பு.

பாலு ஒண்ணு மட்டும் ஒவ்வாது அயிர மீனுக்கு.

வாயிலிருக்கிற மண்ணுகளக் கக்கிப்புடும் கக்கி. அயிர மீனு நாத்தமும் போயிரும்; சுத்தமாயிரும்.

இன்னொன்னும் சொல்லிக்குடுத்தா ஆத்தா.

அப்பப் புரியல; அது இப்ப புரியுது.

ஒறங்கப் போகையில பாவடையத் தெரட்டிப் பந்து சுருட்டித் தொடை இடுக்குல வச்சுத் தூங்குடீன்னு சொல்லிக் குடுத்தா.

என் ஏதுக்குன்னு கேட்டதுக்குச் சொன்னா தூங்கப் போகையில யானை தும்பிக்கையச் சுருட்டி வாய்க்குள்ள வைச்சுக்கிரும்டீ இல்லேன்னா புழு பூச்சிக உள்ள போயிருமா இல்லயா அவ சொன்னது பெரியவளாகிப் புரியறப்ப வெக்கம் வெக்கமா வந்துச்சு பின்னாடி நெனச்சாச் சிரிப்புச் சிரிப்பா வந்துச்சு.

கருவாச்சி இப்பவும் அதை நெனச்சுப் பல்லுத் தெரியாமச் சிரிக்கிறா பல்லி கத்துற மாதிரி சிரிக்கிறா.

விட்டு விட்டுச் சிரிக்கிறா பட்டும்



பதினாறு வயசுப் பொண்ணுக எண்ணெ வச்சுத் தல பின்னி நிக்கிற மாதிரி தள தளன்னு இருந்த காடுகளுக்குள்ள வெள்ளக்காரன் படையெடுத்து வந்தது மாதிரி வெட்டுக் காடுகரைகள்ல போட்டுட்டு உள்ளதும் போச்சேன்னு நிக்கிது ஊரு.

வெவசாயம் அழிஞ்சு போனா வேல வெட்டு எது?

பெரியமூக்கியும் கருவாச்சியும்

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தக்காணி, சொந்த மரம் தறிப்பதற்கு அனுமதி மறுப்பு

அரசு என்பதன் பொருளை உணர்ந்து கொள்வதில் பலரும் தவறிவிடுகின்றனர் என்ற உண்மை மறுதலிப்புக்குரியதன்று. அதேநேரம் அரச பணியாளர்கள் தங்களின் கடமை யாருக்கானது என்பதையும் உணரவில்லை என்றே கூற வேண்டும்.

இத்தகைய நிலைமைகளில் பொதுமக்கள் மிகப்பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதோடு மன உளைச்சலுக்கும் ஆளாகின்றனர்.

சாதாரண வாழ்வியல் நடைமுறையில் பொதுமக்கள் அதிலும் குறிப்பாக சாமானிய மக்கள் தாம்நிறைவேற்றிக்கொள்ளவேண்டிய சட்ட விதிமுறைகளை செம்மையாகச் செய்ய முடியாத நிலைமை ஏற்படுகின்றது.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன? என்பதை விளங்கிக்கொள்வதற்கு வசதியாக உதாரணம் ஒன்றை இவ்விடத்தில் முன்வைப்பது பொருத்தமானது எனக் கருதுகிறோம். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பளைப் பிரதேசத்தில் ஒருவருக்குச் சொந்தமான காணியில் இரண்டு தேக்குமரங்கள் உள்ளன. இந்த இரண்டு தேக்குமரங்களும் சுமார் 40 வருட முதிர்ச்சியைக் கொண்டவை. இப்போது அந்த இரண்டு தேக்குமரங்களும் குறித்த காணி உரிமையாளருக்குத் தேவைப்படுகிறது.

யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட காணி உரித்தாளர் அந்த இரண்டு தேக்குமரங்களையும் தறித்து தனது சொந்த இடமான யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுசெல்லவேண்டும். இந்த இடத்தில் சில சட்ட விதிமுறைகளை அவர் நிறைவேற்றிக் கொள்வது அவசியமாகின்றது. அந்த நடைமுறையை நிறைவேற்றிக்கொள்வதில் கால தாமதம் அல்லது ஸ்தம்பிதம் என்ற விளைவு ஏற்படுகின்றது.

ஆம், தேக்குமரம் தறிப்பதற்கு பச்சிலைப்பள்ளி, பளை பிரதேச செயலர் அனுமதி வழங்க முடியாது என்று கூறிவிடுகிறார். அவ்வாறு அனுமதி தருவதாக இருந்தாலும் ஒரு தேக்கு மரத்திற்கே அனுமதி தரமுடியும் என்றும் அவ்வாறு தரப்படும் அனுமதியோடு தறிக்கப்படும் அந்த ஒரு தேக்குமரத்தையும் பளை என்ற அந்த ஊரின் எல்லையைக் கடந்து எடுத்துச் செல்ல முடியாதென்பதும் அவரின் இறுக்கமான நிபந்தனை.

தனக்கு வழங்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் இதையே தன்னால் செய்யமுடியும் என்பது அவரின் நிலைப்பாடு.

அந்த நிலைப்பாட்டில் தவறிருப்பதாக நாம் கருதவில்லை. ஆனால் மரம் தறிப்பதற்கான அனுமதி இப்படித்தான் இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டவர்களிடம் சில கேள்விகளை முன்வைப்பது அவசியமாகின்றது.

1. நாற்பது வருடங்களுக்கு மேற்பட்ட தேக்குமரத்தை தறிப்பதற்கு அனுமதி வழங்காமல் விடுவதால் நீங்கள் சாதிக்கப்போவது என்ன?





2.காணிச் சொந்தக்காரன் தனக்குத் தேவையான தேக்கு மரத்தை தனது சொந்தக்காணியில் இருந்து தறித்தெடுப்பதற்கு அனுமதி வழங்காமல் விடுவதன் மூலம் எத்தகைய சாதகத்தை நீங்கள் நிலை நாட்டுவதாக எதிர்பார்க்கின்றீர்கள்.

## சட்டவிரோதத்தை தடுக்க வந்த விதிகள் நேரிய பாதைக்கும் தடைவிதிக்குது இங்கே

3.சொந்தக்காணியில் இருக்கக் கூடிய முதிர்ச்சியான தேக்குமரத்தை தறிப்பதற்கு அனுமதி வழங்க மறுப்பதன்மூலம் தென்பகுதியில் இருந்து கொண்டு வரப்படும் மரங்களுக்கான சந்தை வாய்ப்பை வடக்கு மாகாணத்தில் ஏற்படுத்திக்கொடுப்பதுதான் உங்களின் உள்நோக்கமா? அவ்வாறாயின் தென்பகுதியிலிருந்து மரங்களை ஏற்றி லொறி லொறியாக ஏ-9 வீதி வழியாக யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வருவோருக்கும் உங்களுக்கும் நெருக்கமான தொடர்பு உண்டா?

4.மரத்தை நட்டவன் அந்த மரத்தின்மூலம் பயன் பெறுவதற்குத் தடை செய்துவிட்டு, மரம் நடுவோம் என்று போதித்தால் அந்தப் போதனை நிறைவேறும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

5.யாழ்ப்பாணத்தில் வதியும் ஒருவர் பளையில் உள்ள தனது காணியில் இருக்கும் தேக்கு மரத்தைத் தறித்து, தனது வதிவிடத்திற்குக் கொண்டு செல்வதற்கான அனுமதியை வழங்க மறுப்பதன் மூலம் பிரதேசவாத சிந்தனையை மறைமுகமாக அமுல்படுத்துகிறீர்களா?

6. நாற்பது வருடத்திற்கு மேற்பட்ட தேக்குமரத்தின் ஆயுளை நீடித்து அந்த மரத்தை கொந்தல் அடையச் செய்வதன் ஊடாக நீங்கள் எதனைச் சாதிக்கப் போகிறீர்கள் என்பது போன்ற கேள்விகளை முன்வைக்கலாம்.

மரம்தறிப்பதற்கு அனுமதி எடுத்தல் என்பதன் நோக்கம் சட்ட விரோதமாக மரம் தறிக்கப்படுவதையும் பயன்தரு மரங்கள் பாதுகாக்கப்படுவதையும் நோக்கமாகக் கொண்டது. ஆனால் இங்கோ மரத்தின் சொந்தக்காரன் மரத்தைத் தறிப்பதற்குத் திண்டாடுகிறான். சட்டவிரோதம் சர்வசாதாரணமாக நடந்தேறுகிறது.

இலங்கைச் சட்டத்தின் வகைமைப்பாட்டில் பலா, ஈரப்பலா, பெண்பனை ஆகிய மரங்களைத் தறிப்பதற்கு அனுமதி பெறவேண்டும் என்றே வலியுறுத்தப்பட்டுள்ளது. எனினும் நமது வடக்கு மாகாணத்தில் மரங்களைத் தறிப்பதில் இறுக்கமான சட்டக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பரவாயில்லை. காலத்தின் தேவை என்று கருதிக் கொள்ளலாம். அதற்காக மரத்தின் சொந்தக்காரன் அதனைத் தறிப்பதற்கு அனுமதி வழங்க மறுப்பதென்பது உரிமை மீறல் சார்ந்த விடயமாகும்.

பொதுவில் அரச நிர்வாகத்தில் இருக்கும் தமிழர்கள் தமக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைக் கொண்டு நல்ல விடயங்களைச் செய்வதற்கு விரும்புவதில்லை என்ற கருத்தியல் உண்டு. அதே நேரம் சிங்கள அதிகாரிகளிடம் உதவி செய்கின்ற மனப்பாங்கும் பொதுமக்களை அலைக்கழிக்கக்கூடாது ஏன்ற பெருந்தன்மையும் இருப்பதான செய்திகளும் பொதுமக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகிறது. இதற்கும் சிலஉதாரணங்களை முன்வைக்க முடியும்.

வீட்டுத் திட்டம் கிடைத்தவர்கள் பனைமரம் தறிப்பது தொடர்பில் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. தமிழ்மண்ணில் நடந்த யுத்தம் காரணமாக கட்டிய வீட்டை இழந்தவர்கள் புதிய வீடொன்றைக் கட்டுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்த போது வீட்டிற்குத் தேவையான பனை மரத்தைத் தறிப்பதற்காக அவர்கள் கிராம சேவையாளரின் அலுவலகம், பிரதேச செயலகம், பனை அபிவிருத்திச் சபை என மாறி மாறி அலைந்தனர்.

தனதுசொந்தக்காணியில்உள்ள பனையை, வீட்டுத்திட்டத்தில் கிடைத்த வீட்டைக் கட்டுவதற்காகத் தறிப்பதற்கும் ஒரு பனைக்கு இருநூறு ரூபா என்று கட்டணம் செலுத்திய கொடுமையை வடக்கு மாகாண அரசு அறியுமோ என்னவோ தெரியவில்லை.

பனை மரத்தை வேறொருவருக்கு விற்பனை செய்யும் போது ஒரு பனைக்கு 200 ரூபா என்று அறவிடுவதில் நியாயம் இருக்க முடியும். இதைவிடுத்து தனது சொந்தக்காணியில் உள்ள பனையைத் தறித்து, அந்தக் காணிக்குள்; வீட்டுத் திட்டத்தில் தரப்பட்ட வீட்டைக் கட்டுவதற்கும் ஒரு பனைக்கு 200 ரூபா என அறவிடுவது எந்த வகையில் நியாயமாகும்.

இதுதவிர, பனை தறிப்பதற்காக பணத்தைக் கட்டுவதற்குக் காத்திருக்கும் காலம் வேறு கதை. என்றாவது ஒரு தினத்தில் பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர் பிரதேசசெயலகத்திற்கு வருவார். அன்றைய நாளில் பணம் கட்டினால் உண்டு. அந்த நாளில் உத்தியோகத்தர் விடுமுறையாயின் அந்தோகதிதான்.

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி சோமசுந்தரம் அவெனியுவில் இருக்கும் பனை அபிவிருத்திச் சபையின் அலுவலகத்திற்குத் தேடிச் சென்று காசு கட்டினால் மட்டுமே பனை தறிக்கும் அலுவல் நடந்தாகும்.

பனை தறிப்பதற்கான கட்டணத்தை அலுவலக நாட்களில் செலுத்தமுடியும் என்ற ஏற்பாடுகள் எதுவும் பிரதேச செயலகங்களில் இதுவரை செய்யப்படவில்லை. இந்த இலட்சணத்தில் பனை வளர்ப்போம் என்றால் யார்தான் முன்வருவார்கள்.


ஆக, சட்டங்கள் நியாயத்தை நிலைநாட்டுவதற்கும் ஒழுங்கீனங்களைத் தடுப்பதற்குமானது. இதைவிடுத்து சட்டமும் விதிமுறைகளும் உண்டு என்பதற்காக அந்த சட்டவிதிமுறைகளை நேர்மையான வழியையும் தடை செய்யப் பிரயோகித்தால் சட்டங்கள் மீறப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

எதுவாயினும் பளைப்பகுதியில் உள்ள அந்த இரு தேக்குமரங்களை அதன் உரிமையாளர் தறித்து தனதுவதிவிடத்திற்கு எடுத்துச் செல்வதற்கான வழிவகை என்ன? என்பதை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரியப்படுத்தவேண்டும். கூடவே மர நடுகையில் ஈடுபட்டு வரும் வடக்கு மாகாணத்தின் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் இது தொடர்பில் கவனம் செலுத்துவது நல்லது.

-ஆதித்தன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(குருமன்காடு)

வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் சாதிக்கும் சந்ததியின் ஏழாம் கட்ட நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி காலை 9 மணியளவில் கள்ளப்பாடு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முல்லை. கரைதுறைப்பற்று புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச்சேர்ந்த 40 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு புத்தகப்பை, தைத்த சீருடை, 10 குறிப்பு நூல்கள் என்பன வழங்கப்பட்டிருந்தன.

இச்செயற்றிட்டத்தில் ஏற்கனவே அதன் ஆறு கட்டங்களின் ஊடாக 312 மாணவர்கள் உள்வாங்கப்பட்டிருந்த நிலையில் இன்றுடன் இச்செயற்றிட்டம் 352 மாணவர்களை உள்வாங்கியிருக்கிறது.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

பெற்றோரில் ஒருவரை அல்லது இருவரையும் இழந்த மாணவர்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களில் உள்ள பிள்ளைகள், வறுமை கோட்டின் கீழ் கல்வியை தொடர வழியின்றி பாதியிலேயே பாடசாலை இடைவிலகலை எதிர்கொள்ளும் நிலையை எதிர்நோக்குகின்றனர். இதனை தவிர்க்கும் நோக்கிலேயே இச்செயற்றிட்டம் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

சாதிக்கும் சந்ததியின் ஏழாம் கட்டத்திற்கான பங்களிப்பினை பிரான்ஸ், கனடா மற்றும் லண்டனில் வாழும் ஐந்து ஈழத்தமிழர் வழங்கியுள்ளனர்.

இவர்கள் ஈழத்தமிழ் மாணவர்களின் பாடசாலை இடைவிலகலை தவிர்க்கவும் அவர்களை ஊக்கப்படுத்தவும் முன் வந்திருக்கின்றனர்.

இன்னும் பல கட்டங்களின் ஊடாக வறுமையில் கல்வியை தொடர கடினப்படும் பாடசாலைச்சிறார்களை அரவணைக்கும் கல்விக்காக இச்செயற்றிட்டம் தொடர்ந்தும் பயணிக்கும் என்றார். (அ-2-250)

# ஐந்து வருடங்கள் கடந்தும் வீதிபுனரமைக்கப்படவில்லை

## மக்கள் ஆதங்கம்

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வன்னிவிளான்குளம் பாலைப்பாணியூடாக வவுனியா மற்றும் மன்னார் ஆகிய இடங்களுக்கு பயணிக்கும் வீதி மக்கள் மீள்குடியேறி ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலும் பயணிக்கமுடியாத நிலையில் இருப்பதுடன் வீதியின் இருமருங்கும் பற்றைக்காடுகளால் மூடப்பட்டுள்ளதால் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் அச்சத்துடன் பயணிப்பதாக குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,


மேற்படி வீதியூடாக பாலைப்பாணி, மூன்று முறிப்பு, கொம்பு வைத்தகுளம் ஆகிய கிராமங்களில் வசிக்கின்ற நூற்றுக்கணக்கான மக்கள் தினமும் பயணிக்கின்றனர்.

அத்தோடு வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு செல்பவர்களும் இவ் வீதியூடாகவே பயணிக்கின்றனர்.

இவ்வாறிருக்கும் நிலையில் இவ்வீதியின் நடுப்பகுதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன் வீதியின் இருமருங்கிலும்உள்ள பற்றைக்காடுகள் வீதியை மறைக்கும் அளவிற்கு காணப்படுவதால் இதனூடாகப் பயணிக்கும் மு/வன்னிவிளான்குளம் அ.த.க.பாடசாலை, மு/ மாங்குளம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு செல்லும் மாணவிகளும் தனியாகச் செல்லும் பெண்களும் அச்சத்துடனேயே பயணிக்கவேண்டியுள்ளது.

வன்னி யுத்தம் நடைபெற்ற காலங்களில் இவ்வீதியின் அருகிலுள்ள காட்டுப் பகுதியில் குடும்பப் பெண்ணொருவர் அடித்து கொலை செய்யப்பட்டமை, மக்கள் மீள்குடியேறிய போது பாடசாலை மாணவி ஒருவரை பாலியல் வல்லுறவிற்கு முற்படுத்த முனைந்த போது கிராமமக்களால் காப்பாற்றப்பட்டமை போன்ற சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

எனவே வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழுள்ளகுறித்த வீதியை புனரமைப்பு செய்வதற்கு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரும் வடமாகாண போக்குவரத்து அமைச்சரும் துரித கதியில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள கிராமமக்களும் மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-15)




# இல்ல மெய்வல்லுநர் போட்டி

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளில் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வியாழக்கிழமை நடைபெறுகின்றது.

இதற்கமைய மு/ பாலைப்பாணி தமிழ் வித்தியாலயத்தில் இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி முற்பகல் 10 மணிக்கு பாடசாலை அதிபர் பா.பாலேஸ்வரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதேவேளை மு/ கரிப்பட்ட முறிப்பு அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர்போட்டி பிற்பகல் ஒருமணிக்கு பாடசாலை அதிபர் வை.விக்னேஸ்வரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் கல்வி வலயத்தின் தகவல் தொழில்நுட்ப பாட ஆசிரிய ஆலோசகர் தி.செந்தில்நாதன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் மு/பெரிய புளியங்குளம் அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி பிற்பகல் ஒருமணிக்கு பாடசாலை அதிபர் க.ஜெயதீபன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.பரந்தாமன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (அ-2-15)

# தொழிற்பயிற்சி அதிகாரசபை விண்ணப்பம் கோருகின்றது

தொழிற்பயிற்சி அதிகாரசபையின் வவுனியா அலுவலகத்தினால் பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக வவுனியா, மன்னார் மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஆர்.பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய ப்யிற்சிநெறிகள் பகுதி நேரமாகவும் முழுநேரமாகவும் ஆரம்பிக்கப்படவுள்ளன. கீழ்வரும் பயிற்சிநெறிகளுக்கு பாடசாலையை விட்டு விலகியவர்கள், தொழில் வாய்ப்பின்றியுள்ள இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கமுடியும்.

இவ்ஆண்டுக்கான பயிற்சிநெறிகளாக வைரவ புளியங்குளத்தில் கணனி மென்பொருள் தொழில்நுட்பவியலாளர், மின்னியலாளர், தகவல் தொடர்பாட்ல் தொழிலநுட்பம், குளிரூட்டலும் வாயு சீராக்கல், காய்ச்சி இணைப்பாளர் பயிற்சிகளும் தோணிக்கல் நிலையத்தில் தோல் உற்பத்தியாளர், தையல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயிற்சிகளும் கோவில்குளம் நிலையத்தில் அழகுக்கலை, தையல், கணனி வன்பொருள் பயிற்சிகளும் மதவுவைத்தகுளம் சென்சுலான் நிலையத்தில் கணனி கிராபிக் பயிற்சியும் செட்டிகுளம் நிலையத்தில் நீர்குழாய் பொருத்துநர், மின்னியலாளர், தச்சுவேலை பயிற்சிகளும் கல்மடு பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சியும் பூந்தோட்டம் நிலையத்தில் தச்சுவேலை, அலுமினியம் புனைபவர் பயிற்சிகளும் நடைபெறவுள்ளன.

எனவே, இதற்கான விண்ணப்பங்களையும் மேலதிக விபரங்களையும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல. 108, புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம், வவுனியா எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கமுடியும். அல்லது 024 2221617 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்ளமுடியும் எனவும் அவர் கூறினார். இந்தப் பயிற்சிநெறிகளை நிறைவுசெய்வதன் ஊடாக என்விகியூ மட்டத்திலான சான்றிதழை பெற முடிவதுடன், அரச அங்கீகாரம் மிக்க பயிற்சிநெறியையும் நிறைவுசெய்ய முடியும்.(அ-2)

# வீட்டில் தீவிபத்து மனைவி மரணம் கணவன் காயம்

(குருமன்காடு)

வவுனியா பொது வைத்தியசாலையில் எரிகாயங்களுடன் இருவர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை வவுனியா உக்குளாங்குளத்தில் அமைந்துள்ள வீடொன்றில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தினாலேயே கணவனும் மனைவியும் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மனைவி மிக ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் இறந்து விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது .இவ்வாறு இறந்தவர் கஜேந்திரன் சுபாஜினி என்பவராவார்.

இதேவேளை காயமடைந்த பெண்ணின் கணவர் வெளிநாட்டில் இருந்து அண்மையில் வந்தவர் என தெரியவருகின்றது.

இந் நிலையில் இச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2-250)





வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நெடுங்கேணி பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களிலிருந்து பாடசாலை செல்லும் 550 மாணவர்களுக்கு புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் தாயக உறவான யோகானந்தத்தினால் கற்றல் உபகரணங்களுக்கான நிதியுதவி அண்மையில் வழங்கப்பட்டது. ஒலுமடு அ.த.க.பாடசாலை, சேனைப்புலம் உமையாள் வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்கே இக் கற்றல் உபகரணங்கள் த.தே.கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனினால் வழங்கி வைக்கப்பட்டது.

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகிந்தவின் குற்றங்கள் அம்பலப்படுவது போல அவுஸ்திரேலியாவும் வெளிப்படுகிறது

முதல் தடவையாக மக்கள் முன்னைய அரசாங்கத்தை தோற்கடித்து அகற்றிய தேர்தலின் பின்னரான சூழலில், தோற்கடிக்கப்பட்ட ராஜபக்ச ஆட்சியினுடைய தீய செயற்பாடுகள் பற்றி மக்கள் முன் முன்வைக்கப்பட்டு வருகின்றமையானது புதிய ஜனாதிபதி பற்றிய கௌரவத்தை உயர்த்துவதற்கும் அவரும் அவ்வுடைய ஆதரவாளர்களும் ஒரு புதிய சகாப்தம் நாட்டில் மலர்ந்து விட்டதாக கோருவதற்கும் வழி வகுக்கின்றது.

அதே நேரத்தில், மைத்திரி மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கம் அடங்கலான மகிந்த ராஜபக்சவின் தீவிர ஆதரவாளர்களது குற்றங்கள் மற்றும் பாசாங்குத்தனங்களையும் ஊடகங்கள் அம்பலப்படுத்தி வருகின்றன. சித்திரவதைகளிலிருந்து தப்பி அவுஸ்திரேலியாவிற்கு வந்து அரசியல் தஞ்சம் கோரும் தமிழர்களை தடுத்து நிறுத்தும் முயற்சியில் முந்தைய தொழிற கட்சி மற்றும் தற்போதைய பழமைவாத கட்சி அரசாங்கம் ஆகியன வெறுமனே ராஜபக்சவிற்கு வெளிப்படையாக கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்திற்கு மேலாக ஆதரவழிப்பதோடு நின்றுவிடாது அவரை காப்பாறுவதற்கு முழு அளவிலும் உதவின.

சமீப காலங்களில், இனப்படுகொலை மற்றும் போர் குற்றங்கள் போன்ற மிகவும் கடுமையான குற்றச்சாட்டுக்களிலிருந்து ராஜபக்ச விடுபட தற்போதைய பிரதம மந்திரி றொனி அபோட் முண்டு கொடுத்து நின்றார்.

அரசியல் தஞ்சம் கோருவோரை திருப்பியனுப்பும் இரு நாட்டு உடன்படிக்கையானது சர்வதேச சட்டத்தை மீறுகின்றதொன்றாகும். இது 2009 ஆம் ஆண்டு 70,000 அப்பாவி தமிழர்கள் நன்கு திட்டமிடப்பட்ட இன வழிப்பில் படுகொலை செய்யப்படதன் பின்னரான தொடர்ச்சியாக இது அமைகின்றது.

கனடா மற்றும் இந்தியா பொதுநலவாய மாநாட்டு கூட்டத்தில் பங்கேற்காமல் புறக்கணித்த போது அவுஸ்திரேலிய பிரதம மந்திரி றொனி அபோட் அதில் பங்கேற்க 2013 இல் கொழும்பு சென்றமையும், கொழும்பு சிறைகளில் நடைபெறும் சித்திரவதைகள் பற்றி எதுவும் கருத்தில் கொள்ளாமல் அதிர்ச்சியூட்டும் விதமாக ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரீசன் இரண்டு கடற்படை ரோந்துப் படகுகளை ராஜபக்சவிடம் கையளித்தமையும், அவுஸ்திரேலிய இராணுவ தளபதி மற்றும் மூத்த குடிவரவு துறை ஊழியர்கள் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளராகவிருந்த கோத்தபாய ராஜபக்சவை கடந்த சித்திரை மாதம் கான்பெராவிற்கு வரவேற்று அவருடன் பரிசுகள் பரிமாறிக் கொண்டமையும் போர்க் குற்றவாளியை பாதுகாக்க அவுஸ்திரேலியா செய்தனவற்றில் விஞ்சியனவாக உள்ளது.

இலங்கை மீதான ஐ.நா.வின் போர்க் குற்ற விசாரணையை தடுக்க கடந்த பங்குனி மாதம் அவுஸ்திரேலியா எடுத்த முயற்சியானது எல்லாவற்றிலும் கண்டனத்திற்குரியதாக அமைகிறது. இதில் அவுஸ்திரேலியா தனது நட்பு நாடுகளான அமெரிக்க, இங்கிலாந்து, மற்றும் கனடா போன்ற நாடுகளிற்கு எதிராக சீனா, ரஷ்யா, சவூதி அரேபியா போன்ற மனித உரிமை சாம்பியன்களுடன் இணைந்து வாக்களித்துள்ளது.

ராஜபக்சவின் சகாவான தற்போதைய ஜனாதிபதி, குடும்ப சர்வாதிகாரத்தை மூழ் கடித்தல் என்று வெளிக்காட்டிக் கொண்டு தமது சகாக்களை காக்க எத்தனிக்கின்றார். இருந்த போதிலும், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் எதனை பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் முனைகின்றன என்பது பற்றிய தகவல்களை துல்லியமாக ஆய்வு செய்ய வேண்டியது முக்கியம்.

நாம் முதலில் தேர்தல் நடந்த நாளான தை மாதம் 8 ஆம் திகதி இரவைப் பார்ப்போமானால், நள்ளிரவு நெருங்க நெருங்க ராஜபக்சவின் தோல்வியும் நெருங்கிக் கொண்டிருந்தது. பின்னர், அமைதியான முறையில் அதிகாரத்தை கையளித்ததாக வெளிநாட்டு அரசாங்கங்கள் பாராட்டு தெரிவித்தன.

உண்மையில், தேர்தலை மதிப்பிழக்க செய்துவிட்டு இராணுவத்தை வீதிக்கு இறக்கி அவசரகால நிலை உத்தரவை பிறப்பிப்பதற்கு ராஜபக்ச தயாராகிக் கொண்டிருந்தமைக்கான ஆதாரங்கள் தற்போது வெளியாகிக் கொண்டிருக்கின்றன. தேர்தல் முடிவுகளை பார்த்து தனது தோல்வியை உணர்ந்து கொண்ட பின்னர் மகிந்த ராஜபக்ச சகோதரர் கோத்தபாய மற்றும் உச்ச நீதிமன்ற பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அடங்கலான தனது விசுவாசிகள் குழுவை அழைத்தார் என்று கூறப்படுகிறது.

இந்த சதிப்புரட்சியின் அங்கமாக அட்டோனி ஜெனரல் அழைக்கப்பட்டு இதில் இறப்பர் முத்திரை குத்துமாறு கேட்கப்பட்டார். இதற்கு அட்டோனி ஜெனரல் மறுத்து விட ஏனைய சதிகாரர்களுடன் இணைந்து சதி நடவடிக்கைக்கு ராஜபக்ச முனைந்தார் என கொழும்பு டெலிகிராப் என்ற செய்தி ஊடகம் சுட்டிக்காட்டியது. இது ஒரு ஊடக வதந்தியேயல்ல. இந்த சதிப்புரட்சி திட்டமிடப்பட்டதை கோத்தபாய ராஜபக்ச மறுதலிக்கையில், புதிய வெளி விவகார அமைச்சரான மங்கள சமரவீர இதனை பகிரங்கமாக ஏற்றுக்கொள்வதோடு இது குறித்து பொலிஸ் விசாரணையையும் கோரியுள்ளார். இது புதிய அரசாங்கத்திற்கு மற்றொரு சோதனையாக போகிறது.

வெள்ளை வான் கடத்தல் கலாச்சாரத்தின் பின்னால் கோத்தபாய ராஜபக்சவே இருப்பதாக ராஜபக்சவின் முன்னால் அர்ப்பணிப்பான அமைச்சரான மேர்வின் சில்வா டெய்லி மிரர் பத்திரிகைக்கு கூறியிருப்பதை பார்க்கையில், ஜனநாயக தேர்தலை அகற்ற சதித் திட்டம் தீட்டியமையே எல்லாவற்றையும் விட மிகவும் மோசமானது என கூறி விட முடியாது.

ஆயிரக்கணக்கான் இளையோரை இராணுவம் கடத்தி சிறைகளிற்கும் சித்திரவதை முகாம்களிற்கும் கொண்டு செல்லும் ஒரு தமிழினவழிப்பு [illegible] வான்கள்" [illegible]

இப்படியான வெள்ளைவான் கலாச்சாரம் இருந்ததாக இதுவரை அரசாங்கத்தில் இருந்தவர்களில் எவருமே ஒப்புக் கொண்டதில்லை.

ஆனால் இது குறித்து போலீசில் முறைப்பாட்டை கூட மேவின் சில்வா பதிவு செய்துள்ளார். பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை மற்றும் பத்திரிகை அலுவலகங்கள் மீதான தாக்குதல்களில் கோத்தபாயவுக்கு உள்ள தொடர்பு என்பன பற்றி இக் குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த குற்றங்களை கோத்தாபாய வழிநடத்த மேர்வின் சில்வாவின் ஒத்தாசைகளும் இருந்தது என்பதை இங்கு மறந்துவிடக்கூடாது.

தை மாதம் 9 ஆம் திகதி அதிகாலை ஒரு முற்று முழுதான சர்வாதிகாரியாக வருவதற்கு மகிந்த சதி செய்து கொண்டிருந்தபோது, இவர்களது 10 வருட ஊழல் நிறைந்த ஆட்சியின் விளைவாக வரப்போகும் தாக்கங்களை உணர்ந்தவர்களாக இவரது குடும்பம் அங்கும் இங்குமாக சிதறி வேறு இடங்களிற்கு போக எத்தனித்தார்கள். மகிந்தவின் சகோதரர்களான பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்த பசில் மற்றும் கோத்தபாய ஆகியோர் தாம் தோல்வியடையப் போவதாக உணர்ந்தவுடன் நாட்டை விட்டு பறந்து விட்டனர் என்று இலங்கையில் உள்ள ஊடகங்கள் செய்தி தெரிவித்தன.

மகிந்தவின் மகன்கள் சீனாவிற்கு போக இருந்ததாக உறுதிப்படுத்தப்படாத அறிக்கை ஒன்று கூறியது. பெரும்பாலான மக்கள் நடந்தும் சைக்கிளிலும் முச்சக்கர வண்டிகளிலும் பயணம் செய்யும் நாட்டில், இவர்கள் லம்போகினி வாகனங்களிலும் அரசாங்கம் வழங்கிய உலங்குவானூர்திகளிலும் நாட்டினுள் பயணம் செய்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

அதேவேளை, ஒரு தசாப்தமாக ராஜபக்ச குடும்பத்தின் ஆடம்பர ஊதாரித்தனங்களை கடமையுணர்வுடன் தீவிரமாக மறுதலித்து வந்த அரசிற்கு சொந்தமான தொலைக்காட்சி ஒன்று, ராஜபக்ச குடும்பத்தின் நீதியற்ற ஆடம்பரங்கள் பற்றி வெளியிடும் சந்தர்ப்பத்தை எடுத்துள்ளது.

லம்போகினி வாகனங்களை தேடி ராஜபக்ச வீட்டினுள் புகுந்து அதிரடி சோதனை நடத்திய போலீசார், அங்கு குளிரூட்டப்பட்ட கழிப்பறைகள், நிரந்தர டிஜிட்டல் வீடியே? திரைகள் என்பன அடங்கிய ஆடம்பர உல்லாச வசதிகளை அவதானித்துள்ளனர்.

இலத்திரனியல் ஊடகங்களுடன் பல பத்திரிகைகளும் இணையத்தளங்களும் சொத்து குவிப்பு தொடர்பாக பல விடையங்களை வெளியிட்டுள்ளன. ஒன்றும் இல்லாமல் அரசியலிற்கு வந்தவரும் தற்போது மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்காவில் இருப்பதாக கூறப்படும் பசில், இந்த ஆட்சியில் பல விடுதிகள் மற்றும் ஆடம்பர வீடுகள் அடங்கலான ஏகப்பட்ட சொத்துக்களை குவித்துள்ளதாக மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அரச திறைசேரி பணத்தை பசில் முறையற்ற விதத்தில் தேர்தல் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தியதாக மேர்வின் மேலும் தெரிவித்தார்.

பல பில்லியன் கணக்கான டொலர்கள் ராஜபக்ச ஆட்சியில் திருடப்பட்டது எனவும் அவற்றை கண்டுபிடிப்பதற்கு உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் இந்தியாவின் ரிசர்வ் வங்கி என்பன உதவ வேண்டும் எனவும் அமைச்சரவை பேச்சாளரும் புதிய சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரட்ன இந்த வாரம் ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவித்தார்.

இதில் மிகவும் சிலவே இலங்கைக்கு வெளியில் இருக்கும் இலங்கை தொடர்பாக கடந்த தசாப்தத்தில் அடிப்படை ஆராய் வேனும் செய்தவர்களிற்கு புதியனவாக இருக்கும். நாம் இதில் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியது என்னவெனில், தற்போதைய ஜனாதிபதியும் இந்த கொடூரமான. ஊழல் மிகுந்த ஆட்சியில் ஒரு முக்கிய பங்காளியாக இருந்துள்ளார் என்பதாகும்.

இந்த பத்து ஆண்டுகளில் இவர் மூத்த முக்கிய அமைச்சராக இருந்துள்ளார். அத்துடன், 70,000 தமிழ் மக்கள் 2009 இல் கொல்லப்பட்ட போது இவர் சிறிது காலம் தற்காலிக பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்ததாக அவரே தனது வாயால் தெரிவித்துள்ளார். அவர் பெருமையுடன் இதனை தேர்தல் காலத்தில் கூறியதன் காரணம் என்ன வெனில், தனது எதிர்வேட்பாளர் போரை முடிவிற்கு கொண்டு வந்தவர் என்ற பெரு மையை சிங்கள மக்கள் மத்தியில் கொண்டி ருப்பவரென்பதால், அந்த போரில் தானும் முக்கிய பங்கு வகித்ததாக வெளிக் காட்டி சிங்கள மக்களின் மனங்களை வெல்லவேயாகும்.

எனவே, இவரும் ராஜபக்சாக்களை போல போர்க்குற்றவாளியே. இவரும் ஏனைய மகிந்த ராஜபக்சவுடன் தோளோடு தோள் நின்ற அமைச்சர்கள்போல இந்த ஊழல் ஆட்சிக்கு உடந்தையே. மக்களின் பணப் பைகளை நேரடியாக இவர் திருடியிருக்காதிருப்பினும் இவரும் இதனால் வந்த சலுகைகளை பெற்றவரே. தம்மை காத்துக்கொள்ள கட்சிதாவிய ஏனையோரைப் போலவே, தற்போது இந்த புதிய ஜனாதிபதியும் நாட்டிற்கு உகந்ததை செய்வது என்ற புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட அவாவிற்குப் பின்பாக மறைய விரும்புகிறார்.

நாட்டில் நிலவும் தலையாய பிரச்சினையான வடக்கு மற்றும் கிழக்கில் நிலவும் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறை தொடர்பாக பேசுவதற்குகூட சிறிசேனாவிற்கு எண்ணம் இருக்கவில்லை. தமிழர்கள் செறிந்து வாழும் இடங்களில் கொடிய இராணுவ ஆக்கிரமிப்பு தொடரப்போவதை அவர் தெளிவாக கூறியுமுள்ளார். அதாவது, அபகரிக்கப்பட்ட தமிழர்களின் நிலங்களும் வீதிகளும் மீளக் கையளிக்கப்படப் போவதில்லை. தமிழர்கள் தமது எதிர்காலத்தை தாமே தீர்மானிப்பதை அனுமதிக்கப் போவதில்லை. அதாவது, தமிழினவழிப்பு சிறிசேனாவின் ஆட்சியின் கீழ் தொடரத்தான் போகிறது. உலக நாடுகளும் அது குறித்து தமிழர்களிற்காக எதனையும் செய்துவிடப் போவதுமில்லை.

சிறிசேனவும் ஏனைய மகிந்த ராஜபக்சவின் மூத்த அமைச்சர்களுடன் விசாரணைகளை எதிர்கொள்ள வேண்டும் என்பது தவிர்த்து விட முடியாத உண்மையாகும். இப்போதே இவர் ஒரு நல்ல மீட்பாளர் என வெளிநாட்டு அரசாங்கங்கள் இவரின் புகழ் பாட ஆரம்பித்திருப்பதால் இவர் இதிலிருந்து விலக்களிக்கப்படுவார் என உறுதிபட கூறலாம். உலகின் மிகவும் தீய ஆட்சிகளில் ஒன்றிற்கு ஆதரவாகவும் உடந்தையாகவும் இருந்தவர் இவர் என்பதை சுயநல நோக்கங்களை மட்டுமே கொண்ட அவுஸ்திரேலியா போன்ற வெளி நாடுகள் தட்டிக்கழித்து விடுவர் அல்லது மறந்து விடுவர்.

-ரிறிவர் கிராண்ட்- குளோபல் தமிழ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை ராஜபக்ஷ குடும்பமே அழித்தது

## அமைச்சர் சம்பிக்க குற்றச்சாட்டு



மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக நிலக்கரி இறக்குமதி செய்யும் உரிமையை கசினோ சூதாட்டக்காரருக்கு வழங்கி அதன்மூலம் பெற்றுக்கொண்ட இலஞ்சப் பணத்தில் தான் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன்மார் செய்மதிகளை விண்ணுக்கு அனுப்பி வைத்தனர் எனக் குற்றம் சாட்டும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை ராஜபக்ஷ குடும்பமே அழித்தது என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் தலைவராக நியமனம் பெற்ற ரொஷான் குணரத்ன நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொலன்னாவையில் உள்ள அலுவலகத்தில் உத்தியோக பூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றார். இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்றதும் மக்கள் மனதில் அது ஊழல் மோசடிகள் நிறைந்த நிறுவனமென்ற நினைப்பே மேலெழுகின்றது.

வாகனங்களிலிருந்து எரிபொருட்களை திருடுவது, வாகனங்களை சொந்தத் தேவைகளுக்காக பயன்படுத்துவது, எரிபொருள் நிரப்பு நிலையங்களை வழங்கும் போது இலஞ்சம் வாங் குவது போன்ற செயல்கள் தொடர்பிலேயே மக்கள் மத்தியில் பேசப்படும். ஆனால் இதற்கு மேலான பயங்கரமான மறுபக்கம் இக் கூட்டுத் தாபனத்தில் உள்ளது. இது மக்களுக்கு தெரியாது. எரிபொருட்கள், நிலக்கரி, காஸ் கொள்வனவு செய்யும் போது பாரிய மோசடிகள் இடம்பெறுகின்றன.

2011 ஆம் ஆண்டில் கூட்டுத் தாபனத்தின் நிர்வாகம் ஐந்து தடவைகள் எரிபொருட்களை எமக்கு வழங்கவில்லை. எரி பொருள் தட்டுப்பாட்டை ஏற்படுத்தினார்கள். செலவை அதிகரித்தனர். பலகோடி ரூபாய்களை கொள்ளையடித்தனர்.

இதுதொடர்பாக பல தடவைகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் முறையிட்டோம். ஆனால் இதனை தடுக்க எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எரிவாயு மூலம் ஒவ்வொரு தொன்னுக்கும் 15 டொலர் மேலதிகமாக பெற்றுக் கொள்ளப்பட்டது.

நிலக்கரி கொள்வனவுக்கான கேள்வி கோரல்கள் ஒரு போதும் மேற்கொள்ளப்படவில்லை. இதனை கொள்வனவு செய்வதற்கான உரிமை கசினோ சூதாட்டக்காரர்களுக்கு வழங்கப்பட்டது.

இதனூடாக பெற்றுக் கொண்ட பணம் மூலமே ஜனாதிபதி மகிந்தவின் பிள்ளைகள் விண்வெளிக்கு செயற்கை கோள்களை அனுப்பினார்கள். இனிமேல் இவ்வாறான ஊழல் மோசடிகளுக்கு இடமளிக்க மாட்டோம். தராதரம் பார்க்காது தண்டனை வழங்கப்படும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடையும் நிறுவனமல்ல. ஆனால் அதனை பணம் வீணாகும் நிறுவனமாக காண்பித்தனர். ஆனால் உண்மை அதுவல்ல. ராஜபக்ஷவின் ஆட்சியின் செலவுக்காக பணத்தை பெற்றுக் கொள்வதற்கே இந்நிறுவனம் சின்னாபின்னமாக்கப்பட்டது என்றார். இந் நிகழ்வில் பிரதியமைச்சர் பாலித ரங்கே பண்டார உட்பட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மொஹான் குறித்து விரைவில் தீர்மானம் எடுக்கப்படவேண்டும்

## ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் குறித்து விரைவில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி. கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்தல் சுயாதீன ஆணைக்குழுக்களை ஸ்தாபித்தல் உள்ளிட்ட 100 நாட்கள் வேலைத் திட்டம் தேசிய நிறைவேற்றுப் பேரவையினால் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

தகவல் அறிந்து கொள்ளும் சட்டத்தை அமுல்படுத்தல், கடந்த காலங்களில் இடம்பெற்ற கொலைகள், கடத்தல்கள், காணாமற் போதல சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துதல். விசாரணை நடத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும் நோக்கில் விசேட குழுவொன்றை நிறுவுதல் மற்றும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் இடைக்கால வரவு செலவுத் திட்டமொன்றை முன்வைத்தல் உள்ளிட்ட காரணிகள் குறித்து கண் காணிக்கப்பட்டு வருவதாக ஜே.வி. பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரித்துள்ளார்.

அரசாங்கத்தின் 100 நாட்கள் திட்டம் குறித்து ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# 7 உறுப்பினர்களை இழந்தது பிவிதுரு ஹெலஉறுமய கட்சி

ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து விலகி, பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பிலவுடன் இணைந்து கொண்ட பிரதேச சபை உறுப்பினர்கள் 7பேர், மீண்டும் ஜாதிக ஹெல உறுமயவில் இணைந்து கொண்டதாக அக்கட்சியின் ஊடகச் செயலாளர் நிசாந்த ஸ்ரீ வர்ண சிங்க தெரிவித்தார்.

சீதாவாக்க பிரதேச சபை உறுப்பினர் துன்தலஹேனே ரதனவங்ச தேரர், பாணந்துறை பிரதேச சபை உறுப்பினர் சாந்த பண்டார, பேருவளை பிரதேச சபை உறுப்பினர் சுமித் நிஸ்சங்க, கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபை உறுப்பினர் ரோஹன வில்பட் பெரேரா, கம்பஹா பிரதேச சபை உறுப்பினர் நலின் சமந்த, பதியதலாவ பிரதேச சபை உறுப்பினர் அஜித் ரணவக்க, உடுதும்பர பிரதேச சபை உறுப்பினர் அநுருத்த மடுகல்ல ஆகியோரே ஜாதிக ஹெல உறுமயவல் மீண்டும் இணைந்து கொணடனர்.

ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து விலகியமைக்காக மன்னிப்பு கேடடுக்கொண்டே இவர்கள் எழு வரும் மீண்டும்தம்முடன்இணைந்து கொண்டனர் என்று நிசாந்த ஸ்ரீ வர்ண சிங்க மேலும் தெரிவித்தா. (இ-5)

# ஊடகப்பணிப்பாளராக தர்மசிறி ஏக்கநாயக்க

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஊடகப் பணிப்பாளராக தர்மசிறி ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளரான தர்மசிறி பண்டார ஏக்கநாயக்க நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

தர்மசிறி தனியார் ஊடகமொன்றில் செய்தி தயாரிப்பாளர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளராக நியமிக்கப்படும் வரையில் தர்மசிறி அந்த தனியார் நிறுவனத்தில் செய்திப் பிரிவில் கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## ஆசையும் அதிகாரமும்

ஒரு ஊரிலே மன்னன் இருந்தார்.

அவர் அயலில் உள்ள தேசத்துடன் படையெடுக்க வேண்டு மென்று நினைத்துக் கொண்டார். அந்த இடத்தையும் தனது நாட்டுடன் சேர்த்துக் கொள்ள வேண்டு மென்பது அவரது ஆசை. எப்போது படையெடுக்கலாம் என்று யோசனை செய்தார்.

இப்படியாக யோசனை செய்து கொண்டிருந்த சமயத்திலே ஒரு பெரியவர் அவரைத் தேடிவந்தார். "என்ன மன்னா யோசனை?" என்றார்.

மன்னர் தனது யோசனையைச் சொன்னார்.

இந்த வேளையிலே மன்னருக்குத் தாகம் எடுத்தது. தண்ணீர் குடிக்க வேண்டும் போல் இருந்தது. உடனே அரண் மனை பணியாளரைக் கூப்பிட்டார்.

"போய் எனக்கு தண்ணீர் கொண்டுவா" என்று சொன் னார். அவர் சென்று ஒரு குவளையிலே தண்ணீர் கொண்டு வந்து ராஜாவிடம் கொடுத்தார். ராஜா அதை வாங்கி குடிப்பதற்காக வாய்க்கருகில் கொண்டு சென்றார்.

அந்த நேரத்திலே, "மன்னா... சற்று பொறுங்கள்!" என்று அந்தப் பெரியவர் சொன்னார். ஆவலோடு தண்ணீரைப் பருக வாய்க்கருகில் கொண்டு சென்ற மன்னன் அப்படியே நிறுத்திக் கொண்டார். பெரியவரை பார்த்தார்.

உடனே அந்தப் பெரியவர் சொன்னார்.

"மன்னா இப்போது உங்களை விட வலிமையுள்ள ஒரு சக்தி உங்களுக்கு தண்ணீர் கொடுக்க மறுக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படியென்றால் இப்போது ஒரு குவளை தண்ணீரை என்ன விலை கொடுத்து வாங்கு வீர்கள்?" என்று கேட்டார்.

"இப்போது எனக்கு இருக்கும் தாகத்திற்கு... என்னுடைய அரசாங்கத்திலே பாதியையாவது கொடுத்து இந்த தண் ணீரை வாங்கத் தயங்கமாட்டேன்" என்றார்.

"சரி இப்போது கையிலுள்ள தண்ணீரை பருகுங்கள்" என்றார் பெரியவர்.

மன்னர் ஆவலாக தண்ணீரை பருகி முடித்தார். சற்று நேரம் கடந்த பின்னர் மறுபடியும் இந்தப் பெரியவர் பார்த்துக் கேட்டார், "மன்னா... நீங்கள் ஒரு குவளை தண்ணீரை குடித்து முடித்து விட்டீர்கள்.... இப்போது அந்தத் தண்ணீர் வெளியில் வரக்கூடிய பாதை அடைப்பட்டு போய்விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை வெளியேற்றுவ தற்கு நீங்கள் எவ்வளவு செலவு செய்வீர்கள்? என்று கேட் டார்.

மன்னர் யோசித்தார். "அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், என்னுடைய அரசாங்கம் பூராகவும் அதற்கு ஈடாக தரவும் தயங்க மாட்டேன்" என்றார்.

இப்போது அந்தப் பெரியவர் சொன்னார் "எந்த அரசாங் கத்தின் மதிப்பு ஒரு குவளை தண்ணீர் அளவுக்குக்கூட இல்லையோ அந்த அரசாங்கத்தை அடைய வேண்டுமென்ற பேராசையில் மனிதர்கள் தங்களுடைய சகோதரர்கள் கூடவே சண்டையிடுகிறார்களே... அதிலே ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?" என்றார்.

மன்னருக்கு இப்போதுதான் அர்த்தம் புரிந்தது. மனதிலே தெளிவு உண்டானது. தன் மனதிலே உண்டான வெறியை விரட்டி அளித்தார். அதன்பின் நிம்மதியாக ஆட்சி செய்தார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம நீதியரசரை பதவி விலக்க கோரி உயர் நீதிமன்றம் முன்பாக போராட்டம்



பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அந்த பதவிக்கான தகுதியில்லாத நிலையிலும் சட்டத்திற்கு முரணாகவும் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டதாக சட்டத்தரணி ஜே.சி. வெலியமுன தெரிவித்துள்ளார்.

. கொழும்பு புதுக்கடை உயர் நீதிமன்றத்திற்கு எதிரில் நேற்று நடைபெற்ற பிரதம நீதியரசரை பதவி விலக கோரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை அந்த பதவியில் இருந்து நீக்கும் போது நாடாளுமன்றத்தில் இணக்கத்தை பெறவில்லை.

அரசியலமைப்பின் 107 ஆம் ஷரத்திற்கு அமைய பிரதம நீதியரசரை பதவியில் இருந்து நீக்குமாறு நாடாளுமன்றம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்க வேண்டும்.

அப்படியான யோசனை எதுவும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாது, பிரதம நீதியரசர் பதவிக்கு வெற்றிடம் ஏற்படாத நிலையிலேயே மொஹான் பீரிஸ்சை முன்னாள் ஜனாதிபதி பிரதம நீதியரசராக நியமித்தார்.

இந்த நியமனமானது அடிப்படையற்றது என்ற காரணத்தினால் மீண்டும் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தல் தினத்தில் ஒரு வேட்பாளரின் வீட்டில இருந்தவர், பிரதம நீதியரசர் பதவிக்கோ வேறு நீதிபதி பதவிக்கோ பொருத்தமற்றவர் என்பது எம்முடைய நிலைப்பாடு.

இதனால், தொடர்ந்தும் நீதிமன்றத்தின் பதவியை அவமதிப்புக்கு உள்ளாக்காது மொஹான் பீரிஸ் பதவியில் இருந்து விலக வேண்டும் என நாம் கோருகிறோம் எனவும் வெலியமுன குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சிரேஷ்ட சட்டத்தரணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், மொஹான் பீரிஸ் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டது சட்டரீதியானதல்ல என சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# அகதிகளுக்கு எதிராக ஆஸி நீதிமன்றம் தீர்ப்பு

**இந்தியாவின் பாண்டிச்சேரியில் இருந்து பல மாதங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாகச் சென்ற 157 புகலிடக் கோரிக்கையாளர்களின் வழக்கு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.இதன் போது உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் படகில் வந்தவர்கள் படகில் தடுத்து வைப்பது தவறானது என்ற தீர்ப்பை, நேற்று ஏகமனதாக தவறல்ல என்று தீர்ப்பு வழங்கியுள்ளது நீதிமன்றம்.**

குறிப்பாக இந்த தீர்ப்பினை 2 பேர் ஆதரவாகவும் 2 பேர் சற்று எதிர்த்தும் ஒருவர் முற்றாக எதிர்த்தும் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.இந்தியா வரைக்கும் இவர்களை கொண்டு சென்று இறுதியாக அவர்களை நவுறு தீவுக்கு அனுப்பியிருந்தனா.

நவுறு தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த 157 புகலிட கோரிக்கையாளர்களை அவுஸ்திரேலிய அதிகாரிகள் சட்டத்திற்கு உட்பட்ட வகையிலேயே சுங்க கப்பலில் தடுத்து வைத்திருந்ததாக நீதிபதிகள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

கடந்த ஜூன் 29 ஆம் திகதி கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் 16 கடல் மைல் தொலைவில் படகில் இயந்திர கோளாறு ஏற்பட்ட நிலையில், அதில் இருந்த 157 பேர் அவுஸ்திரேலிய அதிகாரிகளினால் காப்பாற்றப்பட்டனர்.

குடியேற்ற அமைச்சர் ஸ்கொட் மொரிசன் உள்ளிட்ட அவுஸ்திரேலிய தேசிய பாதுகாப்பு குழு இந்தியாவில் இருந்து வந்ததாக கூறப்படும் மேற்படி புகலிட கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்ப தீர்மானத்தை எடுக்கும் என நம்பப்படுகிறது.எவ்வாறாயினும் உயர் நீதி மன்றத்தின் இந்த தீர்ப்பு புகலிட கோரிக்கையாளர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# சொத்து குவிப்பு வழக்கு ஜோடிக்கப்பட்டதாம்

"சொத்து குவிப்பு வழக்கு ஜோடிக்கப்பட்டது" என்று கர்நாடக உயர் நீதிமன்றில் ஜெயலலிதா தரப்பு மூத்த சட்டத்தரணி குமார் இறுதி வாதத்தில் எடுத்துரைத்தார். இத்துடன் ஜெயலலிதா தரப்பு சட்டத்தரணிகள் வாதம் நிறைவடைந்தது.

சொத்து குவிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதா உட்பட 4 பேருக்கும் தண்டனை வழங்கி பெங்களூர் தனிநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இந்த தீர்ப்பை எதிர்த்து அவர்கள் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளனர். கர்நாடக நீதிமன்ற தனி நீதிபதி குமாரசாமி முன்னிலையில் இந்த மனு மீதான விசாரணை கடந்த 5ஆம் திகதி தொடங்கி தினமும் நடைபெற்று வருகிறது.

முதல் 5 நாட்கள் ஜெயலலிதா சார்பில் ஆஜரான மூத்த சட்டத்தரணி குமார் ஆஜராகி வாதிட்டார். அதன் பிறகு ஜெயலலிதா சார்பில் மூத்த சட்டத்தரணி நாகேஸ்வரராவ் தொடர்ந்து 8 நாட்கள் ஆஜராகி பல்வேறு முக்கியமான விடயங்களை எடுத்து வைத்து வாதிட்டார். ஜெயலலிதாவுக்கு வந்த வருமானங்கள் குறித்த முழு விபரங்களையும் தாக்கல் செய்தார். இந்த வழக்கில் இருந்து ஜெயலலிதாவை விடுதலை செய்யுமாறு கோரி கடந்த 23ஆம் திகதியுடன் தனது வாதத்தை நிறைவு செய்தார். அத்துடன் ஜெயலலிதா தரப்பு வாதம் நிறைவடைந்ததாக கூறப்பட்டது.

இந்த நிலையில் 3 நாட்கள் தொடர் விடுமுறைக்கு பின்னர் கர்நாடக தனி நீதிபதி குமாரசாமி முன்னிலையில் 14ஆவது நாள் விசாரணை நேற்று முன்தினம் மீண்டும் தொட ங்கியபோது ஜெயலலிதா சார்பில் ஆஜரான சட்டத்தரணி குமார், நிறுவனங்கள் சம்பந்தமாக சில அம்சங்கள் விடுபட்டு இருப்பதாகவும், அதை நீதிமன்றின் கவனத் துக்கு கொண்டு வர அவகாசம் தருமாறும் கேட்டுக் கொண்டார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி குமாரசாமி தொடர்ந்து வாதிட அனுமதி வழங்கினார். அதைத் தொடர்ந்து குமார் வாதிட்டபோது நமது எம்.ஜி.ஆர். நிறுவனத்துக்கு வந்த வருமானம், திராட்சை தோட்டத்தில் கிடைத்த வருமானம் மற்றும் வருமான வரித்துறை கூறிய கருத்துக்களை எடுத்து வைத்தார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி குமாரசாமி, "நீங்கள் சொல்லும் இந்த விபரங்களை நாகேஸ்வரராவ் விரிவாக எடுத்து வைத்து வாதிட்டுவிட்டார். இதுவரை இங்கு சொல்லப்படாத விடயங்கள் இருந்தால் அதை எடுத்து சொல்லுங்கள். சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டாம்" என்றார்.

அதைத்தொடர்ந்து குமார் தனது வாதத்தை தொடர்ந்தார். அவர் வாதிடுகையில் கூறியதாவது,

"ஜெயா பப்ளிகேஷன்ஸ் மற்றும் சசி எண்டர்பிரைசஸ் ஆகிய 2 நிறுவனங்களில் மட்டுமே ஜெயலலிதா பங்குதாரராக இருக்கிறார். மற்ற நிறுவனங்களுக்கும், ஜெயல லிதாவுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. அந்த நிறுவனங்களில் ஜெயலலிதா முதலீடு எதுவும் செய்ய வில்லை. ஜெயலலிதா வீட்டில் சசிகலாவும், இளவரசியும் தங்கி இருந்தனர் என்ற ஒரே காரண த்துக்காக் ஊழல் தடுப்பு பொலிஸார் இதை மாற்றி மற்ற நிறுவனங்களிலும் ஜெயலலிதாவுக்கு பங்கு இருப்பதாகவும், அவர் முதலீடு செய்து இருப்பதாகவும் கூறி சொத்து குவிப்பு வழக்கை ஜோடித்து விட்டனர்.

இது முற்றிலும் தவறானது. ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான கட்டடங்களுக்கு வந்த மாத வாடகை மற்றும் முற்பணம், காலி நிலத்துக்கு வந்த வாடகை ஆகியவற்றை ஊழல் தடுப்புத்துறை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. இதில் கிடைத்த வருமானத்தை சொத்து குவிப்பு வழக்கில் சேர்த்துவிட்டனர் இது தவறானது.

இதை நாங்கள் எடுத்துக் கூறியும் கீழ்நீதிமன்றம்இதை ஏற்கவில்லை. இதை ஏற்று இந்த வழக்கில் இருந்து ஜெயலலிதாவை விடுதலை செய்ய வேண்டும்.'' இவ்வாறு குமார் மேலும் வாதிட்டார். (இ-5)

# பூமியை நோக்கி பெரிய விண்கல்



கடந்த ஆண்டு, நியூ மெக்சிகோவில் உள்ள ஒயிட் சேன்ட்ஸ் நியர் எர்த் ஆஸ்டீராய்டு ரிசர்ச் சர்வேயில் விண்வெளியில் '2004 பிஎல் 86" என்ற பெரிய விண்கல் பூமியை நெருங்கி வருவது தெரிய வந்தது.அந்த விண்கல் தற்போது பூமிக்கு நெருக்கமாக வந்து கொண்டிருக்கிறது. வெகு விரைவில் இந்த விண்கல் பூமிக்கு மிக நெருக்கமாக வந்து செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இந்த விண்கல் சந்திரனை விட 3 மடங்கு பெரியது. தற்போது இது பூமியில் இருந்து 7 இலட்சத்து 45 ஆயிரம் மைல் (12 இலட்சம் கிலோ மீற்றர்) தூரத்தில் உள்ளது.இதுபோன்ற விண்கல் பூமியை 200 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே கடக்கும் என்று நாசா விண் வெளி ஆராய்ச்சி மையத் தகவல் தெரிவிக்கின்றது. (இ-5)

# சீனா மிகச் சிறந்த தேசம்

### தலாய்லாமா கூறுகிறார்

(காசியபாத்)

மிகச்சிறந்த தேசம் சீனா என்று கூறிய திபெத்திய தலைவர் தலாய் லாமா அந்த நாட்டையும் மக்களின் கடின உழைப்பையும் பார்த்து வியப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

காசியபாத்தில் பாடசாலை நிகழ்ச்சி ஒன்றில் நேற்று கலந்து கொண்ட தலாய்லாமா, பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது கேள்வி ஒன்றிற்கு பதில் அளித்த அவர் கூறுகையில்,

நீண்ட வரலாறு, கலாசாரங்கள் மற்றும் கடினமாக உழைக்கும் மக்களை கொண்ட மிகச் சிறந்த தேசம் சீனா. அதைக்கண்டு நான் வியக்கிறேன்.

இந்தியாவும் சீனாவும் மிகவும் பிரபல்யமான நாடுகள். பரஸ்பர நமபிக்கை அடிப்படையில் அண்டை நாடுகள் இரண்டும் நெருங்கிய நட்புறவை வைத்துக்கொள்ள வேணடும். திபெத்துக்கு மட்டும் அல்லாது ஆசியாவுக்கும் இது மிகவும் அவசியமானது" என்று தெரிவித்தார்.

முன்னதாக, பாடசாலை மாணவர்களிடம் கலந்துரையாடிய தலாயலாமா, உலகம் முழுவதும் வன்முறைகள் மற்றும் வெறுப்புணர்வு உலகம் முழுவதும் பரவிஉள்ளது. அன்பு மற்றும் அமைதியை மாணவர்கள் உலகம் முழுவதும் பரப்ப வேண்டும் என்று ஊக்கப்படுத்தினார். நாட்டின் மிகப்பெரிய தூண்கள் மாணவர்கள் என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

### ஸ்ரீலங்கன் விமான சேவையின் தலைவராக அஜித் பதவியேற்பு

இலங்கையின் தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அஜித் டயஸ் நேற்று முன்தினம் தனது பணிகளை பொறுப்பேற்றுள்ளார்.

இதற்கான நிகழ்வு கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கன் விமான சேவையின் காரியாலயத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர்களாக அர்ஜுன் ரணதுங்க, பைஸர் முஸ்தபா ஆகியோர் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஎஸ்ஐஎஸ் தாக்குதலில் 70பேர் பலி!

**(பக்தாத்)**

**ஈராக்கில் நாளுக்கு நாள் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளின் தாக்குதலில் பலர் உயிரிழந்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தீவிரவாதிகளின் தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 70 பேர் பலியெடுக்கப்பட்டுள்ளனர்.**

சிரியா மற்றும் ஈராக்கின் சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் தொடர்ந்து தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் ஈராக் இராணுவம் ஈடுபட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை தீவிரவாதிகளுடன் நடத்திய கடும் சண்டையில் தியாலா மாகாணத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் வசம் இருந்த 24க்கும் மேற்பட்ட கிராமங்களை இராணுவம் மீட்டது.

இந்தநிலையில் தியாலா மாகாணம். பர்வ்ானா கிராமத்திற்குள் நேற்றுமுன்தினம் தீவிரவாதிகள் புகுந்து அங்கிருந்த வீடுகளுக்கு தீ வைத்தனர். இந்த தாக்குதலில் 70 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலுக்கு ஷியா பிரிவு தீவிரவாதிகள் தான் காரணம் என்று சன்னி பிரிவினர் தெரிவித்துள்ளனர். ஆனால் இதனை ஈராக் இராணுவமும். ஷியா பிரிவினரும் மறுத்துள்ளனர்.மேலும். தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவ்ாதிகள் தான் காரணம் என்று ஷியா பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ-5)

# சவுதி சென்ற ஒபாமாவை இளவரசர் வரவேற்றார்



சவுதி மன்னர் அப்துல்லா காலமானதைத் தொடர்ந்து அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சவுதி அரேபியா வந்தார். இப்பயணம் அமெரிக்க-சவுதி எண்ணெய் வள பிராந்திய பாதுகாப்பு குறித்து முக்கியத்துவம் பெறும் என்று கூறப்படுகிறது.

இது குறித்து துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பென் ரோட்ஸ் செய்தியாளர்களிடம் கூறுகையில். சவுதியின் புதிய மன்னராகப் பொறுப்பேற்றுள்ள சல்மானிடம் ஐ.எஸ் ஐ.எஸ். தீவிரவாதத்தை முறியடிப்பது. ஏமனின் கொந்தளிப்பான சூழ்நிலை. ஈரானின் அணு சக்தி கொள்கை ஆகியவற்றைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்த ஒபாமா விரும்புகிறார்.

மன்னர் அப்துல்லாவின் கீழ் ஏற்கனவே தொடர்ந்து வந்த சவுதியின் கொள்கைகள் மேலும் தொடரும் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும் ஒபாமா மறைந்த மன்னரிடம் தொடர்ந்ததைப் போலவே புதிய மன்னரிடமும் நெருங்கிய உறவை தொடர விரும்புகிறார் என்றார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை. மன்னர் சல்மான் நாட்டின் மூத்த எண்ணெய் வள அமைச்சர் அலி அல்-நயிமி மற்றும் சவுதி இளவரசர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் நேரில் சென்று வரவேற்றார். (இ-5)



ஸ்கொட்லாந்தின் செற்லாண்டில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் Aa Fire விழாவில் விகிங் என்ற கப்பலின் மாதிரி அமைப்பு செய்யப்பட்டு ஆயிரக் கணக்கானவர்கள் கையில் தீப்பந்தங்களுடன் ஊர்வலமாகச் சென்று அந்தக் கப்பலினுள் தீப்பந்தத்தை எறிந்து அதனை எரிப்பதை படத்தில் காணலாம்.

# ரஷ்ய ஜனாதிபதியை அழைக்கிறது சீனா

## இராணுவ அணிவகுப்பை பார்வையிட

(பீஜிங்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா 3 நாட்கள் பயணமாக இந்தியா வருகை தந்தார். அவரது மனைவி மிச்செலும் உடன் வந்திருந்தார். குடியரசு தின விழாவில் பங்கேற்ற ஒபாமா இராணுவ அணிவகுப்பை பார்வையிட்டார்.

ஒபாமாவின் இந்திய வருகை அண்டை நாடுகளான சீனா மற்றும் பாகிஸ்தானை அச்சத்திலும். எரிச்சலிலும் ஆழ்த்தியுள்ளது. சர்வதேச பத்திரிகை மற்றும் ஊடகங்களில் ஒபாமாவின் இந்திய பயணம் குறித்த செய்திகளே முக்கிய இடம் பிடித்தன.

இதனால் கடும் எரிச்சல் அடைந்துள்ள சீனா இந்தியாவுக்கு போட்டியாக தனது நாட்டின் இராணுவ அணிவகுப்பில் வெளிநாட்டு தலைவரை பங்கேற்க வைக்க முடிவு செய்துள்ளது.

அதன்படி அமெரிக்காவின் முக்கிய எதிரியான ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடினை சிறப்பு விருந்தினராக அழைத்து வர திட்டமிட்டுள்ளது. அதற்கான அறிவிப்பை சீன அரசு நேற்று முன்தினம் வெளியிட்டது.

அங்கு சீன மக்கள் குடியரசு உருவான 1949ஆம் ஆண்டில் இருந்து 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை இராணுவ அணிவகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இந்த தடவை 2ஆம் உலகப்போரில் வெற்றி பெற்ற 70ஆம் ஆண்டு விழா கொண்டாட்டம் விரைவில் நடைபெறவுள்ளது.

அதையொட்டி நடைபெறும் இராணுவ அணிவகுப்பை பார்வையிட புடின் அழைக்கப்படவுள்ளார். அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தற்போதே தீவிரமாக தொடங்கி விட்டன. இந்த தகவலை சீன பாதுகாப்பு துறை தலைவர் பு ஷென்குவா தெரிவித்தார். (இ-5)




# எங்களது நம்பிக்கை மிகுந்த தோழமை நாடு பாகிஸ்தான்

## சீனா அறிவிப்பு

பாகிஸ்தானின் கவலைகள் அனைத்தும் தங்களையும் பாதிக்கக்கூடியது என்று சீன கம்யூனிஸ்ட் கட்சியின் போலிட்பீரோ மூத்த உறுப்பினர் மெங் ஜியாங்சூ தெரிவித்துள்ளார்.

சீனா கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது உயர்மட்ட சபையின் உறுப்பினர் மெங் ஜியாங்சூ தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிடும்போது. பாகிஸ்தான் மற்றும் சீனாவின் உறவு இரு தனி நாடுகளின் உறவு முறையையும் தாண்டிய ஒன்று.

சீனாவின் நம்பிக்கை மிக்க தோழமை நாடென்றால் பாகிஸ்தானைத்தான் முதலில் கூற முடியும். சீனாவின் அனைத்து பிரச்சினைகளுக்கும் பாகிஸ்தான் துணை நின்றிருக்கிறது.

அதேபோல. பாகிஸ்தானின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சீனா துணை நிற்கும். பாகிஸ்தான் மக்கள் மற்றும் அந்த அரசின் பிரச்சினை. சீனாவின் பிரச்சினையாகவே பார்க்கப்படுகிறது என்றார்.

பாகிஸ்தானின் இராணுவ தளபதி ரச்சேல் ஷெரீப் சீனா சென்றுள்ளார். சீனாவின் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கத்தோடு அவர் அங்கு சென்றதாக குறிப்பிடப்பட்டது.

அவரது இந்தப் பயணத்தில் பாகிஸ்தான் - சீனா இடையே பாதுகாப்பு ரீதியிலான முக்கிய நடவடிக்கைகள் சில எடுக்கப்பட்டுள்ளன. அதில் முக்கியமாக. நீண்ட கால பாதுகாப்பு ஒத்துழைப்பு. தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை. பாதுகாப்பு கொள்கை. பாதுகாப்பு விவகாரங்களில் தகவல் பரிமாற்றம் போன்ற ஒப்பந்தங்களை நீட்டிப்பது குறித்து முக்கிய உடன்பாடு எட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# துப்பாக்கி ஏந்திய நபர்களினால் நட்சத்திர ஹோட்டல் முற்றுகை

## 3 பேர் இதுவரை பலி

(டிரிபோலி)

லிபியாவில் வெளிநாட்டவர்கள் அதிகம் தங்கும் நட்சத்திர ஹோட்டல் முகமூடி அணிந்த நபர்களால் சிறைபிடிக்கப்பட்டுள்ளது.

ஹோட்டலில் பிணைக் கைதிகளாக வைத்திருந்தவர்களில் குறைந்தது 3 பேரை அவர்கள் சுட்டுக் கொன்றதாக தெரியவந்துள்ளது.

லிபிய தலைநகர் டிரிபோலியில் உள்ள கரோந்தியா என்ற நட்சத்திர ஹோட்டலுக்குள் நேற்று முன்தினம் காலை புகுந்த துப்பாக்கி ஏந்திய மர்ம நபர்கள் அங்கு கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தினர் என்று டிரிபோலியின் பாதுகாப்பு முகமை அதிகாரி எஸாம் அல்நாஸ் தெரிவித்தார்.

இது குறித்து அந்த ஹோட்டலிருந்து தப்பித்து வெளியேறிய மேலாளர் கூறும்போது. "முகமூடி அணிந்த 5 நபர்கள் உள்ளே நுழைந்தனர். குண்டு துளைக்காத உடை அணிந்திருந்த அவர்கள் துப்பாக்கியை எடுத்து மேல் நோக்கி சுட்டனர்.

அந்த ஹோட்டலிலிருந்து பலரை வெளியேற்றினோம். உடனே அவர்கள் எங்களது பாதுகாவலர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதில் கார் ஒன்றையும் வெடிக்கச் செய்தனர். அவர்கள் யார் என்று தெரியவில்லை" என்றார்.

ஹோட்டலில் தங்கி யிருக்கும் பெரும்பாலான வர்கள் ஐரோப்பா. துருக்கி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. மர்ம நபர்களிடம் பலர் பிணைக் கைதிகளாக சிக்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பாகிஸ்தான் கடும் எதிர்ப்பு

ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினர் ஆவதற்கு பாகிஸ்தான் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இந்தியாவில் 3 நாட்கள் சுற்றுப்பயணம்மேற்கொண்ட அமெரிக்க ஜனாதி பதி ஒபாமா ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் . இந்தியா நிரந்தர உறுப்பினராக ஆதரவு அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்த நிலையில். இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சர்தாஜ் அஜிதாஸ் "ஐ.நா. பாதுகாப்பு அவையில் இந்தியா நிரந்தர உறுப்பினராவது தென் கிழக்கு ஆசியாவின் அமைதியை சீர்குலைத்து விடும். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழா மலருக்கு ஆய்வுக் கட்டுரைகள்

நாட்டின் இந்து மக்களின் வரலாற்றில் ஓர் அத்தியாயமாகக் கடந்த ஆறு தசாப்தங்களாக தடம் பதித்துவிட்ட அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு இந்த ஆண்டு வைரவிழாவாகும். வைரவிழாவினை பெரும் கொண்டாட்டமாக அனுஷ்டிக்காது ஆக்கபூர்வமான செயற்றிட்டங்கள் மூலம் இந்நாட்டு இந்து மக்களுக்கு நன்மை பயக்கும் பணிகளை இந்த ஆண்டில் விசேடமாக முன்னெடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. அத்திட்டங்களில் ஒன்றாக யாழ். மண்ணில் 2015 மார்ச் முதல் வாரத்தில் வைரவிழா மாநாட்டை நடத்தி இந்து ஒ ளி வைரவிழா எனும் மலரை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.பத்து ஆண்டுகளுக்கு முன் பொன்விழாவையொட்டி யாழ் மண்ணில் மாநாடு நடத்தி அரிய பல ஆய்வுக்கட்டுரைகளை அறிவுப் பொக்கிஷங்களாகப் பெற்றது போன்று காத்திரமான வெளியீடாக வைரவிழாமலர் வெளிவரவுள்ளது.

ஆய்வுக்கட்டுரையின் கருப்பொருள் ஈழத்து இந்து மதத்தின் வரலாறு,வளர்ச்சிப்போக்கு என்பதாகும்.

இக்கருப்பொருளின் அடிப்படையில் ஆய்வுக்கட்டுரைகள் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் அமைய வேண்டும்.

இக்கருப்பொருளுக்கு அமைவாக பின்வரும் அம்சங்களை கருத்திற் கொண்டு கட்டுரைகள் அமைய வேண்டும்.

வரலாற்று ரீதியான ஆய்வு, இந்து தத்துவவியல் தொடர்பாக ஈழத்து அறிஞர்களின் பங்களிப்பு, ஈழத்து வழிபாட்டு மரபு ,பிராந்திய மரபுகள் உள்ளடங்கலாக, ஈழத்துச் சித்தர் பாரம்பரியம்,ஈழத்து திருக் கோயில்களும் மரபுகளும்,ஈழத்து மக்களின் வாழ்வில் சமயச் சடங்குகள், ஈழத் தமிழர் மரபில் சமயமும் இலக்கியமும்,ஈழத்துச் சமய மரபில் கல்வி, ஈழநாட்டில் இந்து சமய நிறுவனங்கள்,ஈழநாட்டில் இந்து சமய வெளியீடுகள், ஈழத்தில் கலைப் பாரம்பரியத்தில் இந்து சமயம்,ஈழத்தில் இந்து ஆய்வுத்துறை,ஈழநாட்டில் புராண படலமும் திருமுறை மரபும், ஈழநாட்டில் இந்து மத வளர்ச்சியில் மடங்கள், ஈழநாட்டில் இந்து மத வளர்ச்சிக்கான எதிர்காலத் திட்டமிடல்கள், இலங்கையின் வடமாகாணம், கிழக்கு மாகாணம், மலையகம் மற்றும் பிராந்தியங்களில் பின்பற்றப்படும் சமய ஆசாரமுறைகள், அவற்றின் அர்த்தங்கள், அவை அந்தப் பிராந்தியங்களில் ஏற்படுத்திவரும் தாக்கங்கள், கடந்த ஆறு தசாப்தங்களில் (குறிப்பாக இறுதி மூன்று தசாப்தங்களில்) இந்து மக்களிடையே அகில இலங்கை இந்து மாமன்றம் செய்து வந்த பணிகள், அவை ஏற்படுத்திய த்தாக்கங்கள், மாமன்றம் எதிர்காலத்தில் நிறைவேற்ற வேண்டிய பணிகள், சமய நிறுவனங்கள் இந்து மக்களிடையே செய்ய வேண்டிய தொண்டுகள். இளம் தலைமுறையினரின் இன்றைய தேவைகள். எதிர்பார்ப்புக்களைக் கருத்தில் கொண்டு செய்யப்பட வேண்டிய தொண்டுகள், நவீன விஞ்ஞான நுட்பங்களுக்கு குறிப்பாகத் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு எதிர்கொண்டு எமது மதம் மூலம் மக்களின் வாழ்வை பண்படுத்தக்கூடிய முறையில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்த முயற்சிகள் ,திருமுறைகள் மற்றும் சமய இலக்கியங்களை இளம் தலைமுறையினர் அறிந்து உணர்ந்து கொள்ளும் வகையிலான எடுத்துரைப்புக்கள்.

ஏற்கனவே எங்கும் பிரசுரிக்கப்படாததாக ஆய்வுக் கட்டுரையாக இருக்க வேண்டும். ஆய்வுக் கட்டுரையினை மின்னச்சில் பொறித்து மின்னஞ்சலூடாக 15.02.2015 இற்கு முன் அனுப்ப வேண்டும். அத்துடன் ஒரு பதிப்புப் பிரதியினைத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது மாமன்ற யாழ். பணிமனையில் அமைந்திருக்கும் இந்து ஆராய்ச்சி நிலையத்தில் ஒப்படைக்கலாம். கட்டுரையாளர் தனது முழுப்பெயர், பதவி, கடமையாற்றும் நிறுவனம் போன்ற விபரங்களை தனியானதொரு தாளில் எழுதி கட்டுரையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சகல கட்டுரைகளும் hinducongressjaffna@gmail.com என்ற மின்னஞ்சலுக்கும் அதன் பிரதி ஒன்றை hinducongress@gmail.com என்ற மின்னஞ்சலுக்கும் அனுப்ப வேண்டும்.

ஆய்வுக் கட்டுரையின் அமைப்பு பின்வருமாறு அமைதல் வேண்டும்.

01. கட்டுரைத் தலைப்பு, அதன் கீழ் கட்டுரையின் சுருக்கம், அதன் பின் முழுமையான கட்டுரையாக இருத்தல் வேண்டும்.

02. அடிக் குறிப்புக்கள், உசாத்துணை விபரங்கள் யாவும் கட்டுரையின் இறுதியில் அமைதல் வேண்டும்.

03. கட்டுரையின் சொல் எண்ணிக்கை பற்றிய மேலெல்லை எதுவுமில்லையாயினும் 3000-5000 சொற்களைக் கொண்டிருத்தல் பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். அதேவேளையில் சொற்களின் எண்ணிக்கைக்கு அமைவாகவே ஆய்வு அமைதல் வேண்டுமென்று எதிர்பார்க்கப்படவில்லை. சொற்களின் எண்ணிக்கையை விட ஆய்வின் தரமே முக்கியமானது.

**உசாத்துணை விபரங்கள் பற்றிய அறிவித்தல்கள்**

01.ஆசிரியர்பெயர், பிரசுர ஆண்டு (அடைப்புக்குறிக்குள்), நூலின் பெயர் அல்லது கட்டுரையின் தலைப்பு என்பன இடம்பெற வேண்டும்.

02.கட்டுரை வெளிவந்த நூலின் பெயரோ அல்லது ஆய்விதழின் பெயரோ தடித்த எழுத்தில் அமைதல் வேண்டும்.

03.ஆய்விதழாயின் அதனைத் தொகுத்தவர் பெயர் முதலில் குறிப்பிடப்படல் வேண்டும்.

மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய வைரவிழா மலர் அச்சிட்டு வெளியிடப்படுவதுடன் மாநாட்டின் குறிப்பிட்ட அரங்கில் அதனைச் சமர்ப்பிக்கவும் கட்டுரையாளர்களுக்குச் சந்தர்ப்பம் தரப்படும். ஆனால் கட்டுரையினை அச்சந்தர்ப்பத்தில் சுருக்கமாக விளக்கவே வாய்ப்புக்கிடைக்கும்.

நேர அவ காசம் இருப்பின் ஒவ்வோர் அரங் கின் இறுதி நிகழ்வாக கலந்துரையா டவும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

ஆய்வுக்கட்டுரைகளை அனுப்பவிருப்பவர்கள் 25.01.2015க்கு முன் அறியத்தர வேண்டும்.

இந்த முயற்சியில் சகலரினதும் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் மாமன்றம் நாடி நிற்கி ன்றது . என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் அறிவித்துள்ளார். (இ)

# புகையிரத சேவையில் உள்ளீர்க்குமாறு முன்னாள் கடவைக்காப்பாளர்கள் மகஜர்

**(யாழ்ப்பாணம்)**

**1988 ஆம் ஆண்டு புகையிரத கடவைக்காப்பாளர்களாக வறுமையொழிப்புத்திட்டத்தின் கீழ் அமர்த்தப்பட்ட தம்மை மீண்டும் தற்போது அச்சேவைக்கு நியமிக்குமாறு கோரி வடக்கு மாகாண முதலமைச்சரிடமும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடமும் மகஜர் கையளித்துள்ளனர்.**

புகையிரத கடவைக்காப்பாளர்களாக ஆரம்ப காலத்தில் கடமையாற்றியவர்கள் யாழ். மாவட்டச் செயலகத்திற்கு அருகாமையில் நேற்று காலை 10.30 மணியளவில் ஒன்று கூடி பின்னர் முதலமைச்சரிடமும், அரச அதிபரிடமும் மகஜரினை கையளித்துள்ளனர்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாம் 1988ஆம் ஆண்டு பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் வறுமை ஒழிப்புக்காக வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் என்ற வகையில் புகையிரதக் கடவைக் காப்பாளராக அமர்த்தப்பட்டோம். நாம் கடமையாற்றி மாதம் 1000 ரூபா சம்பளம் பெற்றுள்ளோம். 1994 ஆம் ஆண்டு வரை அதன் பின் புகையிரத சேவை நடைபெறாததால் எமக்கு சம்பளம் வழங்கப்படவில்லை.

இதை நாம் அரச அதிபரிடம் எமது நிலையை எழுதி 1998 ஆம் ஆண்டு மனு கொடுத்துள்ளோம். அதற்கு அரச அதிபர் புகையிரத மேலதிகாரியிடம் தொடர்பு கொண்டு எமது நிலையை விளக்கினார். அவர் புகையிரதம் ஓடும் போது பார்க்கலாம் எனக்கூறினார்.

புகையிரத சேவை இப்பொழுது நடைபெறுகின்றது. அதற்கு புதிதாக கடவைக்காப்பாளரை நியமித்துள்ளார்கள்.


எம்மைப்பற்றி எந்த வித கவனத்தில் கொள்ளாது இப்போது முதன் முதலில் புகையிரதம் ஓடுவது போல் புதிதாக ஆட்களை நிய மித்துள்ளார்கள் என மேலும் தெரிவித்துள்ளனர். (இ-4)

# பிரிவுத்துயர் பகிர்வு



**திருமதி சோதிநாதன் பரமேஸ்வரி**

யாழ். தாவடியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Collier's Wood ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சோதிநாதன் பரமேஸ்வரி கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு Hinchley Wood Primary School, Claygate Lane, Esher, Surrey KT10 0AQ, UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.




**செல்லத்துரை பாலச்சந்திரன்**

யாழ். திருநெல்வேலி முடமாவடியைப் பிறப்பிடமாகவும் கனடா Ajax ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பாலச்சந்திரன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரி யில் தகனம் செய்யப்படும்.



**திருமதி கனகலிங்கம் நேசமலர்**

யாழ். கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் நேசமலர் (இளைப்பாறிய உடற்கல்வி விரிவுரையாளர்) கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் கொழும்பு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் தகனம் செய்யப்படும்.



**வேலும்மயிலும் கிருபானந்தன்**

யாழ் .மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Catfordஐ வசிப்பிடமாகவும் கொண்ட வேலும்மயிலும் கிருபானந்தன் கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு The Funeral Centre, 43-47 Rushey Green, London SE6 4AS UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**கார்த்திகேசு கோவிந்தபிள்ளை**

யாழ். சாவகச்சேரி வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் லண்டன் Eastham ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கோவிந்தபிள்ளை (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர் வரும் 2 ஆம்திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு Manor Park Funeral Care, 50,Whitta Road, Manor Park, E12 5DA, UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**நாகமணி சிவஞானம்**

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி சிவஞானம் கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி கிருஸ்ணன் இலட்சுமி**

கோண்டாவிலை பிறப்பிடமாகவும் கலாசாலைவீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணன் இலட்சுமி கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.




**திருமதி கங்கைவேணியன் சிவயோகம்மா**

யாழ். புங்குடுதீவு முதலாம் வட்டாரம் பெருங்காட்டைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் Bjerringbro ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கங்கைவேணியன் சிவயோகம்மா கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு Toldbodgade 4, 8800 Viborg, Denmark என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார துஷ்பிரயோகத்தில் அரச அதிகாரிகள்



## நடவடிக்கை எடுக்கக்கோரி நேற்று ஆர்ப்பாட்டம்

(கிளிநொச்சி-1)

கிளிநகர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரும் கிளிநகர் மக்களும் இணைந்து நேற்று முற்பகல் யுங்கள்!, அவர்களை விசாரணை செய்யுங்கள்!, காணி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுத்தருக!, புதிய ஜனாதிபதியே எங்களுடைய கோரிக் வதாகவும் கூறினார்.

அத்துடன் இதற்கு இரு வார காலத்தினுள் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் உறுதிமொழி வழங்கினார்.





[illegible].40 மணியளவில் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இவ்வூர்வலம் கிளிநொச்சி நகர பள்ளிவாசலில் இருந்து ஆரம்பமாகி ஏ-9 வீதியூடாக நகர்ந்து புதிய மாவட்ட செயலகத்தையடைந்தது. இதன் போது கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வைத்து அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனிடம் அம்மக்களால் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களால் தாம் குடியேறி 5 வருடங்கள் கடந்த நிலையிலும் தமக்கான வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவில்லையெனவும் குடியிருக்கும் காணிகளுக்கான காணி அனுமதிப்பத்திரம் இதுவரை வழங்கப்படவில்லையெனவும் அரச அதிகாரிகளுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர்.

அத்துடன் ஊழல் செய்யும் அரச அலுவலர்களை இடம்மாற்றம் செய் கையை ஏற்றுக்கொள்ளுங்கள்!, வீட்டுத்திட்டங்களை வழங்குங்கள்! போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியவாறு கோஷங்களை எழுப்பினர்.

இதேவேளை அரச அதிபரிடம் தமது மகஜரைக் கையளித்து ஒவ்வொரு பிரச்சினைகளையும் முன்வைத்தனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவிக்கையில்,

கிளிநகர் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் கிராமத்திற்கு நேரில் வருகை தந்து பார்வையிடுவதாகவும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பரிசீலனை செய்து உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று கலந்துரையாடிய பின்னர் நடவடிக்கை மேற்கொள் வதாகவும் கூறினார்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

அரச அதிகாரிகள் அதிகார துஷ்பிரயோகங்களாலும் அசமந்தப் போக்குகளாலும் கிளிநொச்சி நகரத்தில் நிரந்தர குடியிருப்பாளர்களாக இருக்கும் மக்களும் வறுமைக்கோட் டின் கீழ் வாழும் மக்களும் பாதிப்படைந்து வருவதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு வரும் உதவித் திட்டத்தில் எமது கிராமம் முற்றுமுழுதாக புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. இப்புறக்கணிப்பைப் பல தடவை பிரதேச செயலாளர், அரச அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் என பல்வேறு மட்டத்தினரிடமும் நாம் எடுத்துக் கூறியும் எந்தவித நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எமது கிராமத்தில் 2010 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியேற்றப்பட்ட போதும் அம் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தவில்லை.

மீள்குடியேற்றத்திலிருந்து அரச காணிக்கான காணி அனுமதிப்பத்திரம் கோரி வந்தோம். ஆனால் பல கிராமங்களுக்குக் காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட போதிலும் நாங்கள் புறக்கணிக்கப்பட்டோம்.

கிராம சேவையாளர், காணி உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் ஆகியோர் காணி உரிமம் உறுதிப்படுத்தல் படிவத்தை உறுதிப்படுத்தி ஒப்பமிட்ட பின் பல கிராமங்களுக்கு வீட்டுத்திட்டம் கொடுக்கப்பட்டது. அந்த நடவடிக்கை எமது கிராமத்துக்கு மட்டும் புறக்கணிக்கப்பட்டு வீட்டுத்திட்டம் ஒரு சிலருக்கு மட்டும் கிடைக்கப் பெற்றும் பல மக்களுக்கு கிடைக்கப்பெறாமலும் உள்ளது. இதில் காணி தொடர்பான ஆவணங்கள் உள்ளவர்களுக்கும் வழங்கப்படாமை குறிப்பிடத்தக்கது.

எமது கிராமத்தின் அனைத்து சமூக கட்டமைப்புக்களையும் உள்ளடக்கிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு எமது கிராம அபிவிருத்தி சங்கத்தால் முன்மொழியப்பட்ட பிரதேச செயலகத்திற்கு எதிரேயுள்ள காணியை எமக்குத் தருவதாக உறுதிமொழி கூறிய பிரதேச செயலாளர் தற்போது அதை வழங்க மறுக்கின்றார். வேறு மாவட்டங்களிலிருந்து வேலைபெற்று வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டமை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டனர்.

எமது கிராமத்தின் எங்களுடைய வாழ்வியல் அபிவிருத்தி, கிராம அடிப்படை வசதிக ளுக்கான அபிவிருத்திஎன்பன இல்லாமல் செய்யப்பட்டுள்ளன.

எனவே மேற்கூறப்பட்ட விடயங்கள் அனைத்தையும் கருத்தில் கொண்டு எமது காணி உரிமப்பத்திரத்தையும் எமக்கான வீட்டுத்திட்ட வசதியையும் பொது அமைப்புக்களுக்கான காணியையும் பெற்றுத்தருவதோடு ஏனைய கிராமங்களைப் போன்று எங்களுடைய கிராமத்தின் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கும் எங்களுடைய வாழ்வாதார அபிவிருத்திக்கும் ஆவன செய்யுமாறு தங்களை கேட்டுக் கொள்வதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், வடமாகாண முதலமைச்சர், கிளிநொச்சி மாவட்டத்தின் தமிழ்த் தேசியகூட்டமைப்பு, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி பாராளுமன்றஉறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டன. (அ-2-277)

# சாதகமற்ற காலங்களில் பெரியவெங்காய செய்கை



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் விவசாயத் திணைக்களத்தின் தொழில் நுட்ப ஆலோசனையுடனும் வழிகாட்டலும் யுஎஸ்எயிட் (USAid) நிறுவனத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் சாதகமற்ற காலங்களில் பெரிய வெங்காயச் செய்கையானது தேக்கம், உயிலங்குளம், சிலாவத்துறை தவிர்ந்த அனைத்து விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என மன்னார் மாவட்ட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இத்திட்டத்தின் கீழ் 401 பயனாளிகளுக்கு பெரிய வெங்காய விதைகள் மற்றும் நாற்றுமேடை பாதுகாப்பிற்காக பொலித்தீன் என்பன இலவசமாக வழங்கப்பட்டிருந்தன.

உரிய காலத்தில் விதைகளையிட்டு நாற்றுக்கள் பராமரிக்கப்பட்டு தற்போது நாற்றுக்கள் பிடுங்கி நடப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு முன்னுதாரணமாக இரணை இலுப்பைக்குளம் விவசாயப்போதனாசிரியர் பிரிவில் காக்கயன்குளம் கிராமத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விவசாயிகளுக்கு விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் வழங்கும் நோக்கோடு வயல்விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

மன்னார் மாவட்ட மாகாண பிரதி விவசாயப்பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் பிரதம விருந்தினராகவும் (US Aid) நிறுவனத்தின் சார்பில் அதன் பயிற்சிப் பிரிவின் தலைவர் இராமநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வில் நாற்றுமேடை பரிபாலனம், ஆரோக்கியமான நாற்றுக்கள் தெரிவு மற்றும் வினைத்திறனான களைக்கட்டுப்பாடு, பொருத்தமான முறையில் வயலினை தயார் படுத்தல், வயலில் நாற்று நடுகை போன்ற தொழில்நுட்ப அறிவுரைகளை பிரதேச விவசாய போதனாசிரியர் மற்றும் பாடவிடய அலுவலர்கள் குழுமியிருந்த விவசாயிகளுக்கு வழங்கினர்.

குறிப்பிட்ட விவசாயப் போதனாசிரியர் பிரிவில் 16 ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. மன்னார் மாவட்டத்தில் 100 ஏக்கரில் பெரிய வெங்காயச் செய்கையின் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. (அ-2)




## இல்லமெய்வல்லுநர் போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (அ-2-277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2015-12.02.2015



**ராகு-கேது வழிபாடு யோகம் தரும்! பொறுமையோடு செயல்பட்டால் பெருமைகளைக் காணலாம் என்று சொல்லும் கும்ப ராசி அன்பர்களே!**

# ராகு-கேது வழிபாடு யோகம் தரும்!

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் ஜென்ம ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கின்றார். 3, 10இற்கு அதிபதியான செவ்வாய் சஞ்சரிப்பதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். துணையாக இருந்த உடன்பிறப்புகள் உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்று வார்கள். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். வருமானம் பெருகுவதற்கு புதிய வழி வகுத்துக் கொள்வீர்கள். பழைய பங்குதாரர்கள் விலகினாலும், புதிய பங்குதாரர்கள் வந்திணைவர்.

இரண்டில் கேது இருப்பதாலும், வாக்கு ஸ்தானாதிபதி வக்ரம் பெற்றிருப்பதாலும் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாமல் போகலாம். வக்ரம் பெற்ற குரு குடும்ப ஸ்தானாதிபதியாகவும் விளங்குகிறார். எனவே குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படாமல் இருக்கவும், கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகவும், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதும் நல்லது.

விரய ஸ்தானத்தில் சூரியன், சுக்ரன், புதன் ஆகிய மூவரும் சஞ்சரிக்கிறார்கள். எனவே குடும்பச் செலவுகள் கூடுதலாகவே இருக்கும். நூதனப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

அரசியல்வாதிகள் மூலம் செய்த சில ஏற்பாடுகளில் தாமதம் ஏற்படலாம். 2 இல் கேது, 8 இல் ராகு அமர்ந்து சர்ப்பக் கிரக ஆதிக்கம் மேலோங்கியிருக்கும் மாதமாக இம்மாத கிரக நிலைகள் அமைந்துள்ளன. எதிர்பார்த்த சில காரியங்கள் கேதுவால் தடைப்பட்டாலும், கன்னிராகு எண்ணியதை முடித்துக் கொடுக்கும்.

கர்ம ஸ்தானத்தில் சனி சஞ்சரிப்பதால் பெற்றோரின் உடல் நலத்தில் கவனம் தேவை. ராகு- கேது- குரு ஆகிய மூன்று கிரகங்களுக்குரிய தெய்வ வழிபாட்டை முறையாகச் செய்தால், ஏற்ற இறக்கமில்லாத வாழ்க்கை அமையும். இல்லத்தில் அமைதி நிலவும். சர்ப்ப தலங்களுக்கு யோக பலம் பெற்ற நாளில் சென்று, பரிகாரம் செய்வது நல்லது. வியாழன் தோறும் குரு தட்சிணா மூர்த்திக்கு முல்லைப்பூ மாலை அணிவித்து வழிபட்டால், இல்லத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜனவரி 23 ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். உங்கள் ராசியிலேயே சுக்ரன் சஞ்சரிப்பது யோகம்தான். சுகாதிபதியான சுக்ரன் 9 ஆம் இடத்திற்கு அதிபதியாக இருப்பதால், பூர்வீக சொத்துக்களிலிருந்த பிரச்சினைகள் அகலும். தந்தை வழி உறவில் நெருக்கம் அதிகரிக்கும். உதாசீனப்படுத்திய உடன்பிறப்புகள் உங்களை வந்து சேருவர்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஜனவரி 28 ஆம் திகதி புதன் தனுசு ராசியில் வக்ரம் பெறுவது யோகம்தான். பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் வக்ரம் பெறும் பொழுது நீண்டநாள் ஆசை நிறைவேறும். திட்டமிடாத காரியங்களில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளின் திருமணங்களை முன்னிட்டு விலையுயர்ந்த பொருட்களை வாங்க முற்படுவீர்கள். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஈடுபாடு உருவாகும். செவ்வாய் பலம் நன்றாக இருப்பதால் தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும்.




பெப்ரவரி 8 ஆம் திகதி மகரத்தில் புதன் சஞ்சரிக்கப் போவதால் மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். சேமிப்பு உயரும். வீடு மாற்றச் சிந்தனைகளும், நாடுமாற்றச் சிந்தனைகளும் மேலோங்கும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 10 ஆம் திகதி மீன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் உங்களுக்கு ஒரு பொற்காலம் ஆகும். எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள். கூட இருப்பவர்களும், கூடப்பிறந்தவர்களும் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் வி.ஆர்.எஸ் பெற்றுக்கொண்டு சுயதொழிலில் செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் அனுமன் வழிபாடு அல்லல்களைப் போக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

வரவும் செலவும் உங்களுக்குச் சமமாக அமையும். செவ்வாய் பலத்தால் உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். கடன்சுமை பாதிக்கு மேல் குறையும். வக்ர குருவின் இயக்கத்தால் வருமானம், பற்றாக்குறையை உருவாக்கும்.

இதுபோன்ற நேரங்களில் உறவினர்களால் சில தொல்லைகள் வந்து சேரலாம். கணவன்-மனைவிக்குள் அன்பு மேலோங்கும். வீட்டு உபயோகப் பொருட்கள் மட்டுமல்லாமல் ஆடம்பரப் பொருட்களையும் மாதத்தின் மையப் பகுதியில் வாங்கும் வாய்ப்பு கிட்டும். குழந்தைகள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்டதூரப் பணி மாறுதல்கள் வந்து சேரலாம். பவுர்ணமி வழிபாடு பலன் தரும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**நினைத்தது நிறைவேறும்! தெய்வ வழிபாட்டால் தித்திக்கும் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளலாம் என்று சொல்லும் மீன ராசி அன்பர்களே!**

# நினைத்தது நிறைவேறும்!

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் வியாழன் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். எனவே உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிறரை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம். தொழில் ஸ்தானாதிபதியாகவும் குரு விளங்குவதால் தொழிலில் சில ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும்.

கூட்டாளிகள் நம்பிக்கைக்குரிய விதத்தில் நடந்துகொள்வார்களா என்பது சந்தேகம்தான். ஜென்மத்தில் கேது இருந்து ராசிநாதன் வக்ர இயக்கத்தில் இருக்கும் இம்மாதத்தில், கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்பட்டால்தான் காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்களை நம்பிச் செயற்படும் முன் ஒரு கணம் யோசிப்பது நல்லது.

தனாதிபதி செவ்வாய் விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால், கூடுதல் விரயங்கள் ஏற்படும். குறைந்த விலைக்கு வாங்கிப் போட்ட இடங்களை விற்க நேரிடலாம். அஷ்டமத்துச் சனி விலகிவிட்டாலும் ஜென்ம கேது, சப்தம ராகு, ராசிநாதன் வியாழனின் வக்ர இயக்கம் இவை அனைத்தும் இருப்பதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் எண்ணற்ற தடைகள் இருக்கும். தடைகளை விலக்குவது தெய்வ வழிபாடுகள்தான் என்பது நம் முன்னோர்களின் நம்பிக்கை.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது உங்கள் தெசாபுத்திக்கேற்ற தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து வழிபடலாம். கோச்சார ரீதியாக வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படும். எனவே ராகு, கேது பரிகாரமும், சர்ப்ப சாந்தி பரிகாரமும், குருவழிபாடும் தக்க விதத்தில் பலன் கொடுக்கும்.

லாப ஸ்தானத்தில் சூரியன், சுக்ரன், புதன்-இணைந்திருப்பதால், வரவுகளைக் காட்டிலும் செலவு அதிகமாக இருக்கும். ஒரு சில பயணங்களைத் தள்ளி வைக்க நேரிடும். வீடு மாற்றங்கள் நன்மை அளிக்கும் விதத்தில் அமையும். நாடு மாற்றங்களால் ஒருசிலருக்கு திருப்தி ஏற்படாது. குடும்ப உறுப்பினர்களின் குணங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் திண்டாடுவீர்கள். வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில்தான் பூர்த்தியாகும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**




ஜனவரி 23 ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 3, 8 இற்கு அதிபதி 12 இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜ யோகம் செயற்படும். எனவே திட்டமிடாமல் செய்த காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். திருமண முயற்சி திடீர் என கைகூடும். சுயதொழில் செய்பவர்கள் பணியாளர்களை மாற்ற முன்வருவர். வழக்குகள் சாதகமாக அமையும். பூமியோகமும், பொருளாதார விருத்தியும் அதிகரிக்கும் நேரமிது. பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். வங்கிச் சேமிப்பு உயரும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஜனவரி 28 ஆம் திகதி தனுசு ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். இதன் விளைவாக வாழ்க்கைத் துணை வழியே வந்த பிரச்சினைகள் அகலும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழிலில் கூட்டாளிகள் விலகினாலும் புதியவர்கள் வந்திணைவார்கள். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். அந்நிய தேச அழைப்புகளை ஏற்பதா? வேண்டாமா? என்று யோசிப்பீர்கள். பெப்ரவரி 8 ஆம் திகதி மகர புதனின் சஞ்சாரத்தால் நற்பலனை பெறப் போகிறீர்கள்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 10 ஆம் திகதி மீனத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக நற்பலன்கள் உங்களை தேடிவரப்போகிறது. பணப் புழக்கம் அதிகரிக்கும். பகைவர்கள் விலகுவார்கள். பக்கபலமாக இருப்பவர்கள் உங்கள் குரலுக்கு செவி சாய்ப்பார்கள். சிக்கல்கள், சிரமங்களில் இருந்து விடுபடுவீர்கள். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும். இம்மாதம் முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செய்வது நல்லது. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளால் ஆதாயம் குறையலாம். கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. வியாழன் வக்ர இயக்கத்தில் இருந்தாலும் அது உச்சம் பெற்றிருப்பதால், காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடும். பிள்ளைகளால் சில தொல்லைகளைச் சந்திக்க நேரிடும். புதன் வக்ர காலத்தில் தாய்வழி ஆதரவும் தனலாபமும் உண்டு. கடல் தாண்டும் முயற்சியில் ஒரு சிலருக்கு வெற்றி கிடைக்கும். ஆனைமுகப் பெருமான் வழிபாடும், ஆறுமுகப் பெருமான் வழிபாடும் ஆனந்தத்தை வழங்கும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கடமையை தவறாது செய்வதில் தான் தலையாய இன்பம் இருக்கிறது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நல்ல ஆட்சித் தலைவராகும் வாய்ப்பு மைத்திரிக்கே உண்டு

உலகில் எந்த நாட்டை எடுத்தாலும் அந்த நாட்டில் மக்களால் போற்றக் கூடிய தலைவர்கள் இருப்பர். தேகாந்த நிலையிலும் அவர்களின் புகழ் குறைவதில்லை. இந்தியாவில் மகாத்மா காந்தி, ஜவர்கலால் நேரு, இந்திரா காந்தி, காமராஜர், அண்ணாதுரை என்றவாறு புகழ் பூத்த மக்கள் தலைவர்களை அடையாளம் காட்டலாம்.

இதேபோல் அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கன், கெனடி. தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா என்றவாறு பட்டியல் நீண்டு செல்லும். இப்படி எல்லா நாட்டிலும் புகழ்பெற்ற தலைவர்கள் இருக்க, எங்கள் நாட்டில் மட்டும் எவரும் நல்ல தலைவர் என்று பெயர் எடுத்ததான வரலாறு இல்லை.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஒரு நல்ல தலைவர் என்று பெயர் எடுக்கக் கூடியவராக இருந்த போதிலும், தனிச் சிங்களச் சட்டத்தை கொண்டுவந்த தன் மூலம் அந்தத் தகுதியை இழந்து போனார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் அவருக்குப்பின்னராக ஆட்சியில் வந்த எவரும் மக்களால் ஏற்கக் கூடிய நல்ல தலைவர்களாக இருக்கவில்லை.

எனினும் இப்போது இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்கக் கூடிய மைத்திரிபால சிறிசேன ஒரு நல்ல மக்கள் தலைவராக வரக் கூடிய வாய்ப்பைக் கொண்டுள்ளார்.

இதற்குக் கட்டியம் கூறுவது போல, மூவின மக்களினதும் ஆதரவோடு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ளார். அதிலும் குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்களின் ஏகோபித்த ஆதரவு மைத்திரிக்கு இருந்தமை ஒரு நல்ல சூழமைவாகும்.

இதற்கு அப்பால், இலங்கைக்கு விஜயம் செய்திருந்த புனித பாப்பரசர் பிரான்ஸிஸ் ஆண்டகை அவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு எளிமையான தலைவர் என்று கூறியிருப்பது இலங்கையில் எந்த ஆட்சித் தலைவருக்கும் கிடைக்காத மிகப் பெரிய வெகுமதியாகும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு விஜயம் செய்த புனித பாப்பரசர், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற சில தினங்களில் இலங்கைக்கு வந்திருந்தார்.

நாட்டின் ஜனாதிபதி என்ற உயரிய பதவியைப் பெற்ற கையோடு, திருத்தந்தையை வரவேற்கும் கொடை மைத்திரிக்குக் கிடைத்திருந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவதானித்த புனித பாப்பரசர் ஒரு செய்தியைத் தெரிவித்தார். அந்தச் செய்தியில் 'இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போன்ற எளிமையான ஒரு மனிதரை என்வாழ்க்கையில் நான் சந்தித்ததில்லை. இதனால் மைத்திரிபால சிறிசேன மீது புதுமையான அன்பும் கௌரவமும் என்னிடம் ஏற்பட்டது' என புனித பாப்பரசர் தெரிவித்திருந்தார்.

திருத்தந்தையின் இந்த உயரிய விருது வாக்கு உலகத் தலைவர்களில் ஜனாதிபதி மைத்திரிக்கே கிடைத்தது என்று கூறும்போது,

அட! தமிழ் இனம் தெரிவு செய்த ஒரு தலைவர் அல்லவா? அவர். தமிழர்கள் எப்போதும் நல்ல- எளிமையான தலைவர்களையே விரும்புகின்றனர். அத்தகையவர்களை ஆதரிப்பதற்கு அவர்கள் ஒருபோதும் தயங்கியது இல்லை என்ற செய்தி உலகத்திற்கு உறுதி செய்யப்படுகின்றது.

அதேநேரம் மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்த சிங்கள மக்களும், மைத்திரிக்கு வாக்களித்த தமிழ் மக்களின் சிந்தனைத் தெளிவை விளங்கிக் கொள்வர் என நம்பலாம்.

எதுவாயினும், இலங்கைத் திருநாட்டில் நல்ல ஆட்சித் தலைவர் இல்லை என்ற ஒரு பெரும் குறையை தீர்க்கக் கூடிய வாய்ப்பும் தகைமையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமே இருக்கிறது.

எனவே ஜனாதிபதி மைத்திரிபால தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைத் தரவேண்டும். இதன் மூலம் இலங்கையில் இன ஒற்றுமையை ஏற்படுத்திய தலைவர் என்ற பெருமையையும் அவர் தனதாக்க வேண்டும்.

அதேநேரம் நாம் **இலங்கையர்** என்ற தேசிய ஒற்றுமைப்பாட்டை -உணர்வை ஏற்படுத்துகின்ற பாரிய பொறுப்பும் ஜனாதிபதி மைத்திரியினுடைய தாகும்.

# பொன்சேகாவுக்கு மீண்டும் வாக்குரிமை

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு மீண்டும் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொன்சேகாவுக்கு மீண்டும் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளதை அடுத்து அவரது பிறந்த ஊரான அம்பலாங்கொடவில் ஆங்காங்கே பட்டாசுகள் கொளுத்தி மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சரத் பொன்சேகா 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து பொது வேட்பாளராக போட்டியிட்டதன் காரணமாக மகிந்த அரசாங்கம் அவரை அரசியல் ரீதியாக பழிவாங்கியது.

இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு இராணுவ பதவிப் பட்டங்கள், ஓய்வூதியம், வாக்குரிமை, குடியுரிமை என்பன பறிக்கப்பட்டதுடன் சிறையிலும் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில், புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சரத் பொன்சேகாவை சகல குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுதலை செய்தார்.

இதனால், அவருக்கு மீண்டும் இராணுவப் பட்டங்கள் உள்ளிட்ட சிறப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளதுடன தற்போது வாக்குரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-11)

# தூய நீர் வழங்க செயலணி உருவாக்கம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியிலுள்ள கிணறுகளில் ஏற்பட்ட கழிவு எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தூயநீர் வழங்குவதற்கான செயலணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ். பொது நூலகத்தில் கேட்போர் கூடத்தில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த செயலணி உருவாக்கப்பட்டது.

இந்த செயலணியின் இணைத் தலைவர்களாக வடமாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், சுகாதார அமைச்சர் பத்மநாதன் சத்தியலிங்கம் ஆகியோரும், துணைத் தலைவராக யாழ். மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகமும், செயலாளராக விவசாய அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

மத்திய சுற்றாடல் அமைச்சின் தலைவர், நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். மாவட்ட பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் அங்கம் வகிப்பவர்கள், அனர்த்த முகாமைத்துவ பிரிவு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர்கள், பொதுமக்கள் சார்பில் இரு பிரதிநிதிகள் ஆகியோர் இந்த செயலணியில் அடங்குகின்றனர்.

இந்தச் செயலணியில் சேர விருப்பம் தெரிவித்த வடமாகாண எதிர்க்கட்சி தலைவர் சின்னத்துரை தவராசா, எதிர்க்கட்சி உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் இணைக்கப்பட்டுள்ளனர். இந்த செயலணியின் செயற்பாடுகளில் ஏற்கெனவே நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் இதில் இணைக்கப்பட்டுள்ளார். (எ-4)

# அகதிகள் திரும்புவது குறித்து பேச்சு

(சென்னை)

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகள், நாடு திரும்புவது குறித்த பேச்சு இருநாட்டு பிரிதிநிதிகளுக்குமிடையில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு செய்தித் தொடர்பாளர் சையத் அக்பருதீன தெரிவித்தார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தியா வந்த சமயம் இது குறித்து பேசப்பட்டதென்றும் அவர தெரிவித்தார். அகதிகளுக்கான ஐ.நா. மன்றம், ஐரோப்பிய ஒன்றியம் என்பன இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை அவர்களது சொந்த நாட்டில் குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்கு உதவ முன்வந்துள்ளன.

இதுகுறித்து அந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் இலங்கையின் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனைச் சந்தித்து பேசினர். இதன்போது இந்தியாவிலிருந்து அழைத்துவரப்படும் மக்களுக்காக வாழ்வாதார தொழில் உதவிகளை வழங்குவதற்கு அந்த நிறுவனங்கள் இலங்கைக்கு உதவ உறுதியளித்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# பயிற்சிப் பட்டறை

விளையாட்டு விஞ்ஞான பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை நாளை 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை மருத்துவ மாணவர் விடுதி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (இ

# மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியானது நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை பொது மைதானத்தில் பாடசாலை அதிபர் த.தயானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.குலபாலசிங்கம், கௌரவ விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் வே.சண் முகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

❖❖❖❖❖❖❖

இமையாணன் அ.த.க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை பொது மைதானத்தில் பாடசாலை அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ

# ஆதனவரியைச் செலுத்தி சலுகைகளைப் பெறுங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்கள் தொடர்பாக பத்திரிகைகளில் கடந்த 31.12.2014 திகதி நானாவித அறிவித்தல்கள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட விளம்பரங்களிற்கமைய 10% வரிக் கழிவினைப் பெறுவதற்கான கால எல்லை 30.01.2015 திகதியுடன் நிறைவடைகின்றது. எனவே பொதுமக்கள் 30.01.2015இற்கு முன் ஆதன வரியினைச் செலுத்தி குறித்த சலுகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ

# சத்திய தரிசனம்



## உண்மையே வெல்லும்


❖ உலகம் இன்ப, துன்பம் கலந்த கலவை. முள் இருந்தாலும், விழிப்புடன் ரோஜாவைப் பறிப்பது போல துன்பத்தை விலக்கி இன்பத்தைப் பெற முயல வேண்டும்.

❖ பண்பு இல்லாதவனின் வாழ்க்கை இருண்ட கோயில் போன்றது. நற்பண்புகளே வாழ்விற்கு ஒளியூட்டுகிறது.

❖ உண்மையே எப்போதும் வெல்லும் ஆற்றல் படைத்தது. இதில் சந்தேகம் கொள்வது கூடாது.

❖ தகுதியானது எதுவோ அது முடிவில் உங்களுக்கு கிடைக்கவே செய்யும்.

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்




## உறங்கி எழுந்ததும் உள்ளங்கையை பார்க்க வேண்டும் என்பது ஏன்?

நாம் நமது அன்றாடப் பணிகளைச் செய்வதற்கு கைகள் மிகவும் பயன்படுகின்றது. கைகளின் உதவியில்லாமல் எந்த ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. செயல்களுக்குரிய புலன்களில் கைகளுக்குத் தனி இடம் உண்டு. இறையுருவத்தை வணங்க, புஷ்பத்தை அள்ளிச் சமர்ப்பணம் செய்ய கைகள் உதவும். இறையுருவங்கள், அபய வரத முத்திரைகளைத் தாங்கிய திருக்கரங்களுடன் காட்சி தரும் இறையுருவத்தின் பெருமையை கைகள் வெளிப்படுத்தும். கைகளை கடவுளுக்குச் சமனமாகச் சொல்கிறது வேதம் (அயம் மெஹஸ்தோ பகவான்...). திருமணத்தை நிறைவு செய்வது பாணிக்ரஹணம் அதாவது, கை பிடித்தல்... கன்னிகையின் கை பிடித்து வரனிடம் அளிக்க வேண்டும். அரசர்களையும் துறவிகளையும் கைத்தாங்கி பெருமைப்படுத்துவார்கள். மந்திர ஜபங்களில் கரன்யாசத்துக்குக் கைகள் வேண்டும். முதுமையில் ஊன்றுகோலைப் பயன்படுத்த கை வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ணத்திலிருந்து சுனில் நரேன் விலகல்



மேற்கிந்தியஅணியின் முன் னணி சுழற்பந்து வீரர் சுனில் நரேன். உலக்கிண்ண போட்டியில் இருந்து விலகியுள்ளார் என்று கிரிக்கெட் வாரியம் அறிவித்துள் ளது.

மேற்கிந்திய அணியின் முன் னணி சுழற்பந்து வீரர் சுனில் நரேன் உலகக்கிண்ண போட்டிக் கான 15 பேர் கொண்ட அணியில் இடம் பெற்று இருந்தார்.

ஆனால், தற்போது அவர் விலகி யுள்ளதாக கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் விளையாடி வரும் அவ ரது பந்து வீச்சு குறித்து சம்பியன் லீக் போட்டியில் சந்தேகம் எழுப் பப்பட்டது.

அவரது பந்து வீச்சு முறை யற்றதாக இருப்பதாக கூறி இந்திய கிரிக்கெட் வாரியம் நடத்தும் போட் டிகளில் பங்கேற்க தடை விதிக் கப்பட்டது.

இந்நிலையில், தனது பந்து வீச்சை சரி செய்வதற்காக சுனில் நரேன் உலகக்கிண்ண போட்டி யில் இருந்து விலகியுள்ளார். சர் வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) கேள்வி எழுப்பும் முன்பு அவர் விலகியதாக கூறப்படுகிறது.

அவருக்கு பதிலாக மாற்று வீரரை மேற்கிந்திய கிரிக்கெட் வாரியம் விரைவில் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# ஆசியின் சிறந்த வீரராக ஸ்டீவன் ஸ்மித் தெரிவு



அவுஸ்திரேலியாவில் வழங் கப்படும் சிறந்த வீரருக்கான விருது ஸ்டீவன் ஸ்மித்துக்கு வழங்கப்பட் டுள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் இளம் வீரர் ஸ்டீவன் ஸ்மித்(வயது 25).

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது அணித்தலைவர் கிளார்க் காயத்தால் வெளியேறவே, ஸ்மித் அணித்தலைவராக பொறுப் பேற்றார்.

அந்த தொடரை 2:0 என்ற கணக்கில் வென்றதுடன், இந்தி யா வுக்கு எதிராக தான் விளையாடிய மூன்று போட்டிகளிலும் தொடர்ந்து சதமடித்தார்.

இந்நிலையில் இந்த ஆண் டுக்கான 'ஆலன்பார்டர்' விருது ஸ்மித்துக்கு கிடைத்துள்ளது.


இதற்கான வாக்கெடுப்பில் வீரர்கள், பயிற்சியாளர்கள், பத்திரி கையாளர்கள் பங்கேற்றனர்.

இதில் சக வீரர்கள் வோனர் (175 வாக்கு), மிட்சல் ஜான்சனை (126) பின்தள்ளி, 243 வாக்குகள் பெற்ற ஸ்மித் விருதை கைப்பற் றினார்.

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட் டிகளில் சிறந்த வீரருக்கான விரு தையும் ஸ்மித் வென்றார்.

மேலும் இருபது-20 போட்டிக ளில் சிறந்த வீரருக்கான விருதை மக்ஸ்வெலும், சிறந்த இள வீரரருக்கான பிராட்மேன் விருதை சியான் அபாட்டும் வென்றனர்.(க)

# கிராண்ட்ஸ்லாம் டெனிஸ்; செரீனா வில்லியம்ஸ் வெற்றி



அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட் ஸ்லாம் டெனிஸ் போட்டிகளில் நேற்று நடைபெற்ற மகளிர் காலி றுதி ஆட்டத்தில் செரீனா வில்லி யம்ஸ் வெற்றி பெற்று அரையிறு திக்குள் நுழைந்தார்.


அமெரிக்காவை சேர்ந் தவரும், டெனிஸ் தர வரிசைப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளவருமான செரீனா, ஸ்லோவாகியா நாட்டை சேர்ந்தவரும் தர வரிசைப்பட்டி யலில் 11ஆவது இடத்தில் உள் ளவருமான சிபுல்கோவாவை எதிர் கொண்டார்.

இதில் 65 நிமிடங்களில் 6:2, 6:2 என்ற நேர்செட்களில் செரீனா வெற்றிபெற்றார்.

அதேபோல் மகளிர் காலிறுதி போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் தர வரிசை பட்டியலில் 35ஆவது இடத்தில் உள்ள அமெரிக்காவின் மேடிசன் கீஸ், தனது சக நாட்ட வரும், தரவரிசை பட்டியலில் 18ஆவது இடத்தில் உள்ளவரு மான வீனஸ் வில்லியம்சை 6:3, 4:-6, 6:4 என்ற செட் கணக்கில் வீழ்த்தி முதல்முறை யாக அரையிறு திக்குள் நுழைந்தார். (க)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# அவுஸ்திரேலிய ஓபன் டெனிஸ்; அரையிறுதிக்கு சானியா தகுதி



அவுஸ்திரேலிய ஓபன் கிராணட் சிலாம் போட்டிகளில் நேற்று நடை பெற்ற கலப்பு இரட்டையர் பிரி விற்கான காலிறுதி போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா-பிரே சிலின் சோரெஸ் ஜோடி வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

கலப்பு இரட்டையர் பிரிவிற் கான தரவரிசை பட்டியலில் முதல் நிலையில் உள்ள சானியா-சோரெஸ் ஜோடி, அவுஸ்திரேலியாவின் டெல் லாக்குவா-பியர்ஸ் ஜோடியை 6:2, 6:2 என்ற நேர் செட் களில் தோற கடித்து வெற்றி பெற்றது. (க)



# ரோஹித் சர்மா ஓய்வு

காயத்தில் இருந்து மீளாத ரோஹித் சர்மா, உலக கிண்ண தொடருக்கு முன் எந்த போட்டியிலும் பங்கேற்க போவதில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் முத்தரப்பு ஒருநாள் தொடர் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

இதுவரை நடந்த லீக் போட்டி களின் முடிவில் அவுஸ்திரேலிய அணி 15 புள்ளியுடன் இறுதிச் சுற் றுக்கு முன்னேறி விட்டது. இங் கிலாந்து(5), இந்தியா(2) அடுத்த இரு இடங்களில் உள்ளன.

வரும் 30ஆம் திகதி நடக்கும் கடைசி லீக் போட்டியில் இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோது கின்றன. இதில் வெற்றி பெறும் அணியே இறுதிச்சுற்றுக்கு முன்னே றும்.

இந்த போட்டியில் காயம் காரண மாக இந்திய அணியின் ரோஹித் சர்மா பங்கேற்கமாட்டார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.


இதுகுறித்து இந்திய அணி நிர் வாகம் வெளியிட்ட செய்தியில், ரோஹித் சர்மா இப்போது தான் தேறி வருகிறார். இவரது எம்.ஆர்.ஐ., ஸ்கேன் அறிக்கைப்படி, ஒருவாரம் ஓய்வில் இருக்க வேண்டும் என பிசியோதெரபிஸ்ட் கூறியுள்ளார்.

இதன் பிறகு தான் பயிற்சியை தொடங்க முடியும், உலக கிண் ணத் தொடர் தொடங்க இன்னும் சில வாரங்கள் மட்டுமே உள்ள நிலை யில் ரோஹித் சர்மா விடயத்தை ரிஸ்க் எடுக்க விரும்பவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-நியூசிலாந்து ஒரு நாள் போட்டி இன்று





இலங்கை – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 7ஆவது இறுதியுமான ஒருநாள் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்குபற்றுகிறது.

இதுவரை நிறைவடைந்த 6 போட்டிகளின் நிறைவில் நியூசிலாந்து 4:1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில் 7ஆவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி இன்று வெலிங்டனில் இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

நியூசிலாந்து அணியைப் பொறுத்தவரை அதன் வழமையான தலைவர் மக்கலத்துக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது. இதனால் வில்லிம்ஸன் அணியை வழிநடத்தவுள்ள அதேவேளை, இலங்கை அணியில் அணித் தலைவர் மத்யூஸ், ரங்கன ஹேரத் ஆகியோரும் இடம்பெற மாட்டார்கள். அத்துடன் தம்மிக்க பிரசாத்துக்கு பதிலாக இளம் வேகப் பந்துவீச்சாளர் டுஸ்மந்த் சமீரா அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

இரு அணிகளது விபரம்:

**இலங்கை:**

லஹிரு திரிமன்னே (அணித் தலைவர்), டில்சான், கருணாரட்ண, லக்மல், ஜீவன் மெண்டிஸ், டுஸ்மந்த் சமீரா, சேனநாயக்க, சண்டிமல், சமிந்த எரங்க, மஹேல ஜெயவர்த்தன, குலசேகர, திஸார பெரேரா, சங்கக்கார.

**நியூசிலாந்து:**

கேன் வில்லியம்ஸன் (அணித் தலைவர்), போல்ட், கப்ரில், மக்லேனகேன், மில்ஸ், றோஞ்சி, றோஸ் ரெய்லர், கோரி அண்டர்சன், எலியேட், லதம், நேதன் மக்கலம், மில்ன், சௌதி, வெட்டோரி. (க)


# ஆஸி ஓபன் டென்னிஸ் அரையிறுதியில் ஜோகோவிச்

கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் போட்டிகள் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகின்றன. இதில், ஆடவர் ஒற்றையர் பிரிவில் உலகின் நம்பர்-1 வீரரான நோவக் ஜோகோவிச் (சேர்பியா) அரையிறுதிக்கு முன்னேறினார்.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் கனடாவின் மைலோஸ் ரவோனிக்கை எதிர்கொண்ட ஜோகோவிச், 7-6(7-5), 6-4, 6-2 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்றார். இதையடுத்து ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் ஸ்டான் வாரிங்காவுடன் ஜோகோவிச் மோத உள்ளார்.

சுவிட்சர்லாந்தின் 4-ம் தரநிலை வீரரான வாரிங்கா கடந்த ஆண்டு காலிறுதியில் ஜோகோவிச்சை வீழ்த்தியதுடன், முதல் முறையாக அவுஸ்திரேலிய ஓபன் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

கடந்த ஆண்டு அடைந்த தோல்விக்கு பழிவாங்கும் வகையில் இந்த ஆண்டு வாரிங்காவை வீழ்த்த ஜோகோவிச் கடுமையாக போராடுவார். இந்த போட்டியில் நிச்சயம் வெற்றி பெறுவதாகவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (க)



# சுப்பர் கிங்ஸை வாங்கும் த்ரிஷா-வருண்மணியன் ஜோடி!



த்ரிஷா வருண்மணியன் ஜோடி சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை விலைக்கு வாங்கப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

த்ரிஷா- வருண்மணியன் திருமண நிச்சயதார்த்தம் இரு தினங்களுக்கு முன் சென்னையில் நடந்தது.

மார்ச் மாதத்துக்கு பிறகு திருமணம் செய்து கொள்ள திட்டமிட்டு உள்ளனர்.

திருமணத்துக்கு பிறகு வருண் மணியனுடன இணைந்து த்ரிஷா படங்கள் தயாரிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில், உச்சநீதிமன்ற உத்தரவால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி விற்பனைக்கு வருகிறது. த்ரிஷாவும், வருண்மணியனும் சென்னை சுப்பர் கிங்ஸ் கிரிக்கெட் அணியை வாங்குவது பற்றி யோசிப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (க)

# முன்னர் இடம்பெற்ற மிரட்டல்களுக்கு கோத்தபாயவே முக்கிய காரணம்

## நல்லாட்சிக்கான சட்டத்தரணிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள், மிரட்டல்கள் உட்பட அனைத்து குற்றச் செயல்களுக்கும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷவே காரணம் என நல்லாட்சிக்கான சட்டத்தரணிகள் என்ற அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் 2012 நவம்பரில் இடம்பெற்ற கலவரங்களுக்கு காரணமானவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அந்த அமைப்பு இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய சட்டத்தரணி சேனஹ பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார். நவம்பர் 2012 இல் வெலிக்கடையில் நடைபெற்ற கலவரங்களை நியாயப்படுத்துவதிலேயே அதிகாரிகள் இதுவரை ஈடுபட்டுள்ளனர். ஏன் இந்த சம்பவங்கள் இடம்பெற்றன? யார் இதற்கு காரணம் என எந்த வித விசாரணைகளும் இடம்பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள், அச்சுறுத்தல்கள், குற்றச்செயல்கள் அனைத்திற்கும் கோத்தபாய ராஜபக்ஷவே பொறுப்பு. அவரின் ஆசீர்வாதத்துடனேயே அவை அனைத்தும் இடம்பெற்றன.

இதுகுறித்து குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் முறையிடப்போகின்றோம் எனத் தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலை கலவரம் நடைபெற்றவேளை உள்ளேயிருந்த சுதேஷ் நந்திமல் என்பவர் வலுக்கட்டாயமாக உள்ளே நுழைந்த படையினர் தங்களை தாக்கினர் என குற்றஞ்சாட்டினார். உள்ளே என்ன நடந்தது என்பதை தெரிவிப்பதற்காக எந்த நீதிமன்றமும் செல்வதற்கு தயார் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-11)

# மோதலில் ஈடுபட்ட ரொனால்டோவுக்கு தடை



ரொனால்டோ வருத்தம் தெரிவித்தார்.

லா லிகா கால்பந்து போட்டியில் எதிரணி வீரருடன் மோதலில் ஈடுபட்ட ரியல் மாட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு 2 போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின் நாட்டில் நடைபெற்று வரும் லா லிகா கால்பந்து தொடரில், சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் கார்டோபா-ரியல் மாட்ரிட் அணிகள் மோதின.

போட்டி முடிய 7 நிமிடங்கள் இருந்த நிலையில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்திருந்தன. இதனால் வெற்றி பெற இரு அணி வீரர்களும் கடுமையாக போராடினர்.

அப்போது எதிரணி வீரர் எடிமருடன் ரொனால்டோ மோதலில் ஈடுபட்டார். உடனடியாக அவருக்கு சிவப்பு அட்டை காண்பித்த நடுவர், அவரை போட்டியில் இருந்து வெளியேற்றினார். இருப்பினும் கடைசி நேரத்தில் கேரத் பேல் அடித்த கோலால் ரியல் மாட்ரிட் அணி 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. எடிமருடன் சண்டையிட்டதற்காக ரொனால்டோ வருத்தம் தெரிவித்தார்.

இந்நிலையில், எதிரணி வீரரை உதைத்த குற்றத்திற்காக 2 போட்டிகளில் விளையாட ரொனால்டோவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், ரியல் சோசிடாட் மற்றும் செல்வியா அணிகளுக்கு எதிராக ரியல் மாட்ரிட் அணி விளையாடும் இரண்டு போட்டிகளிலும் அவர் [illegible] லெடிகோ மாட்ரிட் [illegible] போட்டியில் களமிறங்குவார். (க)

# என் பெயரை கூறிவிட்டார் ஒபாமா சந்தோஷ மகிழ்ச்சியில் மேரி கோம்



அமெரிக்க அதிபர் ஒபாமா, எனது பெயரை குறிப்பிட்டு பேசியது பெருமையாக உள்ளது என்று இந்திய குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, இந்திய சாதனையாளர்கள் பற்றி எடுத்து பேசும் போது, இந்திய குத்துச்சண்டை மங்கை மேரி கோமின் பெயரையும் குறிப்பிட்டு பாராட்டியுள்ளார்.

இதனால் பூரித்து போயுள்ள மேரி கோம் அளித்த பேட்டியில், எனது பெயரையும் குறிப்பிட்டு பேசிய ஒபாமாவுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவர் யாருடைய பெயரையும் தெரிவு செய்திருக்கலாம். ஆனால் எனது பெயரை தெரிவு செய்தது உண்மையிலேயே ஆச்சரியம் அளித்தது.

சில ஆண்டுகளாக குத்துச்சண்டையில் நான் செய்த சாதனைகளுக்கு கிடைத்த அங்கீகரமாக இதை கருதுகிறேன். இதனால் நான் மிகவும் பெருமை அடைகிறேன்.

எப்போதாவது அவரை சந்திக்க வாய்ப்பு கிடைத்தால், என்னை ஊக்குவித்தமைக்காக அவருக்கு நிச்சயம் நன்றி தெரிவிப்பேன் என்று கூறியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நொதேர்ன் நிறுவனத்தின்...

எதிராக மக்கள் போராட்டங்களையும ஆரம்பித்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் எஸ்.சதீஸ்கரன் முன்னிலையில் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் குறித்த மின் உற்பத்தி நிறுவனத்தில் வெளியேறும் கழிவு ஒயில் தொடர்பில் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதோடு அவ் அறிக்கை தொடர்பில் விஞ்ஞான ரீதியிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் வரை தற்காலிகமாக நிறுவனத்தின் செயற்பாடுகளை நிறுத்தி வைக்குமாறும் உத்தரவிட்டிருந்தார்.

மல்லாக நீதிமன்றத்தின் மேற்படி இடைக்கால தடையுத்தரவை தள்ளுபடி செய்யக் கோரி யாழ் மேல் நீதிமன்றத்தில் குறித்த மின் உற்பத்தி நிறுவனத்தினர் சட்டத்தரணி ஊடாக நேற்று மேன் முறையீடு ஒன்றினைச் செய்திருந்தனர். மேன்முறையீடு தொடர்பான வழக்கு யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நடைபெற்றது.

இதில் மனுதாரர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத் தரணிகளான ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்ன சிங்கம், வி.மணிவணணன், ஆகியோர் குறித்த மேல் முறையீட்டினை மேல் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக் கூடாதெனவும் நொதேர்ன் பவர் நிறுவனத்தின் கழிவு எண்ணெய் தான் நிலத்தடி நீரில் எண்ணெய்க் கலப்பிற்கு காரணமெனவும் அதற்கான ஆதாரங்கள் மற்றும் சான்றுகள் உள்ளன எனவும் வாதிட்டனர்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகளின்வாதப் பிரதி வாதங்களை ஆராய்ந்த நீதி பதி எதிர் மனுதாரரின் மேன் முறை யீட்டு விண்ணப்பத்தை நிராகரிபபுச் செயதார். (எ-4)

## வீட்டின் மீது...

தல்கள் விடுக்கும் வகையில் நடந்துக் கொண்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி குறித்த குழுவினருடன் மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலியும் இருந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

நீதியரசர் உடனடியாக விலக வேண்டும் அல்லது பல விதமான பிரச்சினைகளை சந்திக்க வேண்டும் என மொஹான் பீரிஸிற்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிடைத்த தகவலின்படி மேலதிக விசாரணை மேற்கொள்ளபடும் என பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதேவேளை மத்திய மாகாண உறுப்பினர் அசாத் சாலி நேற்று முன்தினம் இரவு தன் வீட்டிற்கு வந்து அச்சுறுத்தல் விடுத்ததாக பிரதம நீதியரசர் பொலிஸாருக்கு முறைபாடு வழங்கியிருந்தார்.

எப்படியிருப்பினும் அதன் பின்னர் நடத்திய விசாரணையில் தான் எந்த அச்சுறுத்தலையும் விடுக்கவில்லை நட்பு ரீதியாக பேசுவதற்கே சென்றேன் என்று அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

மேலும் பிரதம நீதியரசர் வழங்கிய முறைப்பாடு தொடர்பாக தொடர்ந்தும் விசாரணையை மேற்கொள்வதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (எ-11)

# முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் மகனின் மீது விசாரணை !

## பாதுகாப்புச் செயலர் உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகனான யோசித ராஜபக்ஷ தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு படைத்துறைச் செயலாளர் உத்தரவிட்டுள்ளார்.

கடற்படையில் யோசித ராஜபக்ஷ இணைந்த முறை, அவர் வெளிநாட்டு பயிற்சிக்காக அனுப்பப்பட்ட விதம் மற்றும் பணியில் இருந்த போது அரசியலில் ஈடுபட்டமை தொடர்பிலேயே விசாரணைகளை நடத்துமாறு படைத்துறைச் செயலாளர் பணித்துள்ளார்.

அதேவேளை, கடற்படையில் இருந்து விலகுவதாக லெப்.யோசித ராஜபக்ஷ வழங்கிய பதவி விலகல் கடிதத்தை கடற்படைத் தளபதி நிராகரித்துள்ளார்.

லெப்.யோசித ராஜபக்ஷ தனது பதவி விலகல் கடிதத்தை கடந்த 9ஆம் திகதி கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேராவுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

ஆயினும், லெப்.யோசித ராஜபக்ஷவின் பதவி விலகல் கடிதத்தை கடற்படைத் தளபதி ஏற்றுக் கொள்ளவில்லை என்று கடற்படையின் குரல தரவல்ல அதிகாரி கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார். (எ-11)

## பிரிட்டன்...

நீதியரசர் சி.வி.விக்கனேஸ்வரன் உள்ளிட்ட தரப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து யாழ் பொது நூலகத்திற்குச் சென்று அங்கு ஒரு தொகுதி நூல்களையும் கையளிக்கவுள்ளார்.

இதன் பின்னர் வலி வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நீண்டகாலமாக முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்ற மக்களைச் சந்திப்பதற்காக சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமிற்கும் செல்லவுள்ளார்.

இதேவேளையில் இதற்கு முன்னதாக இந்த முகாமிற்கு பிரிட்டன் பிரதமர் டேவிட் கமருனும் வந்திருநதமையும் குறிப்பிடத்தக்கது.

முகாம் மக்களுடனான அமைச்சரின் சந்திப்புக்களின் போது மக்களின்காணிகள்விடுவிக்கப்பட வேணடும், இடம்பெயர்ந்த அனைவரும் மீள்குடியேற்றப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றும் வலி வடககு புனர்வாழ்வு மீள்குடியேற்றக் குழுவினால் கையளிக்கப்பட உள்ள தாக அந்தக் குழுவின் தலைவர் எஸ்.சஜீவன் தெரிவித்துள்ளார். (செ-4)

## பொன்சேகா...

நாயகக் கட்சியின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேர்தலின் பின்னர் கூட்டணி அமைப்பது தொடர்பில் தீர்மானிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் 98,800க்கும் அதிகமான மக்கள் வாக்களித்து தனக்கு அங்கீகாரம் வழங்கியிருந்ததாக இதன்போது பொன்சேகா நினைவு கூர்ந்தார்.

அந்த சந்தர்ப்பத்தில் நாட்டில் ஆட்சியிலிருந்த ஊழல்மிகு அரசாங்கம் தனது வாக்குகளை திருடியதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் குற்றஞ்சாட்டினார்.

மக்கள் தற்போது தனக்கு வழங்கி வருகின்ற ஆதரவை அவதானிக்கையில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவடடத்தில் இரட்டிப்பான வாக்கு களை பெற்று வெற்றியீட்ட முடியும் என்ற நம்பிக்கை தனக்கிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (எ-11)

## மைத்திரிபால தலைமை...

கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பதால், கட்சியினை மேலும் வலுப்படுத்த அது உதவியாக அமையும். ஜனாதிபதி கட்சியின் தலைமை பதவியை ஏற்று இரண்டாக பிளவுபடுவதை தடுத்து காப்பாற்றினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதே எமது நோக்கம். இதற்காக அனைவரும் பொறுமையாக செயற்பட வேண்டும்.

அத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெரும் சேவைகளை செய்துள்ளார். அதனையும் இந்த சந்தர்ப்பத்தில் கட்டாயமாக நினைவுகூர வேண்டும்.

நாங்கள் அங்கம் வகித்த அரசாங்கத்தில் குறைபாடுகள் பல இருந்தன என்பதை ஏற்றுக்கொள்கிறோம் எனவும் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## பிரதம நீதியரசராவார்...

நீக்கப்பட்ட 43 வது பிரதம நீதியரசர் நேற்று மீண்டும் அந்த பதவியில் கடமையாற்றியதுடன் ஒருநாளில் ஓய்வு பெறுவார் என்று கூறப்படுகிறது.

44 வது பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்ட மொஹான் பீரிஸ் இன்னும் பதவியை ராஜினாமா செய்யவில்லை. எனினும் அவரது நயமனம் சட்டவிரோதமானது என புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த நிலையில், இன்றையதினம் புதிய பிரதம நீதியரசராக ஶ்ரீபவன் நியமிக்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியல் சர்ச்சையான சூழ்நிலையில், அவர் பிரதம நீதியரசராக பதவியேற்பதில் தயக்கம் காட்டி வருவதாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நீதியரசர் கே.ஶ்ரீபவன் முன்னிலையிலேயே பதவிப் பிரமாணம் செய்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-11)

## பதவியேற்றார்...

னாள் தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கா, நேற்று புதன்கிழமை மீண்டும் அந்தப் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

அதனையடுத்து பதவிகளை பொறுப்பேற்க உச்சநீதிமன்றம் வந்த அவரை அங்கு கூடியிருந்த சட்டத்தரணிகள் வரவேற்றார்கள். அவர் தனது அலுவலகத்துக்கும் சென்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

ஷிராணி பண்டாரநாயக்காவை பதவி நீக்கம் செய்ததற்கான தீர்மானம் பாராளுமன்றத்தில் முறையாக நிறைவேற்றப்படாத காரணத்தினால், அவரது பதவி நீக்கம் செல்லுபடியாகாது என்றும், அதேவேளை மொஹான பீரிஸ் அவர்கள் தலைமை நீதியரசராக நியமிக்கப்பட்டமை சட்டவிரோதமானது என்றும் மூத்த சட்டத்தரணியும், பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் கூறினார்.

அதனால்தான் ஷிராணி தொடர்ந்து பணியாற்ற முடியும் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே தற்போது பதவிநீக்கம் செய்யப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருக்கும் முன்னாள் தலைமை நீதிபதி மொஹான் பீரிஸை கண்டிக்கும் ஆர்ப்பாட்டமொன்று நேற்றுக் காலை உச்சநீதிமன்ற வளாகம் முன் நடைபெற்றது. (எ-11)

## முன்னாள் ஜனாதி...

அலரி மாளிகை எனும் பெயரில் வழங்கப்பட்டுள்ளதாகவும் உள்ளக போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபைக்கு வழங்க வேண்டிய 1,425 இலட்சம் ரூபாயை வழங்குமாறு, தலா 250 இலட்சம் வழங்கிய இருவருக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் செயலாளருக்கும் கடிதம் அனுப்ப தீர்மானிககப்பட் டுள்ளதாக வும் அமைச்சர் கூறினார்.

இதற்காக பதில் கிடைக்காவிட்டால் நீதிமன்றத்தின் ஊடாகவோ அல்லது அரசாங்கத்தின் ஊடாகவோ குறித்த பணத்தை இலங்கை போக்குவரத்து சபைக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் கூறியுள்ளார். (எ-11)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தசாமி மகேஸ்வரி.



வட்டுக்கோட்டை தெற்கைச் சேர்ந்த திருமதி கந்தசாமி மகேஸ்வரி கடந்த ஞாயிற்றுக்கிழமை (25.01.2015) அன்று காலமானார்.

அன்னார் தம்பையா ஞானம்மாளின் அருமைப் புதல்வியும் சண்முகம் கந்தசாமியின் அருமை மனைவியும், சசிதரன், சஞ்சுதா, விஜிதரன், கவிதரன் காலஞ்சென்ற ஜெயசுதா ஆகியோரின் அன்புத் தாயாரும், சசிதரன், அனுசியாவின் அன்பு மாமியாரும் கிருஷாந்தன், ஐங்கரன், சங்கவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2015) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு வட்டுக்கோட்டையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கறச்சி சங்கானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(9281) தகவல் : குடும்பத்தினர்

## தம்பு ஆறுமுகம்



வரணி இயற்றாலை வரணியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பு ஆறுமுகம் அவர்கள் 28.01.2015 புதன்கிழமை நேற்று காலமானார்.

அன்னார் காலம் சென்ற தம்பு ,சின்னப்பிள்ளை தம்பதிகளின் புத்திரனும் தெய்வாணப்பிள்ளையின் அன்புக்கணவரும், முருகேசு ,கணபதிப்பிள்ளை , இராமச்சந்திரன் ,சின்னத்தம்பி , சின்னம்மா ,இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரரும் ,தம்பிராசா ,சிவராசா ,விமலாதேவி அவர்களின் அன்புத்தந்தையும் ,தவமணி பரமேஸ்வரி ,தங்கராசா அன்பு மாமனாரும் ,சுரேகா (யாழ் பல்கலைக்கழக கலைப்பீட 3ம் வருடமாணவி) , பிரதீபன் ,சுபவர்ணா (யா.மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவி), வசிகா (யா.வரணி மத்திய கல்லூரி தரம் 6 மாணவி), அபிசன்(யா.வரணி மத்திய கல்லூரி தரம் 6 மாணவன்)அன்பு பேரனும் ஆவார்.

ஆன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.01.2015 வியாழக்கிழமை இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.00 மணி அளவில் வரணி இயற்றாலை ஊத்தல் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும் என்பதை உற்றார் .உறவினர் , நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

ஆ.சிவராசா
வரணி இயற்றாலை,வரணி .
தொடர்பு 077 4171319

தகவல்
குடும்பத்தினர்.

(C-9953)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org